


ஊற்று 3
துளி 2
NOV. DEC. 2000

இலங்கையின் மாதாந்த குடும்ப சஞ்சிகை - நவ. டிசம்பர் 2000 -30/-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தினகரன்

தினகரன் வாரமஞ்சரி | வாரமஞ்சரி | THINAKARAN VAARAMANJARI

உங்கள் வாரமஞ்சரி பல்வேறு பயன்மிக்க அம்சங்களைத்
தாங்கி வெளிவருகின்றது.
அதிகளவு செய்திகள், சமகால விடயதானங்கள்,
அர்த்தபுஷ்டியான கட்டுரைகள்...
தமிழ் பேசும் மக்களின் தேசியக் குரலான தினகரன் வாரமஞ்சரி
வாசகர்களுக்குப் புதிய தரிசனங்களைத் தருவதில் தொடர்ந்தும்
முன்னணியில் நிற்கின்றது.
வாசிப்புக் கலாசாரத்தை வளர்த்தெடுப்போம்!
நிறைவுபெற்ற மனிதர்களாக வாழ்ந்திடுவோம்!!
வாழ்வதற்காகவே வாசிப்போம்!!!
கற்பவை கற்று களிப்புடன் வாழ்வோம்
தினகரன் வாரமஞ்சரி சுமந்து வரும் இனிமையான
இலக்கியக் கட்டுரைகள், அதிரடி அரசியல் அலசல்கள்,
சிந்தை கவரும் சிறுகதைகள், தொடர்கதைகள்,
சினிமாச் செய்திகள். வைத்திய ஆலோசனைகள், ராசிபலன் மற்றும்
மங்கையர், சிறார்களுக்குரிய அனைத்து அம்சங்களும் தேசிய
ரீதியாக பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கின்றன.

## செந்தூரம்

தினகரன் வாரமஞ்சரியின் இலவச இணைப்பிதழ்
வயது, பால் வித்தியாசமின்றி உளமறிந்து சகலரையும்
அரவணைத்துச் செல்லும் தொலைக்காட்சிக் கையேட்டுடனான ஒரு
பல்சுவை விருந்து
சகல லேக்ஹவுஸ் முகவர்களிடமும்,
புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுது

# அமுதக் கடலில்...


அமுத வாசல் .................... 2
கடலின் கதாநாயகன் ............ 4
**கார்ட்டூன்:**
சமாதான ஆட்டம் ............ 5
**நெற்றிக்கண்** .................. 6
வாசலைத் தாண்டிய கடிதம் ........ 8
தேசிய அரசியலில்.... பேட்டி......... 9
**அரசியல்:** பேச்சுவார்த்தை
குஞ்சு பொரிக்காத கூழ்முட்டை... ...... 8
ஹொலிவூட் உலகம்... .............. 9
**வாய்மொழிக் கதை:**
அனன்ஸியும் மலைப்பாம்பும் ........ 14
நாடக உலகம்... ..................17
உம்பர்ட்டோ ஈகோ ............ 18
**காதல் தொடர்** .............. 20
**பேட்டி:**
எஸ். ராமகிருஷ்ணன் ............ 22
**கவிதை:**
நீங்கள் தூவிய மலர்கள் .......... 24
**சிறுகதை:**
எல்லாம் தெரிந்தவன் ............ 25
ஆத்ம தரிசனம் ................ 26
**அவளின் கதை** ................ 28
உலகம் பல தினுசு... ............ 32
**மக்களின் மனோபாவம்** .......... 33
**பிந்துனுவெவ படுகொலை** .......... 36
**சினிமா:**
நான் எடுக்கிற படங்கள்... ......... 42
**மருத்துவம்:**
பார்வை ஒன்றே போதுமே ......... 47
நூல் அறிமுகம் ................ 48




**உங்கள் ஆக்கங்கள் அபிப்பிராயங்களை**
**அமுது வரவேற்கிறது.**
**ஆசிரியர், 'அமுது'**
**இல: 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,**
**கொழும்பு 10.**

E-Mail: webmgr@sri.lanka.net




16

**பிந்துனுவெவ படுகொலை**



11

**குஞ்சு பொரிக்காத கூழ்முட்டை ஆகலாம்**



42

**நான் எடுக்கின்ற படங்கள் எல்லாமே...**



28

**அவளின் கதை...**



I - VIII

**எதற்கும் அடங்காத டெங்கு**

**8 பக்க இலவச இணைப்பு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒரு விடயம் தொடர்பாக 'அமுது'வின் நிலைப்பாடு எப்படி இருக்கிறது என வாசித்து கிரகித்த பின்னரே எனது முடிவினை நிலைப்படுத்திக் கொள்வேன். - முஹம்மத்**

அமுது வாசகர் அரங்கம்

அமுதே உன் அம்சங்கள் யாவும் அமுதம். குறிப்பாக அரசியலை அலசி ஆராய்ந்து தருவதும், நல்லதோர் வீணை செய்தே... பகுதியில் நாசூக்கா கவும் துல்லியமாகவும் கருத்தை வெளிப்படுத்தி கண்களைக் கவ ரும் வண்ண சஞ்சிகையாய் விள ங்குகின்றாய். சினிமா பக்கங்கள் எனக்குப் பிடிக்கவில்லை. அது அவசியமா?

**கு. நர்மதா, மாதகல்.**

அமுதின் சிறப்புக்களை விளக்க ஆயி ரம் பக்கங்களாவது வேண்டும். அவ்வ ளவு இனிமை. சுவை. அமுதின் பணி தொடர்ந்து, விழிப்புள்ள வாசகர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.

**ஏ. எல். முஹம்மட் றஸ்மி,**
**அட்டாளைச்சேனை.**

ஜெயகாந்தன் 'அமுது'க்குச் சொல்லிய கருத்துக்களைத்தான், பிறகு அவர் 'கணையாழி'யிலும், 'குமுத'த்திலும் வெளியிட்டு வருகிறார். அந்தவகையில் ஜெயகாந்தனின் மௌனத்தைக் கலை த்த பெருமை அமுதுக்கே செல்ல வேண் டும். இரு இதழ்களிலும் வெளிவந்த பேட்டியில் அவரது இன்றைய எண்ணங் கள் தீர்க்கமாக வெளிக்கொண்டுவரப்ப ட்டுள்ளது. சட்சட்டென கேள்விக் கொக் கிகளை மாட்டி பதில்களை உருவிய தயானந்தா பாராட்டுக்குரியவர்.

**எம். அன்னபூரணி,**
**யாழ்ப்பாணம்.**

மனிதப் படுகொலைகள் ஆரம்பித்து பல வருடங்கள் ஆனாலும் இந்த மிருக த்தனமான கொலைகளை மறக்க முடி யுமா? அதுவும் வணக்கத்தில் ஈடுபடும் போது இவ்வாறு நடைபெறும் என்று யார்தான் எண்ணியிருப்பார்கள். இச்சம் பவம் பற்றிய விடயங்கள் அனைத்தை யும் அமுது வெளியிட்டமை ஓர் படிப்பி னைதான். தெரியாதவர்களுக்கு இதன் பிறகாவது இதுபோன்ற கொலைகள் இடம்பெறாமல் பார்த்துக்கொள்ள வேண் டும் என்பதை கட்டுரை உணர்த்தியது. மேலும் அரசியல் கட்டுரைகள் பிரமா தம். அமுதுவில் புதுப்புது விடயங்களை எதிர்பார்க்கிறோம்.

**ஏ. சீ. எம். முஸம்மில்,**
**குளியாப்பிட்டிய.**



தமிழென்ற அமுது இனிமையாக தொடர என் ஆசிகளும் வாழ்த்துக்களும். மேலும் தற்போதைய நாட்டு நிலைமை காரண மாக யாழ்ப்பாணத்திற்கு அமுது வருவது தடையாகவுள்ளது. உடனுக்குடன் கிடை க்க ஆவன செய்ய மாட்டீர்களா?

**வ. சசிகுமார், சுன்னாகம்.**

அமுது மூன்றாவது ஆண்டில் காலடி எடுத்து வைத்துவிட்டதை நினைக்கும் போது மகிழ்ச்சியாக உள்ளது. இருந் தும் "அமுது" வெளிவருவது கடந்த சில மாதங்களாக பின்தள்ளப்பட்டுள்ளது. ஒக்டோபர் இதழ் நவம்பர் 10ம் திகதி யே கிடைத்தது. மாதத்தில் ஒருமுறை வெளிவரும் 'அமுது' ஏன் இவ்வளவு தாம தமாகிறது. மாதத்தில் முதல் வாரத்தில் வெளிவர உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். மேலும் ஒக்டோபர் இதழில் நல்லதோர் வீணையில் ஆசிரியரின் உணர்ச்சிபூர்வ மான கருத்து எம்மைக் கட்டியாளும் உணர்ச்சிகளுக்கெதிராக போராடத் தயாராக்கி உள்ளது. இன்னும் KING MAKER களான அமைச்சர்கள் ரவூப் ஹக்கீம், டக்ளஸ் தேவானந்தா, ஆறு முகம் தொண்டமான் நேர்காணல், அர சியின் விடைபெறுகை என்ற வரலாறு, எம் அனைவரையும் மீளாத் துயரில் ஆழ்த்திய பள்ளிவாசல் படுகொலைக்கு 10 வருடங்கள் என்று 8 பக்கங்களில் வெளிவந்த கட்டுரை எம்மை மீண்டும் கண்கலங்க வைத்துவிட்டது. வாழ்க தமிழ்... வளர்க அமுது!

**சியாஜ் - சியானா, நயாஜ் - றிஸ்வியா**
**றியாஜ் - டிலானி - றசான்,**
**கற்பிட்டி.**

பத்திரிகைத்துறையில் பொது நீரோட்டப் பத்திரிகைகள் (Mainstream Papers), மாற்றுப் பத்திரிகைகள் (Alternative Papers) என இரு பரிமாணங்கள் இரு க்க, 'அமுது' இலங்கையில் வெளியாகும் அனைத்து தமிழ் பத்திரிகைகளிலும் நல் லதொரு மாற்றுப்பத்திரிகையாக வளர்ச்சி கண்டு இருப்பது இலங்கையில் ஜனநா யகத்தினை உயிர்ப்பிப்பதற்கும், விளங் குவதற்கும் இன்றியமையாததாகவுள்ளது.

தனிப்பட்டரீதியில் இலங்கையில் வெளி யாகும் பெரும்பாலான தமிழ்ப் பத்திரி கைகளை வாசிப்பவனாக இருந்தாலும் குறிப்பிட்ட ஒரு விடயம் தொடர்பாக 'அமுது'வின் நிலைப்பாடு எப்படி இருக் கின்றது என வாசித்து கிரகித்த பின்னரே எனது முடிவினையும் தீர்மானத்தினையும் நிலைப்படுத்திக் கொள்வேன். அந்தளவு க்கு நடுநிலையில் (Nutral) நின்று யதா ர்த்தத்தையும் (Reality) உண்மையினை யும் உரித்துக் காட்டுவதாகவுள்ளது.

ஒக்டோபர் இதழில் நிமலராஜன் பற்றிய இருபக்க ஒப்புநோக்கும், அமுதையே விமர்சிக்கின்ற வாசலைத் தாண்டிய கடி தம், இன்னும் அரசியல் சமூக திரைப்பட விடயங்கள் என்னை மிகவும் கவர்ந்தன. பண்டாரவளை பிந்துனுவெவ நிகழ்வுபற்றி முழு விபரமும் அமுதில் வெளிவரும்வரை ஏனைய பத்திரிகைகளில் வாசித்தவற்றை 'ஸஸ்பென்ட்'ல் வைத்துக் கொண்டிருக் கின்றேன்.

**விரிவுரையாளர் எம். ஆர். முஹம்மத்,**
**கொழும்பு ரஜரட்ட பல்கலைக்கழகம்.**

தன்னையே தாக்கி வரும் கடிதங்களை யும் (சென்ற இதழ் வாசலைத் தாண்டிய கடிதம்) பிரசுரிக்கும் அமுதின் துணிச்ச லுக்கு பாராட்டுக்கள்.

**க. விஜயநிலா, வவுனியா.**

அமுதின் வரவை எதிர்பார்த்து எதிர்பார் த்து ஏமாற்றம். யாழுக்கு அமுது குறித்த காலத்தில் கிடைப்பதில்லை. சந்தாதார ராக இணைந்துவிட எண்ணம்.

**ஜே.எம்.ரி. றொட்றிக்கோ,**
**கொக்குவில்.**

நான் இலங்கையில் இருக்கும்போது அமுதை தொடர்ந்து படித்து வந்தேன். தற்போது குவைத் நாட்டில் வேலை. அமுதைப் பெற வழி சொல்வீர்களா?

**எம். கலைதாசன்,**
**அல்-ஜாஹ்ரா, குவைத்.**

அமுது வெளியாகிய காலத்திலிருந்து வாசித்து வருகிறேன். ஆவணி மாத அமுதைத் தவறிவிட்டேன். மற்றும், இந்தியாவுக்கு அமுது அனுப்ப நான் என்ன செய்ய வேண்டும்?

**எல். நிமலன், தெகிவளை.**

**(இதழின் பின்னட்டையிலுள்ள சந்தா விபரத்தைப் பார்த்து, அந்த முகவரிக்கு காசோலை களை அனுப்பிவையுங்கள். ஆ-ர்.)**

**ஜெயகாந்தனின் மௌனத்தைக் கலைத்த பெருமை அமுதுக்கே. பேட்டியில் அவர் எண்ணங்கள் தீர்க்கமாக வெளிக் கொண்டுவரப்பட்டுள்ளது. - அன்னபூரணி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின்
முதலாவது
தேசிய தமிழ் சஞ்சிகை

# நல்லதோர் வீணை செய்தே....





வெறுப்பு!

விருப்பைப் போலவே வெறுப்பும் எம்முள் இயல்பாகவே ஏற்படுகின்ற உள்ளுணர்ச்சியின் விளைவே. விலங்கினம் என்ற வகையில் தன் வாழ்க்கைப் போராட்டத்தில் தெரிவுகளைச் செய்துகொள்ள விருப்பு வெறுப்பு என்ற உணர்ச்சிகள் இயற்கையால் விளைந்தவை. எந்தக் கணமும் அபாயத்தை எதிர்பார்த்த விலங்கு வாழ்க்கையில் தன் வாழ்க்கைக்கு உகந்தவை, உகாதவை என்பவற்றைத் தெரிவுசெய்ய உடலியல் இயல்பாக விளைந்த இந்த விருப்பு வெறுப்புக்களின் தொடர்ச்சி மனிதனிலும் உண்டு. ஆனால் மனிதன் விலங்கிலிருந்து பிரிந்து, சமூக வாழ்க்கையை அமைத்து, நாகரீகங்களையும் சமூக ஒழுக்கங்களையும், விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்திகளையும் கண்டு சிந்தைபூர்வமான வாழ்வியல் செயற்பாட்டை எய்திவிட்டான். இந்நிலையில் இந்த விருப்பு வெறுப்புகளும் கூட இயல்பானதாக அன்றி சிந்தையால் உந்தப்படுகிறவையாக மாறிவிட்டன. எமது சிந்தையை ஆட்சிப்படுத்தும் எண்ணக் கருக்கள் எமது விருப்பு வெறுப்புக்களைத் தீர்மானிக்கின்றன. இவ்வெண்ணக் கருக்கள் தனி மனிதனை மட்டுமன்றி ஒரு சமூகத்தை முழுமையாக ஆட்சிப்படுத்தும் போது மேலும் வலுவான சமூக உணர்ச்சிகளாகக் கட்டமைக்கப்பட்டு விடுகின்றன. இவை நீதி, நியாயம், சரி, பிழை என்ற மதிப்பீடுகளுக்கு அப்பாற்பட்ட மன உணர்ச்சிகளாக வடிவம் பெற்றுவிடுகின்றன. இந்நிலையில் சுயாதீனமான சிந்தனையால் எமது செயற்பாடுகளை மறுபரிசீலனை செய்ய எமது மனம் இடம்கொடுப்பதில்லை. இதனாலேயே எம்மை இன வெறி, மொழி வெறி, மத வெறி, சாதி வெறி போன்ற உணர்ச்சிகள் பீடித்து, இனந்தெரியாத வெறுப்புணர்ச்சிகளை எமது இரத்தத்தில் ஊறிய இயல்பென விதைத்துவிடுகின்றன. இவை நாம் கொண்ட கருத்துக்கு மாற்றுக் கருத்தை ஆராயாமலே நிராகரிக்கும் இயந்திரப் பொம்மைகளாக எம்மை மாற்றி விடுகின்றன. நிராகரிப்பதென்பதுடன் நின்றுவிடாமல் மாற்றுக் கருத்தையே அழித்தொழிக்கும் வெறிச் செயற்பாட்டையும் எம்மில் உந்தி விடுகின்றன. பல்லினச் சமுதாயமொன்றில் மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்ற நியதியை மறுதலித்து ஒரு ஆதிக்கக் கருத்துக்கு அனைவரையும் அடிமைப்படுத்த முனையும் சர்வாதிகாரப் போக்குகள் இவ்வாறே தோன்றுகின்றன. இதனால் எம் அறிவை மீறி ஆதிக்கம் செலுத்தி, சமூக வியாபகம் பெற விழையும் இக்கருத்தாதிக்கங்களை மறுபரிசீலனைக்குட்படுத்தி எமது விருப்பு வெறுப்புக்களில் தாக்கம் செலுத்தவிடாதவாறு சுய சிந்தனையைக் காப்பாற்றிக்கொள்வது மிகமிக அவசியமானதாகும்.

- ஆ-ர்.



பக்க வடிவமைப்பு (கணனி):
ஜெரால்ட் எஸ். நடேசன்
எழுத்தமைப்பு (கணனி):
எஸ். எம். பிரேம்குமார்

அச்சிட்டு வெளியிடுவோர்:
அசோஸியேட்ட் நியூஸ் பேப்பர்ஸ்
ஒ:ப் சிலோன் லிமிடெட்
இல. 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலின் கதாநாயகன்

**சுறா மீன்கள் பற்றி...**

**✱ சுறாவை மல்லாக்கத் திருப்பிப் போட்டுவிட்டால் அவற்றால் அசையக்கூட முடியாது.**

**✱ மிகவும் குறைந்த அலையான மின் அதிர்வுகளைக் கூட எளிதில் கண்டுபிடித்து விடுகின்றன.**

**✱ பற்கள் அடிக்கடி உதிர்ந்து ஒரே வார காலத்தில் புதுப் பற்கள் முளைத்துவிடும். இது அதன் ஆயுள் பூராவும் நிகழ்ந்துவரும்.**

**✱ ஆழ்கடல் குகைகளில் சுறாக்கள் கூட்டம் கூட்டமாகப் போய் நீண்ட காலம், மாதக் கணக்கில்கூட தூங்கிக் கொண்டிருக்கும். அப்போது இவற்றை மனிதர்கள் எளிதில் வேட்டையாடுவார்கள். பல சுறாக்களுக்கு அதுவே மீளாத் துயிலாகி விடுகின்றன.**

**✱ 'ஜாஸ்' படத்தில் வில்லன்களான 3 செயற்கைச் சுறாக்களில் ஒன்றை இன்றும்கூட ஹாலிவூட் யூனிவர்சல் ஸ்டூடியோவில் வைத்திருக்கிறார்கள். படத்தில் அதன் பெயர் 'புரூஸ்'.**

***சுறா!***

கடலின் கதாநாயகன் மட்டுமல்ல திரைப்படங்களின் கதாநாயகனும்தான். 'ஜுராசிக் பார்க்' எல்லோரினதும் மனதைத் தொட்டது போல, அதைப் பற்றியே பேசிக்கொண்டது போல, 90 காலப்பகுதியில் ஜோஸ் - *Jaws* படத்தைப் பற்றி அதன் கதாநாயகன் சுறாவைப் பற்றித்தான் பேசிக் கொண்டார்கள். அதுவும் கொம்ப்யூட்டர் மாயாஜாலங்கள் சினிமாவில் கலக்காத - சினிமாவைக் கலக்காத காலமது.

விநாடிக்கு விநாடி பரபரப்பு. திடுக்கிடல், திகில், பயங்கரம் நிறைந்த திரைப்படம் அது.

சுறா மீன்கள் சிறுவர்களை விழுங்கிய கதைகள், கப்பலைப் புரட்டிய கதைகள் எல்லாம் வெறும் கதைகள்தான் - கற்பனைகள்தான்.

உண்மையில் சுறா பயங்கரமானதல்ல. சாதுவான மீன். மனிதன் அஞ்சக்கூடிய அளவுக்கு அது கொடூரமானதல்ல என்கிறார் சுமார் 26 வருட காலமாக சுறா மீன்களின் வாழ்க்கை பற்றி விரிவான ஆராய்ச்சிகளை நடத்தியுள்ள **யூஜின் கிளார்க்** என்ற பெண் ஆராய்ச்சியாளர்.

தனது 26 வருட ஆராய்ச்சியில் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் சுறா மீன் வலியச் சென்று தாக்கியதைக் காணவே கிடைக்கவில்லை என்று அடித்துச் சொல்கிறார்.

ஆனால் வெண்சுறா என்றொரு வகை உண்டு. அது இதற்கு விதிவிலக்கு. அதற்கு ஆத்திரமூட்டினாலோ அபாயம் ஏற்படக்கூடிய வகையில் நடந்து கொண்டாலோ அவை திருப்பித் தாக்க - பதிலடி கொடுக்க முற்படுகின்றன என்றும் அவர் கூறுகிறார்.

சுறாமீன்களில் 350 வகைகள் வரை உள்ளன. இதுவரை கண்டறியப்பட்டுள்ளபடி சுறாமீனின் மிகக் கூடிய எடை 13 தொன்களாகும். இது திமிங்கிலச் சுறா என்ற வகையைச் சார்ந்தது.

சுறா மீன்கள் ஏதோ மனிதனை தேடித் தேடி அவனைத் தின்று தீர்ப்பதிலேயே குறியாக அலைகிறது என்று நினைப்பதெல்லாம் தவறானது. மனிதரைக் கொன்று தின்ற சுறாக்களை விட சுறாக்களைக் கொன்று தின்ற மனிதர்களே அதிகம்.

சுறாக்களின் காதல் லீலைகளும் சுவாரஸ்யமானவை. முத்தம், அரவணைப்பு கிடையாது. மூர்க்கமும் வேகமும்தான் இருக்கும். சுறாக் கூட்டத்திலிருந்து ஒரு பெண் சுறா மட்டும் வெட்கத்தோடு பிரிந்து சென்றால் அவங்க லவ் பண்ணப் போறாங்க என்று அர்த்தம்.

உடனே அதன் ஜோடிச் சுறா அதனை நோக்கி நீந்திச் செல்லும். இரண்டும் ஒன்று சேர்ந்ததும் ஆண் சுறா ஆவேசத்தோடு பெண் சுறாவை பல இடங்களில் கடித்துக் குதறும். இப்படி மணிக்கணக்கில் கடித்துவிட்டு திரும்பினால் அது இனச்சேர்க்கையைத் திருப்திகரமாக முடித்துக் கொண்டது என்று அர்த்தம்.

இப்படி முத்தமழையால் பெண் சுறாக்களின் உடலில் ஏற்பட்ட காயங்கள் ஒரு மாத காலத்திற்குள் குணமாகிவிடும்.

இந்த காதல் கடிகளைத் தாங்கிக் கொள்வதற்கோ என்னவோ பெண் சுறாவின் தோல் ஆண் சுறாவின் தோலைவிட இரு மடங்கு தடிப்புள்ளதாயிருக்கும்.

சுறாக்களில் மூன்றிலொரு பங்குதான் முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பவை. மற்றவை நேரடியாகவே குட்டி போடுபவை. ஒரே பிரசவத்தில் 6 இலிருந்து 12 குட்டிகள் வரை போடுகின்றன. 'ஹாமர் ஷெட் சுறா', 'டைகர் சுறா' போன்றவை 40 குட்டிகள் கூட போடுகின்றன. ஒரு டைகர் சுறாவின் உடலுக்குள் 82 கருக்கள் கூட இருந்துள்ளன. குட்டிகள் பிறக்கும்போதே சுமார் இரண்டடி நீளத்தில் காணப்படும்.

குட்டி போடும் சுறாக்களின் கதை இது. இனி முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் சுறாக்கள் பற்றி....

இனச் சேர்க்கை நடந்த உடனேயே கரு உருவாவதில்லை. பெண் சுறாக்கள் ஒரு மாதம் வரை கூட விந்துத் துளிகளைப் பத்திரமாக பாதுகாத்து வைத்து, தன்து முட்டைகள் நல்ல வளர்ச்சியடைந்ததும் கருத்தரிப்பு நடைபெறும். சூலுற்ற முட்டைகளை தாய்ச் சுறா பாதுகாக்கும் விதமே அலாதி.

முட்டைகள் ஒவ்வொன்றும் ஒரு பாதுகாப்பான தோலுறைக்குள் இருக்கும். அதாவது ஒவ்வொரு முட்டையையும் தனித்தனி பைக்குள் சுற்றி வைத்ததுபோல இருக்கும். இந்த மேலுறையிலுள்ள நூல் போன்ற பகுதிகளால் முட்டைகளை ஆழ்கடலுக்குள் பவளப்பாறைக் கொடிகளில் வரிசையாக கட்டித் தொங்கவிட்டிருக்கும். அந்த உறைக்குள் கருவிலுள்ள குட்டிகளுக்குத் தேவையான உணவுப் பொருள் இருக்கும். முட்டை பொரித்து குட்டி வெளியே வருவதற்கு ஓராண்டு காலம் ஆகும். வெளியே வரும் போது அது கிட்டத்தட்ட மூன்றரை அடி நீளமிருக்கும்.

சுறாக்களும் மனிதனின் பேராசைக்கு இரையாகி மடிகின்றன.

உணவாக மட்டுமல்ல உரமாகவும் உயிர் காக்கும் மருந்தாகவும் எத்தனையோ வழிகளில் பயன்படுகின்றன.

27 அடி நீளமுள்ள ஒரு சுறாவின் எடை சராசரியாக 4 தொன். இதில் ஒரு தொன் இறைச்சி கிடைக்கும். பக்கவாட்டு செதில் போன்ற சதை வளர்ச்சிகளை (*Fins*) வெட்டி எடுத்து 'சூப்' செய்வதற்குப் பயன்படுத்துகிறார்கள்.

கல்லீரலிலிருந்து சுமார் 100 கலன் எண்ணெய் (சார்க் லிவர் ஒயில்) எடுக்கலாம்.

எலும்புக் கூட்டையும் ஒரு ராட்சத அடுப்பில் வைத்து பதப்படுத்தி உரமாகவும், கால்நடைகளுக்குத் தீனியாகவும் மாற்றி விடுகிறார்கள்.

ஈரலிலிருந்து கிடைக்கும் ஸ்குவலின் (*Squalene*) என்ற எண்ணெயை, மலச்சிக்கலிலிருந்து புற்றுநோய் வரை அநேகமான நோய்களுக்கு மருத்துவர்கள் சிபாரிசு செய்கிறார்கள்.

லிப்ஸ்டிக் போன்ற அலங்காரத்துக்கும் ஸ்குவலின் பயன்படுத்தப்படுகின்றது. தங்கள் காதலியின் இதழில் முத்தமிடும்போது உண்மையில் இந்த ஸ்குவலினுக்குத்தான் முத்தமிடுகிறோம் என்பது எத்தனை காதலர்களுக்குத் தெரியும்?

**- விசித்திரா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


1985 திம்பு ஆட்டம்


1987 ராஜீவ் - ஜே. ஆர் ஆட்டம்


1989 பிரபா - பிரேமா ஆட்டம்


1994 பிரபா - சந்திரிகா ஆட்டம்-1


2000 பிரபா - சந்திரிகா ஆட்டம்-2




# சமாதான ஆட்டம்

*Cartoonist*
*A. Anil Nishantha*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"அவசரகாலச் சட்டத்தை நீக்க வேண்டும்."**

**"யுத்தத்தை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டும்."**

இந்தக் கோரிக்கைகள் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியாலும், தமிழர் விடுதலைக்கூட்டணி உட்பட பல தமிழ் அரசியல் கட்சிகளாலும் அடிக்கடி அரசாங்கத்திடம் வலியுறுத்தப்பட்டு வருகின்றன.

இதே கோரிக்கைகளை பல மனித உரிமை அமைப்புகளும், அரச சார்பற்ற நிறுவனங்களும் கூட எழுப்பி வருகின்றன.


சில தீவிர இடதுசாரிக் குழுக்கள் இந்தக் கோரிக்கைகளுடன், "தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும்" என்ற கோஷத்தையும் சேர்த்து உரத்து ஒலிக்கின்றன. மற்றிரு சிறுபான்மை தேசிய இனங்களான முஸ்லிம் மக்களினதும் மலையகத் தமிழ் மக்களினதும் சுய நிர்ணய உரிமை பற்றி இவர்கள் மௌனம் சாதிப்பது ஏனோ தெரியவில்லை.

இக்கோரிக்கைகள் எல்லாம் மிகவும் நல்ல மாதிரியாகவே இருக்கின்றன. மேலெழுந்தவாரியாகப் பார்க்கையில் எல்லா மக்களும் இதை ஆதரிக்கின்றனர். ஆனால் சில மக்கள் இந்த விடயங்கள் குறித்தும் இவற்றின் நடைமுறைச் சாத்தியம் குறித்தும் ஆழமாக ஆராய முற்படுகின்றனர். அதன் விளைவாக சில எதிர்வாதங்களையும் முன்வைக்கின்றனர்.

இன்றுள்ள அரசியல். சூழ்நிலையில் இனப்பிரச்சினையும் அதனால் எழுந்த உள்நாட்டு யுத்தமும் மிகவும் தீவிரமாக இருக்கின்றன. ஒவ்வொரு மக்களின் மனநிலையும் ஒரு கொதிநிலையில் இருக்கின்றது. யுத்தத்தில் ஈடுபட்டிருப்போரும் அதன் தாக்கத்துக்குள்ளானோரும் அசாதாரண செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

ஒருபுறம் யுத்த நோக்கங்களுடன் நேரடியாக சம்பந்தப்பட்ட குண்டு வெடிப்புகள், கொலைகள், கொள்ளைகள், ஆட்கடத்தல்கள், தீவைப்பு, கற்பழிப்பு என்பன நடைபெறுகின்றன. மறுபுறம் யுத்தத்தின் பக்க விளைவாக வாழ்க்கை நெருக்கடி ஏற்பட்டு சமூக மேம்பாட்டு விழுமியங்கள் உடைந்து நொருங்கியுள்ளதால் தனி மனித குற்றச் செயல்கள் சமூகத்தில் அதிகரித்த வண்ணம் உள்ளன.

# தமிழ்க் கட்சிகளே! மூன்றாவது கண்ணைத் திறவுங்கள்!




நக்கீரன்

வடக்கு - கிழக்குப் பாரம்பரிய பிரதேசத்தின் தனித்துவத்துக்காக தீவிர போராட்டம் நடந்து கொண்டிருந்தாலும் இன்னொரு பக்கத்தில் நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல்லின மக்களும் அக்கம்பக்கமாக வாழும் சூழலும் அதிகரித்து வருகின்றது. இந்த நிலையில் யுத்த நடவடிக்கைகளின் தாக்கத்தினால் சில சந்தர்ப்பங்களில் இன வன்செயல்கள் உருவாக்கக்கூடிய சூழலும் உள்ளது.

இத்தகைய சூழலில். எந்தக் கட்சி ஆட்சி செய்யும் அரசாக இருந்தாலும் அவசரகாலச் சட்டத்தை நீக்கிவிட்டு ஆட்சி நடாத்த முடியுமா? அதேநேரம் இவர்கள் கோருவது போல ஒருதலைப்பட்சமாக அரசாங்கம் மட்டும் யுத்த நிறுத்தத்தைச் செய்ய முடியுமா?

அதற்காக அவசரகாலச் சட்டமும் யுத்தமும் எக்காலத்திலும் தொடர வேண்டும் என்பது இதன் அர்த்தம் அல்ல.

எனவே இந்நிலையை அர்த்தபுஷ்டியுள்ள வகையில் நிறுத்த வேண்டுமானால், சிறுபான்மை தேசிய இனங்களும் இந்நாட்டிற்கு சொந்தமான மக்கள் என்பதை முதலில் அரசு ஏற்கவேண்டும். அவர்களுக்கு பிரச்சினைகள் இருப்பதையும், அப்பிரச்சினைகளை கடந்த காலத்தில் பதவியிலிருந்த அரசுகள் தீர்க்கத் தவறியதுடன் மோசமாக்கியும் உள்ளன என்பதையும் புரிந்துகொண்டு, அவர்களது பிரச்சினைக்கு அவர்கள் ஏற்கக்கூடிய நீதியான அரசியல் தீர்வு ஒன்று காணப்பட வேண்டும்.

மேற்கூறிய விடயங்களைப் பொறுத்தவரையில் இன்றைய அரசு சாதகமான ஒரு நிலையை எடுத்து முன்னைய அரசுகளிலிருந்து தன்னை வேறுபடுத்திக் காட்டியுள்ளது. அரசு தானாகவே ஒரு தீர்வுத் திட்டத்தையும் முன்வைத்துள்ளது.

தீர்வுத் திட்டம் சிறுபான்மைத் தேசிய இனங்களின் முழுப் பிரச்சினைகளையும் தீர்க்கக் கூடியது அல்ல என்பது உண்மையே.

ஆனால் இலங்கை இனச் சிக்கல்களின் தன்மையைப் பொறுத்தவரையில் இது முன்னொருபோதுமில்லாத ஒரு முன்னேற்றமே. சிங்களப் பேரினவாதத்தின் சகல பிரிவுகளும் இதை வன்மையாக எதிர்க்கின்றன. இதை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதும் அமுல்படுத்துவதும் மிகவும் சிரமமான செயல். ஆனாலும் இதில் பின்வாங்கப் போவதில்லை என அரசு சூளுரைத்துள்ளமையானது நம்பிக்கை அளிப்பதாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விடயத்தில் தமிழ் மக்களின் நிலை மிகவும் தெளிவானது. அவர்கள் தனிநாட்டுக்கான போராட்டத்தில் பல அழிவுகளைச் சந்தித்து களைப்படைந்து நம்பிக்கை இழந்துவிட்டனர். அப்படி ஒரு தனி நாடு என்றாவது ஒரு நாள் கிடைத்தாலும் அந்த சுடுகாட்டில் மனிதர்கள் மட்டுமின்றி ஜனநாயக நடைமுறைகளும் மிஞ்சியிருக்கப் போவதில்லை என்பது அவர்களுக்குத் தெரியும்.

அதனால் அவர்கள் ஒரு பல்லின ஜனநாயக சமூகத்தில் தமது நிறைவான உரிமைகளுடன் வாழுவதையே விரும்புகின்றனர். கடந்த தேர்தலிலும் அவர்கள் இதையே வெளிப்படுத்தினர்.

தேர்தல் நடக்காத காலங்களிலும் நடைமுறையில் மக்கள் இதையே வெளிப்படுத்தினர். நாட்டைவிட்டு வெளியேற வசதியுள்ளவர்கள் போக, ஏனையோர் அரச நிர்வாகம் நிலவுகின்ற தென்னிலங்கைக்கும், இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கும் பெருமளவில் இடம்பெயர்ந்து செல்வது இதையே எடுத்துக் காட்டுகின்றது.

ஆனால் தமிழ் மக்கள் சார்பாக செயல்படுகின்ற த. வி. கூட்டணி மற்றும் தமிழ்க் கட்சிகளும் ஏனையோரும் மக்களின் இந்த நிலைப்பாட்டுக்கு எதிராகவே தொடர்ந்து செயல்படுகின்றனர். அவர்கள் கோருவது போல அவசரகாலச் சட்டத்தையும் யுத்தத்தையும் இல்லாதொழிப்பதானால் அவர்கள் நடைமுறையில் அர்த்தபுஷ்டியுடன் செயற்பட வேண்டும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை முன்னைய அரசுகள் ஏற்க மறுத்த ஒரு சூழ்நிலையில் தம்மால் முன்வைக்கப்பட்ட தனிநாட்டுக் கோரிக்கையை இன்றைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு பரிசீலனை செய்து கைவிட வேண்டும். தம்மால் தூண்டப்பட்டு அக்கோரிக்கையை அடைவதற்கு பயனில்லாத ஆயுத மோதலில் இறங்கியுள்ள சக்திகளை அரசியல் ரீதியாக சரியான பாதைக்கு இட்டுவர முயற்சிக்க வேண்டும்.

அரசினால் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தை உள்ள சுத்தியுடன் பரிசீலனை செய்து திருத்தங்களை முன்வைக்க வேண்டும். முழுமையான சுயநிர்ணய உரிமை வேண்டும் என்று சிறுபிள்ளைத்தனமாக அடம்பிடித்து தமிழ் மக்களின் எஞ்சிய வாழ்வையும் அழிக்காமல் யதார்த்தபூர்வமான முறையில் முழுத் தீர்வை நோக்கி முன்னேறும் வகையில் தீர்மானங்களை எடுக்க வேண்டும்.




**நக்கீரன்**

ஆனால் சில தமிழ்க் கட்சிகளும், இடதுசாரிக் குழுக்களும் தாம் என்ன செய்கின்றோம் என்பதை உணராமல், சிறுபான்மைத் தேசிய இனங்களுக்கு எவ்வித உரிமைகளும் வழங்கக்கூடாது என்று விடாப்பிடியாக நிற்கின்ற ஐ. தே. க. வுடனும் ஜே. வி. பி. யுடனும் சேர்ந்துகொண்டு தீர்வுத் திட்டத்தை எதிர்த்ததன் மூலம் தமது தலையில் தாமே மண்ணை அள்ளிப் போட்டுள்ளன.

தீர்வுத் திட்டத்தை எதிர்த்த தமிழ்க் கட்சிகளின் வேட்பாளர்களுக்கு தமது எதிர்ப்பை தமிழ் மக்கள் தேர்தலில் காட்டிய அதே வேளையில் சிங்களமக்களும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர். உதாரணமாக பாராளுமன்றத்தில் தீர்வுத்திட்ட நகலைக் கிழித்து வீசி தீ வைத்துக் கொளுத்திய அத்தனை ஐ. தே. க. உறுப்பினர்களும் நடந்து முடிந்த தேர்தலில் படுதோல்வியடைந்துள்ளனர்.

அதேபோல தீர்வுத் திட்டத்திற்கு எதிராக நின்ற வாசுதேவ நாணயக்கார, விக்கிரமபாகு கருணாரத்ன போன்ற தீவிர இடதுசாரித்துவம் பேசியவர்களும் பலத்த தோல்வியையே தழுவினர். சிஹல உறுமய, பூமிபுத்ர கட்சி என்பனவும் மக்களால் நிராகரிக்கப்பட்டன.

ஜே. வி. பி. தனது இனவாத அரசியலை மூடிமறைத்து சமதர்மம் பேசியதனாலும், இரண்டு பெரிய கட்சிகள் மீதும் மக்கள் - குறிப்பாக கிராமப்புற சிங்கள இளைஞர்கள் நம்பிக்கையிழந்து வருவதனாலும் சில ஆசனங்களைப் பெற்று மூன்றாவதாக வர முடிந்தது.

எனவே இந்த நிலைமைகளைக் கவனத்தில் எடுத்து, தமிழ்க்கட்சிகள் இனிமேல் வெற்றுக் கோஷங்களை எழுப்புவதைக் கைவிட வேண்டும்.

அவசரகாலச் சட்டத்தை வாபஸ் பெறு! யுத்தத்தை நிறுத்து! என வெறுமனே கோரஸ் பாடுவதை விடுத்து, "இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத் திட்டத்தை உடனடியாக முன்வைத்து அமுல்படுத்து" என்று ஆணித்தரமாக வலியுறுத்த வேண்டும்.

அதைவிடுத்து "தீர்வுத் திட்டங்கள் விடுதலைப் போராட்டத்தை சீர்குலைத்துவிடும்" என்ற பழைய தடத்தில் மீண்டும் மீண்டும் செல்ல நினைத்தால் தமிழ் மக்களும் அழிந்து இறுதியில் அவர்களை நம்பி அரசியல் பிழைப்பு நடத்தும் தமிழ்க்கட்சிகளும் அழிவது திண்ணம்.

இனியாவது மூன்றாவது கண்ணான ஞானக் கண்ணை தமிழ்க் கட்சிகள் திறப்பார்களா? •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசலைத் தாண்டிய கடிதங்கள்

## நல்வழி காட்ட யாருமில்லா தோட்டத் தொழிலாளர்கள்...

அமுதுவில் இடம்பெறும் அத்தனை விடயங்களும் அருமையானவை மட்டுமல்ல பயனுள்ளவை. சில ஆக்கங்கள் பாதுகாத்து வைக்குமளவுக்கு சிறந்ததாகவும் இருக்கின்றன. என்றாலும் மலையகம் சம்பந்தமான விடயங்கள் எதுவும் இல்லாதிருப்பது ஒரு குறையாகவே இருக்கிறது.

இன்று மலையத்தில் நடப்பது என்ன? எத்தனை தேர்தல்கள் வந்தாலும் யார் ஆட்சியமைத்தாலும் இன்னமும் பெரிதாக எந்த வசதி, வாய்ப்புகளும் இல்லாமல் இருட்டிலேயேதான் தோட்டத் தொழிலாளிகள் இருக்கிறார்கள். பந்தலும் கூத்தும் விடிந்தால்தான் தெரியும் என்பார்கள். தேர்தல் சமயத்தில் வாக்கு கேட்டு வாசல்படி வருபவர்கள் எல்லாம் முடிந்த பின்பு போய்விடுவதுடன் ஆபத்தான காலங்களில் ஆறுதல் சொல்லக் கூட வரமாட்டார்கள்.

இன்று விலைவாசி என்பது விஷம் போல ஏறி வருகின்றது. கைநிறைய சம்பளம் பெறுபவர்களே பை நிறைய பொருட்கள் வாங்க முடியாமல் தடுமாறும் நிலையில், பற்றாக்குறையாக வேதனம் பெறும் தோட்டத் தொழிலாளிகளால் வேதனையின்றி எங்ஙனம் காலம் கழிக்க முடியும். கிடைப்பதை வைத்து பத்து நாட்களுக்குக் கூட வயிறார உணவு உட்கொள்ளப் போதாது. இந்நிலையில் அத்தியாவசியமான வேறு தேவைகளுக்கு அவர்கள் என்னதான் செய்வார்கள்.

அரச, தனியார் நிறுவனங்களில் வேலை செய்பவர்களுக்கு காலத்துக்குக் காலம் வாழ்க்கைச் செலவு உயர்வுக்கேற்றாற் போல் சம்பள உயர்வு அளிக்கப்படும் போது அப்பாவி தோட்டத் தொழிலாளர்கள் பற்றி சற்றேனும் கவனம் எடுக்கப் படுவதில்லை. காலங்காலமாக நடந்து வரும் இந்த புறக்கணிப்பு சம்பந்தமாக யாருமே சிந்திப்பதுமில்லை., கவலை கொள்வதும் இல்லை. தோட்டப் பாய் முடைகிறவனுக்கு தூங்கப் பாய் இல்லை என்ற வாட்டத்துடன் இருக்கும் இவர்கள் நிலை பற்றிச் சிந்திப்பதற்கு வாக்குப் பெற்றுச் சென்றவர்களுக்குக் கூட நேரம் இருப்பதில்லை. இருக்கும் சிலரோ ஏதோ போனால் போகிறதென்று பாராளுமன்றத்தில் குரல் எழுப்புவதுடன் தங்கள் காரியம் முடிந்துவிட்டதாக நினைக்கிறார்கள்.

கோட்டையிலே பிறந்தாலும் போட்ட எழுத்து மாறாது என மனம் வெம்பிக் கிடக்கும் இவர்களுக்கு நல்வழிகாட்டப் போவது யாரென்பது அந்தக் கடவுளுக்கே வெளிச்சம்.

*- பாலா சங்குப்பிள்ளை,*
*அட்டன்.*

## நிமலன் மாஸ்டர் ஏன் 'அம்போ'வானார்?



மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் நிமலன் சௌந்தரநாயகம் சூட்டோடு, சூடாக பலரும் செய்தி வெளியிட்டார்கள். ஆனால், புலிகள்தான் கொலையைச் செய்தார்கள் எனத் தெரியவந்ததும், அந்தப் பலரும் வாலைச் சுருட்டிக் கவட்டுக்குள் வைத்துக் கொண்டோடும் தெருச் சொறிநாயைப் போலக் கேவலமாகப் பின்வாங்கிவிட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நிமலன் மாஸ்டருக்கு வாக்களித்தவர்கள், அவரிடமிருந்து பல சேவைகளை எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால், மக்களின் வாக்குகளால் வெற்றிபெற முடியாமற்போய், வாக்குகளைத் திரும்ப எண்ணும்போது, விருப்பு வாக்குகள் போடப்படாத வாக்காளர் அட்டைகளில் எல்லாம் கள்ளப் புள்ளடியிட்டு இருநூற்றுச்சொச்ச வாக்குகளால் ஒருவாறு ஒப்பேறிய தமிழ் அரசியல்வாதியும், புலிகளும் சேர்ந்து அவரைப் பகிரங்கமாகக் கொன்றுவிட்டார்கள்.

மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கும் குறிப்பாக வாழைச்சேனை மக்களுக்கும் இந்த உண்மை நன்றாகவே தெரியும். ஆனால், இதுபற்றி அவர்களின் உண்மையான உணர்வுகளையும் வேதனைகளையும் எழுதுவதற்கு முன்வராத தமிழ் ஊடகத்துறையினரை என்ன சொல்வது?

'இந்தக் கொலையைப் புலிகள் செய்யவில்லை' என்று சர்வநிச்சயமாகத் தெரிந்த அல்லது புலிகள் வெளிப்படையாக மறுப்புத் தெரிவித்த கொலைகளைப் பற்றி மட்டும்தான் மாங்கு மாங்கென்று எழுதுவோம் என்பதைக் கொள்கையாகவே வைத்திருக்கிறார்கள். தெருக்களில் இறங்கி ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தவும் தயார். எங்கள் நிமலன் மாஸ்டரைப் போல, செழியன் ஐயாவைப் போல பத்திரிகையாளர்களும் சமூக முன்னேற்றத்துக்குரியவர்களும் புலிகளால் அழித்தொழிக்கப்படும் போது அந்தக் கொலைகளை நாக்கைச் சப்புக்கொட்டிக் கொண்டு ரசிக்கும் மிருகங்களாகவே இந்தப் பத்திரிகையாளர்கள் மாறிவிடுகிறார்கள்.

தங்கள் மௌனத்தினால் இத்தகைய கொலைகளை அங்கீகரித்துக்கொண்டு, புலிகள் குறிப்புக் காட்டினால் மட்டும் விழுந்தடித்து எழுதவும், ஆர்ப்பாட்டம் பண்ணவும் முன்வருகிற இவர்களின் நாக்கைப் பிடுங்கிக் கேள்வி கேட்க நாட்டில் யாரும் இல்லையா?

*வாழைச்சேனையூரான்.*

## சுத்திச் சுத்திச் சுப்பற்ற கொல்லையிலா...

அமுதுவுக்கு வணக்கங்கள் ஆயிரம்!

அமுது சஞ்சிகையை மாதந்தோறும் தவறாது வாசித்து வருகிறேன். 'அத்தனையும் சிறப்பு' எனக் கூறமாட்டேன். மிகச் சிறப்பான விடயங்களும் உள்ளடங்கியுள்ளன. ஆனால் இனத் துரோகத் தூறல் மறைந்தபாடில்லை.

குறிப்பாக, முதலாவது தமிழ் தேசிய சஞ்சிகை என பெருமைப்படுத்திக் கூறிக் கொள்ளும் 'அமுது' செய்துகொள்ளும் மிகப் பிரதான பணி என்னவென்றால் - தமிழ் இனத்தை இழிவுபடுத்தவும் அதன் தனித்தன்மையை சிதைக்கவும் - ஏன் தேசியவிடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தவுமே... இந்த அமுது அரச ஊதுகுழலாக ஒலிப்பது மிகுந்த வேதனை தருகின்றது.

'சுத்திச் சுத்திச் சுப்பற்ற கொல்லையில்' என்பது போல எந்த அம்சம் பற்றி அரசியல் விமர்சனம் செய்ய முற்பட்டாலும் அது உடனே புலிகளிடம் சென்றுவிடும் - அது சரி, புலிகள் அரசியலிலோ இராணுவ ரீதியாலோ தமிழ் பேசும் மக்கள் சார்பாக முக்கியமானவர்கள் - ஆனால் அமுது புலிகள் பற்றிய எதிர்ப்பு விமர்சனத்தையே செய்கிறது.

மேலும் தமிழ் பேசும் மக்களாக இருக்கும் குழாமை தமிழர் - முஸ்லீம்கள் என பிரித்துப் பார்த்து கடந்தகால கசப்புணர்வுகளை பூதாகரமாகக் காட்டி மனங்களில் கிடக்கும் காயங்களை மேலும் மேலும் பெரிதாக்க 'அமுது' ஏன் முனைகின்றது?

உண்மையை உள்ளபடி உரைக்க வேண்டும். பிழைகளைத் திராணி கொண்ட மனதுடன் சுட்ட வேண்டும். அது அரசுடையதாக இருந்தாலென்ன, எதிர்க்கட்சியினுடையதாயிருந்தாலென்ன, புலிகளுடையதாயிருந்தாலென்ன? ஏன் கடவுளுடையதாகவிருந்தாலென்ன - நெற்றிக்கண் நேர்கொண்டு நோக்க வேண்டும். அப்போதுதான் அமுதின் அற்புத சுவையை தமிழ் பேசும் மக்களாகிய நாம் முழுதுமாய்ச் சுவைத்துக் கொள்ளலாம்.


எனவே எம் மொழிக்கும் இனத்துக்கும் துரோகமிழைக்காத வகையில் அமுது தன் பாதையை செப்பனிட வேண்டும். இனத்தை பிளவுபடுத்தாது மொழியை அழிவுபடுத்தாது அரவணைக்கும் குரலாக இந்த அமுது ஒலிப்பது எப்போது?

எதிர்பார்ப்புடன் தொடர்ந்து காத்திருக்கிறோம். காலத்துக்கேற்ப - மாற்றம் முக்கியமானதே - புரிந்து செயல்பட்டால் எரிந்து போகும் எம் சமூகம் ஏற்றம் பெறும்.

*- தமிழ்த்தாடி,*
*யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய அரசியலில் சிறுபான்மை இனங்கள்...



**இந்திய கல்விமானும், சமூகச் செயற் பாட்டாளருமான டாக்டர் அஸ்கார் அலி என்ஜினியர் 'அமுது'க்கு விசேட பேட்டி.**

இன்று இந்தியாவில் குறிப்பிடக்கூடிய பேரறிஞர்களில் அஸ்கார் அலியும் ஒருவர். சிவில் என்ஜினியர் பட்டதாரியான இவர், இஸ்லாமிய இறையியலிலும், இஸ்லாத்தின் மூல நூல்களான தவ்சிர், ஹாடித் என்பனவற்றிலும், இஸ்லாமிய சட்ட அமைப்பு முறைகளிலும் புலமை பெற்றவர். தென்னாசியாவிலும் இந்தியாவிலும் இன முரண்பாடு, சிறுபான்மையினர் பிரச்சினை, முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிம் பெண்கள் பிரச்சினை, இஸ்லாம் என்பன பற்றி எழுதிய 40 புத்தகங்கள் இதுவரை வெளிவந்துள்ளன.

'மதச் சார்பின்மையையும் சமூகத்தையும் கற்பதற்கான நிலையம்' (*Centre for study of society and Secularism*) என்ற அமைப்பையும் உருவாக்கி செயல்பட்டு வருகின்றார்.

பேசுவதுடனும் எழுதுவதுடனும் நின்றுவிடாது சலிப்படையாத செயற்பாட்டாளராகவும் இருக்கிறார். பழமைவாதிகளின் பலத்த எதிர்ப்பைச் சம்பாதித்துள்ளதுடன் பிற்போக்குவாதிகளின் உடல் ரீதியான தாக்குதல்களுக்கும் ஆளாகியுள்ளார். குறிப்பாக இவரது சொந்த போரா சமூகத்தின் பிற்போக்கு மதத் தலைமை ஆத்திரம் கொண்டு பல நடவடிக்கைகளை இவர் மீது எடுத்துள்ளது.

அண்மையில் கொழும்பு வந்திருந்த அஸ்கார் அலி அவர்கள், எமது "அமுது" பணிமனைக்கும் வருகை தந்து ஆசிரிய பீடத்தினருடன் நீண்ட நேரம் மனம் விட்டுக் கலந்துரையாடினார்.

அவர் வழங்கிய பேட்டியின் முக்கியமான சில பகுதிகளை கீழே தருகின்றோம்.

**அமுது:** *இந்தியாவில் உங்கள் அமைப்பு என்ன பணிகளைச் செய்து வருகின்றது?*

**அஸ்கார்:** மதச் சார்பின்மையையும், இன நல்லிணக்கத்தையும் சமூக அமைதியையும் உருவாக்குவதற்கான உணர்வுகளை மக்களுக்கு ஊட்டிவருகின்றோம்.

**அமுது:** *என்னென்ன வழிவகைகளைக் கையாள்கிறீர்கள்?*

**அஸ்கார்:** ஆய்வுகள், கலந்துரையாடல்கள், பட்டறைகள், கருத்தரங்குகள், வெளியீடுகள், போஸ்டர்கள், ஆவணப்படுத்தல், அறிக்கை வெளியீடுகள் என்பவற்றை மேற்கொள்கின்றோம். தவிரவும் இளைஞர் முகாம்கள், வீதி நாடகங்கள் என்பனவற்றையும் நடத்துகின்றோம். எமது வேலைகளில் நேரடிக் கள ஆய்வுகள் முக்கியமானவை. நூலகங்களை நடாத்துவதுடன் கிரமமான சஞ்சிகைகளையும் வெளியிடுகின்றோம். முடியுமான சந்தர்ப்பங்களில் எம்மையொத்த சகோதர ஸ்தாபனங்களுடன் சேர்ந்து கூட்டு நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றோம்.

**அமுது:** *உங்கள் நடவடிக்கைகள் பயனளித்துள்ளனவா?*

**அஸ்கார்:** நிச்சயமாக. வெறுமனே பேசிக் கொண்டிருக்காமல் செயலிலும் இறங்கும்போது அது பயனுள்ள தாக்கத்தை உண்டு பண்ணுகின்றது.

**அமுது:** *தற்போதய பாரதீய ஜனதாக் கட்சி தலைமையிலான அரசாங்கத்தின் கீழ் சிறுபான்மையினருக்குப் பல கொடுமைகள் இழைக்கப்படுவதாக செய்திகள் வெளிவருகின்றனவே?*

**அஸ்கார்:** அதில் உண்மையில்லாமலில்லை. பி. ஜே. பி.யின் அங்கத்துவ அமைப்புக்களான சங்பரிவார் சிவசேனா, ராஷ்ரிய சங் சேவக் போன்றவை தீவிர இந்து இனவெறி அமைப்புக்களாகும். ஆனால் அதன் இன்றைய ஆட்சியில் பல மதச்சார்பற்ற கட்சிகளும் பல்வேறு அரசியல் நோக்கங்களுக்காக இணைந்துள்ளன. தவிர, இந்தியா அடிப்படையில் மதச்சார்பற்ற ஒரு ஜனநாயக நாடு. அவ்வாறு இருப்பதையே பெரும்பான்மையான இந்திய மக்களும் விரும்புகின்றனர். அதனால் பி.ஜே.பி. ஒருபோதும் தனித்து ஆட்சிக்கு வர முடியாது. அதனால்தான் தற்பொழுதெல்லாம் தன்னை ஒரு மதச்சார்பற்ற கட்சி என பி. ஜே. பி. பிரசாரம் செய்வதுடன் அதன் தற்போதைய புதிய தலைவர் பங்காரு இலட்சுமணன் பி.ஜே.பி. யில் சேரும்படி முஸ்லிம்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

**அமுது:** *இந்திய இடதுசாரிகளின் இன்றைய - எதிர்கால நிலைமைகள் என்ன?*

**அஸ்கார்:** அவர்கள் (மார்க்ஸிஸ்ட்டுகள் தலைமையில்) மே. வங்கம், கேரளா, திரிபுரா ஆகிய மூன்று மாநிலங்களில் தொடர்ந்து ஆட்சியில் இருக்கிறார்கள். அவர்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதால் - குறிப்பாக நிலச் சீர்திருத்தத்தின் மூலம் நிலமற்ற ஏழை மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுள்ளதால் மக்கள் மத்தியில் செல்வாக்கு உள்ளது. உலக அனுபவத்திலிருந்து பாடம் படித்துக் கொண்டு காலத்துக்கேற்ற வகையில் கூடுதல் ஜனநாயகத் தன்மை வாய்ந்த சோஷலிச முறையை முன்வைத்தால் எதிர்கால இந்தியாவில் அவர்களுக்கு செல்வாக்கு வளரும்.

**அமுது:** *இலங்கையின் இனப் பிரச்சினை பற்றி உங்கள் கருத்து என்ன?*


**அஸ்கார்:** இலங்கையில் யுத்தம் நின்று சமாதானம் வரவேண்டும் என்பதே எனதும் எல்லோரினதும் பிரார்த்தனை. பெரும்பான்மை சிங்கள மக்கள் சிறுபான்மை தமிழ், முஸ்லிம் மக்களின் நியாயமான உரிமைகளை வழங்க முன்வர வேண்டும். அதே வேளையில் தமிழ் மக்கள் உரிமைக்கான தமது போராட்டத்தில் விடுதலைப் புலிகளால் செய்யப்படும் பயங்கரவாதச் செயல்களை தடுத்து நிறுத்த வேண்டும். அதே போல முஸ்லிம் மக்களும் தமக்கென இன ரீதியான கட்சிகளை அமைத்துச் செயல்படுவதைக் கைவிட வேண்டும். அனைத்து இனங்களைச் சேர்ந்த மக்களும் இணைந்து செயல்படுவதன் மூலமே தமது உரிமைகளைப் பெற்று தனித்துவங்களைப் பேண முடியும்.

**அமுது:** *சிறிது காலத்திற்கு முன்னர் உங்கள் மீது உடல் ரீதியாகத் தாக்குதல் நடந்த தாகச் செய்திகள் வந்தனவே? ஏன் செய்தார்கள்?*

**அஸ்கார்:** அது உண்மைதான். என்னை மட்டுமல்ல, எனது காரியாலயத்தையும் வீட்டையும் கூடத் தாக்கி சேதம் விளைவித்தார்கள். நான் போரா சமூகத்தவன். எங்கள் சமூகத்தின் மதத் தலைமை மிகவும் பிற்போக்கானது. ஒரு சிறு தொகையான கோடீஸ்வர போராக்களுடன் சேர்ந்து கொண்டு, சாதாரண போரா மக்களின் மீது அடிமைத்தனமான மதக் கட்டுப்பாடுகளை விதித்து, சுரண்டி, அடக்கி ஒடுக்கி வருகின்றனர். அவர்களது நடவடிக்கைகள் நாம் பின்பற்றும் குர்ஆனின் போதனைகளுக்கு நேரெதிரானவை.

அவர்களது இந்தச் செய்கைகளை தயவு தாட்சண்யமின்றி நான் அம்பலப்படுத்தி வருவதால் சாதாரண போரா மக்கள் விழிப்படைந்து வருகின்றனர். இதனால் ஆத்திரமுற்ற பிற்போக்கு மதத் தலைவர்கள் குண்டர்களை ஏவி திட்டமிட்ட முறையில் என் மீது தாக்குதல் நடாத்தியுள்ளனர். ஆனால் எத்தகைய மோசமான தாக்குதலாலும் என் பணிகளைத் தடுத்து நிறுத்திவிட முடியாது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இங்கிலாந்தைச் சேர்ந்தவரும், ஹொலிவூட் (முன்னாள்) ஜேம்ஸ் பொண்ட் நடிகருமான சீன் கொனரியும், அவர் மனைவி மிச்செலினாவும் விழாவுக்கு வருகையில்.



'ரம்போ' நாயகன் சில்வெஸ்டர் ஸ்ரலோனும் அவர் மனைவி ஜெனி.'.பர் .'.ப்ளேவினும்.



*Touchstone* நிறுவனத்தினரின் புதிய படமான *Unbreakable* ல் மீண்டும் இணைகிறார்கள் *The sixth sense* புகழ் இந்திய இயக்குனர் சியாமளனும், புரூஸ் வில்லிஸும். அருகே சியாமளன் மனைவி பாவ்னா.

## ஜோடி ஜோடியாக



முன்னாள் ஜேம்ஸ் பொண்ட் நடிகர் ரோஜர் மூரும் நடிகை சோ.'.பியா லோரனும்.

## ஹொலிவூட் உலகம்



நடிகர் ரொம் ஹாங்ஸும் அவரது காதல் மனைவியும் நடிகையுமான ரீட்டா வில்சனும்.



நவம்பர் 17ம் திகதி ஆனல்ட் ஸ்வார்ஸிநேகரின் மற்றுமொரு புதிய 'த்ரில்லர்' ஆரம்பம். விஞ்ஞான அதிரடிப் படங்களைத் தரும் ஆனல்ட், இம்முறை குளோனிங் முறையால் உருவாக்கப்பட்ட மனிதனாக வருகிறார். தன் அடையாளத்தை மீண்டும் தேடுபவராக, ஆபத்துக்களைச் சந்திக்கும் வேடம். படத்தின் பெயர் *The 6th Day*. மேலே படத்தில் ஆனல்டோடு அவர் மனைவி மரியா ஷிரிவர்.



நியூயோர்க் *Gentlemen* காலாண்டுச் சஞ்சிகையின் 50ம் ஆண்டு விழாவில் - ஹொலிவூட்டில் இன்று 160 கோடி ரூபா சம்பளமாக வாங்கும் நடிகை ஜூலியா ரொபேர்ட்ஸும் அவரது துணைவர் பெஞ்சமின் பிராட்டும்.



'டைட்டானிக்' புகழ் கேட் வின்ஸ்லெட்டும், கணவர் ஜிம் த்ரீப்லெட்டனும் செப்டெம்பரில் நடைபெற்ற வெனிஸ் திரைப்பட விழாவுக்கு வந்திருந்தபோது.




டைட்டானிக், த பீச் படங்களுக்குப் பிறகு ஹொலிவூட் இளம் நாயக நடிகர் லியனார்டோ டிகாப்ரியோ.



பரபரப்பாக பேசப்பட்ட சமீபத்திய ஹொலிவூட் படமான *The Cell* புகழ் நடிகையும் பொப் பாடகியுமான ஜெனி.'.பர் லோப்பஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியலரங்கம்



# எச்சரிக்கை அடைய வேண்டும் தமிழர்கள்

## பேச்சுவார்த்தை

# குஞ்சு பொரிக்காத கூழ்முட்டை ஆகலாம்

நோர்வேயின் விசேட தூதுவர் திரு. எரிக் சோல்கெய்ம் வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்திய பின், அரசு - புலிகள் இரு தரப்புப் பேச்சுவார்த்தை ஒன்றுக்கான சூழல் தோன்றியுள்ளதாக அனைத்துத் தரப்பினரும் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து சிஹல உறுமய, ஜே. வி. பி. போன்ற தீவிர சிங்களஇனவாத அமைப்புகள் வெளிப்படையாகவும், ஐ. தே. க. போன்றவை மறைமுகமாகவும் பேச்சுவார்த்தையைக் குழப்புவதற்கு பல்வேறு வழிமுறைகளை கையாளத் தொடங்கியுள்ளனர். அரசுடன் இணைந்துள்ள சில இனவாத சக்திகளுக்கும் இப்பேச்சுவார்த்தை முயற்சி கசப்பாகவே இருப்பது இரகசியமானதல்ல.

ஆனால் எது எப்படியிருந்த போதிலும், நோர்வேயின் அனுசரணையுடன் பேச்சுவார்த்தையொன்று நடைபெற்றே தீரும் என்ற கருத்து நாட்டு மக்களிடமும் சர்வதேச சமுதாயத்திடமும் உறுதியாகக் காணப்படுகின்றது.

எதுவுமே இல்லாத சூனிய நிலையிலிருந்து இது ஒரு முன்னேற்றகரமான நிலை என்பதில் சந்தேகம் இல்லை, தமிழர்கள் மகிழ்ச்சியடைய வேண்டும்தான்.

ஆனால்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பேச்சுவார்த்தையின் முடிவில் நல்ல முடிவு ஒன்று எட்டப்பட முடியுமா என்பதே சந்தேகத்துடன் மக்கள் கேட்கும் கேள்வியாகும்.

இச் சந்தேகத்திற்கான பிரதான காரணம் இரு தரப்பும் தங்களது தற்போதைய நிலையிலிருந்து எவ்வளவு தூரம் இறங்கி வருவார்கள் என்பதே. இலங்கை - இந்திய ஒப்பந்தம், பிரேமதாசா அரசுடனான பேச்சுவார்த்தை, பின்னர் சந்திரிகா அரசுடனான பேச்சுவார்த்தை ஆகிய சந்தர்ப்பங்களின்போது, விடுதலைப் புலிகள் நடந்துகொண்ட விதம் குறித்து, ஜனாதிபதி சந்திரிகா உட்பட தென்னிலங்கை அரசியல் சக்திகளுக்கு பாரிய அளவிலான சந்தேகங்கள் உண்டு.

குறிப்பாக, 1995 அக்டோபர் 30 வரை புலிகளால் குடாநாட்டில், சகல ஐசுவரியங்களுடனும் கட்டியெழுப்பியிருந்த யாழ்ப்பாண சாம்ராஜ்யத்தை சந்திரிகா அரசு தகர்த்து அதைக் கைப்பற்றிய நாளிலிருந்து பிரபாகரன் ஒரு அடிபட்ட புலியின் மூர்க்கத்தனத்தை விட அதிகமான பழி வாங்கும் எண்ணத்துடன் செயல்பட்டு



வருவது எல்லோரும் அறிந்த விடயம்.

ஐ.தே.க. அரசை விட சந்திரிகா அரசு மிக மிக மோசமானது என ஒவ்வொரு வருட மாவீரர்தின உரையிலும் கண்டனம் தெரிவித்து வரும் பிரபாகரன், ஜனாதிபதியைக் கொலை செய்யும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகின்றார். அவரது ஆத்திரத்தின் அளவைக் கண்டறிவதற்கு, அவர் ஆனையிறவு இராணுவத் தளத்தையும் தென்மராட்சியின் சில பகுதிகளையும் கைப்பற்றியது மட்டுமல்லாமல், இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாண மக்கள்மீது அவர் தொடர்ச்சியாக நடத்திவரும் எரிகணை வீச்சிலிருந்தும் புரிந்துகொள்ளலாம்.

நிலையை மறைக்க முயற்சிப்பதும் ரகசியமானதல்ல. உண்மையில் பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் முழுமையான ஆதிக்கத்தில் மூழ்கியுள்ள தென்னிலங்கை அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை ஜனாதிபதி சந்திரிகாவையும் ஒரு சில அரசியல்வாதிகளையும் தவிர ஏனையோர் பேச்சுவார்த்தையின் தோல்விக்கு பல்வேறு வழிகளில் முயற்சிப்பவர்களே.

மறுபக்கத்தில் தமிழ் மக்களின் கவலையும் சந்தேகமும் என்னவெனில் பேச்சுவார்த்தை தமது தரப்பால் (அதாவது புலிகளால்) குழப்பப்பட்டுவிடும் என்பதுதான். 'பாம்பின் கால் பாம்பறியும்' என்பது போல தமிழ் மக்களுக்குத்தான் புலிகளின் கடந்தகால அரசியல் செயற்பாடுகளும் இப்போதைய நிலைமையும் நன்கு

முறையும் அதை சரியான வழியில் எதிர்த்துப் போராடாத பாராளுமன்ற தமிழ்த் தலைமையின் வக்கற்ற தன்மையுமே புலிகள் உட்பட பல்வேறு ஆயுதம் தாங்கிய தமிழ் இளைஞர் இயக்கங்கள் உருவாகியமைக்குக் காரணமாகும்.

இந்த நூற்றாண்டில் பல நாடுகள் தமது தேசிய விடுதலையை ஆயுதப் போராட்டம் மூலமே பெற்றன என்பது வரலாறு. அந்த வெற்றிகளுக்கு பிரதான காரணம் அந்நாடுகளில் ஜனநாயக ரீதியிலமைந்த புரட்சிகர கூட்டுத் தலைமைகள் இருந்ததுடன் அந்தத்



**சிங்கள அரசுக்கெதிராகப் போராடுவதாகச் சொல்லிக் கொண்டே, ஜனாதிபதித் தேர்தலின் போதும், பொதுத் தேர்தலின்போதும் கிழக்கில் தமது கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள மக்களை ஐ.தே.க. வின் வெற்றிக்காக வாக்களிக்க புலிகள் கோரியமை 'யார் ஆட்சிக்கு வந்தாலும் பரவாயில்லை. சந்திரிகா தொலைந்தால் சரி' என்ற ஆதங்கத்தால் எழுந்த நிலை!**

இன்னொரு உதாரணம்: சிங்கள அரசுக்கெதிராகப் போராடுவதாகச் சொல்லிக் கொண்டே, ஜனாதிபதித் தேர்தலின் போதும், பொதுத் தேர்தலின்போதும் கிழக்கில் தமது கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள மக்களை ஐ.தே.க. வின் வெற்றிக்காக வாக்களிக்க புலிகள் கோரியமை 'யார் ஆட்சிக்கு வந்தாலும் பரவாயில்லை. சந்திரிகா தொலைந்தால் சரி' என்ற ஆதங்கத்தால் எழுந்த நிலை! அவ்வளவு தூரம் சந்திரிகா அரசு பிரபாகரனின் சாம்ராஜ்ய கனவுகளை உடைத்தெறிந்துள்ளது போலும்!

பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று சொன்னதும் எல்லோரும் சந்தேகக் கண் கொண்டு பார்க்கின்றனர்.

ஆனால் பேச்சுவார்த்தை புலிகளால் மட்டும்தான் குழப்பப்படும் என்று கருதும் தென்னிலங்கை அரசியல்வாதிகள் தமது தரப்பின் உண்மை

விளங்கும். பேச்சுவார்த்தையை எந்தத் தரப்பு குழப்பினாலும் அதனால் அரசோ, புலிகளோ நஷ்டமடையப் போவதில்லை என்பதும் தமிழ் மக்களுக்கும் இதர சிறுபான்மை இனங்களுக்குமே இதனால் பாரிய நஷ்டம் என்றும் மக்கள் நன்கறிவர்.

புலிகளின் தற்போதைய பேச்சுவார்த்தை நாடகம் என்ன நோக்கத்திற்காக பயன்படுத்தப் படப் போகின்றது என்பது அநேகமான தமிழ்மக்களுக்குத் தெரியும். புலிகள் இயக்கத்தின் அரசியல் தன்மை, தலைவரின் அபிலாஷை என்பனவற்றை நன்கு விளங்கிக்கொண்ட எவருக்கும் கடந்தகால பேச்சுவார்த்தைகளில் ஏன் அவர்கள் இடையிலே கழுத்தறுத்தார்கள் என்பதையும், தற்போதைய பேச்சுவார்த்தையில் என்ன செய்வார்கள் என்பதையும் விளங்கிக் கொள்வது ஒன்றும் சிரமமானதல்ல.

தமிழ் மக்கள் மீது சிங்கள இனவாத அரசுகள் தொடர்ச்சியாக நடத்திவந்த இன ஒடுக்கு

தலைமைகள் தமது நாட்டு மக்களின் எல்லாப் பிரிவினரையும் ஒரே அணியாகத் திரட்டியதும் தான் என்பதே உண்மை.

தமிழ்மக்கள் மத்தியிலும் ஆரம்பத்தில் இத்தகைய நிலையே இருந்தது. ஆனால் புலிகள் இந்நிலைமை தமது 'தனிக்காட்டு ராஜா' நோக்கத்துக்கு இடையூறானது எனக் கண்டு இதர இயக்கங்களை ஒன்றன்பின் ஒன்றாக அழித்தொழித்தனர். ஒருவகையிலும் மக்களை ஒரு அமைப்பாக இருக்கவிடாது உதிரிகளாக அவர்களை ஆக்கினர்.

தாம் மட்டுமே ஒரு இயக்கம். தம்மை ஆதரிப்பவர்கள் மட்டுமே தமிழ் மக்கள் என்ற வரையறையை வகுத்து மற்றையவர்கள் தண்டிக்கப்பட வேண்டிய துரோகிகள் எனவும் தீர்மானித்து நடைமுறைப்படுத்தினர். தமிழ் ஈழம் மட்டுமே தமது ஒரேயொரு தீர்வு என்றும் அறிவித்தனர். ஏனைய தீர்வுகளை தாம் ஒருபோதும் ஏற்கமாட்டோம் என்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவேதான் ஏனைய அமைப்புகளை முன்மொழிந்த அல்லது முன்மொழிய இருந்த, இலங்கை - இந்திய உடன்படிக்கை மற்றும் பிரேமதாசா, சந்திரிகா அரசுடனான பேச்சுவார்த்தைகளை அவர்கள் குழப்பினர். இந்தப் பின்னணியில்தான் இனிமேல் நடைபெறப் போகின்ற பேச்சுவார்த்தையையும் நாம் நோக்கவேண்டும்.

நோர்வே அனுசரணையுடன் தற்போது ஆரம்பமாகவுள்ள பேச்சுவார்த்தையும் ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்கள் ஏற்கக்கூடிய சுயாட்சி அமைப்பை உருவாக்கும் நோக்கத்தையே அடித்தளமாகக் கொண்டது.

முதலாவதாக, இத்தகைய தீர்வு புலிகளின் தனித் தமிழ்நாடு தீர்வுக்கு எதிரானது. இரண்டாவது அவ்வாறு ஒரு தீர்வு ஏற்பட்டால் அங்கு ஒரு ஜனநாயகத் தேர்தல் முறையும், பல கட்சி அரசியல் முறையும் தவிர்க்க முடியாமல் உருவாகும். அச் சூழ் நிலையில் புலிகள் ஆயுதங்களைக் களைய வேண்டிவரும்.

இருந்தும் கூட, தாம் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று நோர்வேயின் விசேட தூதுவரிடம் அவர்கள் குழைந்திருக்கக் காரணம் என்ன என்பதுதான் கேள்வி. இதற்கு ஒன்றல்ல பல காரணங்கள் உண்டென்றாலும், நோக்கம், தமது தனிநாடு போராட்டம் நியாயமானது என்பதை தமிழ் மக்களிடமும் சர்வதேச சமூகத்திடமும் நிலைநாட்டுவதே. இதற்கான காரணங்களை பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

☞ 17 வருட தொடர்ச்சியான யுத்தத்தினால் தமிழ்மக்கள் களைப்படைந்துவிட்டனர். அவர்கள் சந்தித்துள்ள அழிவுகள் வரலாறு காணாதது. அவர்களது இருப்பே கேள்விக்குறியாகிவிட்டது. புலிகளின் போராட்டத்தில் நம்பிக்கை இழந்துவிட்டனர். உரிமை கிடைக்காவிட்டாலும் சண்டை நின்றால் போதும் என்கிற நிலை.

☞ முன்னைய பேச்சுவார்த்தைகளை ஒருதலைப்பட்சமாக குழப்பியதனாலும், தீர்வு ஆலோசனைகளை தொடர்ந்தும் நிராகரிப்பதனாலும், 'சமாதான விரோதிகள்', 'யுத்த வெறியர்கள்' 'பயங்கரவாதிகள்' என உலக அரங்கில் புலிகளுக்கு ஏற்பட்டு வரும் அவப்பெயரும், சர்வதேச சமூகத்தின் அழுத்தமும், செல்வாக்கு வகிக்கும் மேற்கு நாடுகளில் இலங்



**இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் யுத்தத்தில் களைத்து விட்டனர். வெல்லமுடியாது என்றும் புரிந்துகொண்டு விட்டனர். பேச்சுவார்த்தை மூலம் ஒரு தீர்வுக்கு வருவதற்கு இதுவே பொருத்தமான சந்தர்ப்பம்.... தனிநாட்டுக்கான புலிகளின் போராட்டத்தை அமெரிக்க, ஐரோப்பிய சமூகம் ஏற்கவில்லை. யுத்தத்தை தொடர முயற்சித்தால் சர்வதேச சமூகம் எதிராகத் திரும்பும்.**

- பீட்டர் ஹெய்ன் -

கைத் தமிழர்கள் லட்சக்கணக்கில் வாழுவதால் அந்நாடுகளின் அழுத்தத்தை நிராகரிக்க முடியாத நிலை. இந்தியா, கனடா, அமெரிக்கா என்பவற்றின் வரிசையில் அடுத்ததாக பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி என்பனவும் புலிகளைத் தடைசெய்கின்ற சூழ்நிலை உருவாகி வருகின்றமை.

☞ அரசே முன்வந்து தீர்வு ஆலோசனைகளை முன்வைத்தமை. முதன்முதலாக தெரிவு செய்யப்பட்ட தமிழ்க் கட்சியொன்று (ஈ.பி.டி.பி) பொ.ஜ.மு. அரசில் அமைச்சரவை அந்தஸ்துடன் பங்குபற்றும் நிலை. வடக்கு கிழக்கிற்கு புலிகள் தவிர்ந்த ஏனைய சகல தமிழ்க் கட்சிகளையும் கொண்டு இடைக்கால நிர்வாக சபை ஒன்று அமைக்கப்படவிருக்கும் அறிவிப்பு. புலிகளை மீறி ஒரு ஜனநாயக தமிழ் அரசியல் தலைமை உருவாகும் சாத்தியப்பாடும், யுத்தத்தால் விரக்தியடைந்திருக்கும் தமிழ் மக்கள் அதை ஆதரிக்கக்கூடிய சூழல் உருவாகி வருகின்ற நிலைமையும்.

☞ வன்னியிலும் யாழ். குடாவிலும் வாழுகின்ற தமிழ் மக்கள் மத்தியில் புலிகளின் முடிவற்ற போருக்கெதிராகவும், சர்வாதிகார நடைமுறைகளுக்கெதிராகவும், மக்களுக்கு வருகின்ற உணவு, மருந்து, எரிபொருளை தமது தேவைக்கு எடுப்பதற்கெதிராகவும் வளர்ந்து வருகின்ற மக்களின் உணர்வு.

☞ தமது உறுப்பினர்களில் ஏற்பட்ட ஆள் பற்றாக்குறையும், எதிர்காலம் பற்றி நம்பிக்கையற்ற விரக்தியும, புதிதாக உறுப்பினர்கள் சேர மறுப்பதும், கிழக்கில் இராணுவத் திடம் சரணடையும் புலிகள் தொகையின் அதிகரிப்பும்.

இவ்வாறு பல காரணங்கள் இருந்தபோதிலும், பிரதான காரணம் வரலாற்றில் முதல் தடவையாக தமிழ்க் கட்சியொன்று ஸ்ரீல. சு. கட்சி தலைமையிலான அரசுடன் இணைந்திருப்பதும் சில காரியங்களை தமிழ் மக்களுக்காக செய்யக்கூடிய வகையில் அழுத்தம் பிரயோகிக்கும் நிலையில் இருப்பதும்தான்.

அதில் ஒன்றான வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாக சபை அமைந்தால் புலிகளின் தலைமைக்கு அது சவாலாகிவிடும். தமிழ்மக்களின் இன்றைய அவல வாழ்வில் இத்தகைய சபை ஒன்று பாரிய பணிகளைச் செய்ய முடியும்.

இத்தகைய ஒரு சூழல் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தினால், வடகிழக்கு மாகாண அரசு அமைந்தபோதும் உருவானது. அந்தச் சபையின் செயற்பாட்டால் ஈ.பி.ஆர்.எல்.எப். பும் இதர தமிழ்க் கட்சிகளும் பலம் பெற்று தமது இருப்பை இல்லாமல் செய்துவிடுவார்கள் என்ற ஒரே காரணத்திற்காகவே புலிகள் அன்றைய ஜனாதிபதி பிரேமதாசாவுடன் இணைந்து பெரும் பிரயத்தனத்தின் மத்தியில் தமிழ்மக்களுக்கு கிடைத்த அந்த வாய்ப்பை (மாகாண சபையை) அழித்து ஒழித்தனர்.

இன்றைய சூழலிலும் அத்தகைய ஒரு வாய்ப்பு உருவாவதைக் கண்டே பேச்சுவார்த்தை என்ற கபட நாடகத்தின் மூலம் அதை அழிக்கத் தீர்மானித்துள்ளனர்.

இதுதவிர, இன்னொன்றையும் புலிகள் எதிர்பார்க்கின்றனர். நோர்வே மத்தியஸ்தத்துடன் அரசு புலிகளுடன் பேசினால் மகாசங்கத்தினரும், ஜே.வி.பி., சிஹல உறுமய போன்ற சிங்கள தீவிர இனவாதசக்திகளும் அதை எதிர்த்துக் கிளர்ச்சி செய்வார்கள். ஐ.தே.க. வும் சந்திரிகா செல்வாக்குப் பெறுவதா என்ற காரணத்துக்காக சீர்குலைவு வேலைகளில் ஈடுபடும்.



ஒஸ்ட்ரியாவில் கனவான் ஒருவரிடமிருந்து சோடா வாங்கிக் குடிக்கும் வளர்ப்புக் கரடி.

ஐந்தறிவு உலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலைமையில் இனக் கலவரம் ஒன்று உருவாகலாம். அந்நிலை ஏற்பட்டால் அரசுக்குள் உள்ள இனவாத சக்திகளின் கை ஓங்கி அரசு பேச்சுவார்த்தையிலிருந்து பின்வாங்கக் கூடும்.

அச்சூழ்நிலையைப் பயன்படுத்தி, "முன்னைய அரசுகளைப் போலவே இந்த அரசும் ஏமாற்றிவிட்டது. இதையும் நம்ப முடியாது. எனவே தமிழர்களுக்கு உள்ள ஒரே வழி தொடர்ந்து தனிநாட்டுக்காகப் போராடுவதுதான்" என்ற பிரசாரத்தை உலக அரங்கில் முன்னெடுத்துச் சென்று யுத்தத்தை தொடர புலிகளுக்கு வசதியாக இருக்கும். ஏனெனில் பிரபாகரனோ அவரது இயக்கமோ தொடர்ச்சியான யுத்தம் அல்லது ஒரு தனி நாடு என்ற நிலையைத் தவிர்த்து வேறு எந்தச் சூழ்நிலையிலும் ஒரு நிமிடம் கூட உயிர்வாழ முடியாது.

எனவே இந்தச் சந்தர்ப்பத்தில் யுத்தத்தை எதிர்க்கும் சகல நாட்டு மக்களதும் கடமை இரண்டு தரப்பினரும் பேச்சுவார்த்தையை உடனடியாக ஆரம்பிக்கும்படி வலியுறுத்துவதே. அதுமட்டுமன்றி பேச்சுவார்த்தையில் இருதரப்பினரும் விசுவாசமாகவும் திறந்த மனதோடும் எப்படியும் தீர்வொன்றை அடைவதை நோக்காகவும் கொள்ள வேண்டும் என வலியுறுத்துவதும் அவசியம்.

குறிப்பாக சிங்கள மக்கள், வெளியேயும் உள்ளேயும் இருந்துவரும் இனவாத அழுத்தங்களுக்கு அடிபணியாமல் அரசு, நியாய முறையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண வலியுறுத்த வேண்டும். பேச்சுவார்த்தைக்கு உகந்த சூழ்நிலையின் பிரதான அம்சமாக சாதாரண தமிழ் மக்களின் மீது இராணுவம் அன்றாடம் நிகழ்த்திவரும் கைது, சித்திரவதை, கொலை, பாலியல், வல்லுறவு, சொத்தழிப்பு, சூறையாடல் என்பனவற்றை நிறுத்தக் கோர வேண்டும்.

மறு பக்கத்தில் புலிகளின் கடந்தகால ஏமாற்று வேலைகளால் உலகுக்கு ஏற்பட்டுள்ள சந்தேக நிலையை இப்பேச்சுவார்த்தையின்போது இல்லாமல் செய்ய புலிகளுக்கு, தமிழ்மக்கள் நிர்ப்பந்தம் கொடுக்க வேண்டும். புலிகளின் பேச்சுவார்த்தை நிகழ்ச்சி நிரலில் வழமைபோல அதை எப்படிக் குழப்புவது என்பதே முதலாவது அம்சமாக இருக்கும்.

நாளாந்தப் பிரச்சனைகள் என்று பேச்சுவார்த்தையை இழுத்தடித்து தமது களஞ்சியங்களை நிரப்புவதையும் தம்மை ஆசுவாசப்படுத்துவதையும் விடுத்து நிரந்தரத் தீர்வுக்கான உறுதியான பேச்சுவார்த்தைகளை நடத்துமாறு புலிகளுக்கு தமிழ் மக்கள் இடித்துரைக்க வேண்டும்.

பேச்சுவார்த்தையின் இரண்டாவது கட்டத்தில் ஏனைய தமிழ் கட்சிகளையும் இணைத்துப் பேச்சுவார்த்தை நடத்துவதின் மூலம் ஜனநாயக நடைமுறைக்குத் தாம் திரும்பி வருவதை புலிகள் நிரூபிக்க வேண்டும் என மக்கள் கோர வேண்டும்.

மிக முக்கியமான விடயமென்னவெனில் பேச்சுவார்த்தையில் தமது நம்பகத்தன்மையை புலிகள் வெளிக்காட்டும் வகையில் தமனத சொந்தத் தமிழ் மக்கள் மீது தாம் மேற்கொள்ளும் கைது, சித்திரவதை, மரண தண்டனை, கட்டாய இராணுவ உடலுழைப்புச் சேவை, சொத்துப் பறிமுதல் என்பனவற்றை உடனடியாக நிறுத்துவதுடன், முஸ்லிம் சிறுபான்மை இனத்தின் மீதும், சாதாரண சிங்களக் குடிமக்கள் மீதும் நடாத்தும் கொலைத் தாக்குதல்களையும் நிறுத்த வேண்டும்.

யத்த நிறுத்தம், ஆயுதங்களைக் களைதல் என்ற நடைமுறைச் சாத்தியமற்ற சூழலில் குறைந்தபட்சம் மேற்கூறிய நடைமுறைகளைத் தன்னும் இரு தரப்பும் கடைப்பிடித்து பேச்சுவார்த்தையில் தமது விசுவாசத்தைக் காட்ட வேண்டும். அதன் மூலமே நாட்டு மக்களும் சர்வதேச சமூகமும் பேச்சுவார்த்தையில் நம்பிக்கை வைப்பர் என எதிர்பார்க்கலாம்.

இல்லையெனில் குஞ்சு பொரிக்காத கூழ் முட்டையாகவே இந்தப் பேச்சுவார்த்தையும் முடிந்தாலும் ஆச்சரியமில்லை.

ஏனெனில் நமது வரலாற்று அனுபவத்தின்படி, தற்போதைய சூழ்நிலையில் அதற்கான வாய்ப்புக்களே அதிகமாக உள்ளன. •

## ஐந்தறிவு உலகம்



கின்னஸ் புத்தகத்தில் உலகின் மிகப்பெரிய முதலையாகப் பதிவு செய்யப்பட்டுள்ள முதலை இது. ஆறு மீட்டர் நீளமும் 1,114 கிலோ எடையும் கொண்டது. தாய்லாந்திலுள்ள சமுத் பிரகார்ன் முதலைப் பண்ணையில் தனது 28 வது பிறந்தநாளைக் கொண்டாடுமுகமாக ஒரு முழுக் கோழியை உள்ளே தள்ளுகிறார்.

தந்திரசாலிக் கிழவனான க்வாகு அனன்ஸி பேராசை பிடித்த மலைப்பாம்பினை எவ்வாறு பிடித்தான் என்பதை இப்போது கேளுங்கள் குழந்தைகளே!

ஒரு காலத்திலே ஆபிரிக்காவின் நைஜர் நதிக்கரையின் மீதுள்ள அஸாண்டி பிரதேசத்தில் ஒரு கிராமம் இருந்தது. அந்தோ பரிதாபம், அக்கிராமத்தின் மீது சோகத்தின் கருமேகம் கவிந்திருந்தது. ஆற்றங்கரையில் வசித்த ராட்சத மலைப்பாம்பு அந்தப் பக்கம் வருவோரையெல்லாம் விழுங்கியது. மரத்திலிருந்து குழந்தைகளின் மீது விழுந்து ஒரே வாயில் விழுங்கிவிடும். அல்லது ஆற்றில் நீரருந்த வரும் கிடாய், ஆடு, பசுக்களைத் தின்றுவிடும்.

அம்மக்கள் வருந்தினர். அவர்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. கடைசியாக மூத்தோரின் அவை கூட்டப்பட்டு, வானத்து தேவன் 'நியமே'யிடம் ஒரு தூதுவனை அனுப்புவதென முடிவெடுக்கப்பட்டது. நிச்சயமாக அவர் அவர்கள் மீது இரக்கம் கொண்டு தீவினை கொண்ட பாம்பினைத் துரத்திவிடுவார் என எண்ணினர்.

வானதேவன் அவர்கள் குறையைச் செவிமடுத்ததும் தலையைச் சொறிந்தபடி சிந்தனையில் ஆழ்ந்துவிட்டார்.

"ச்சோ, ச்சோ, ச்சோ. அம்மலைப்பாம்பும் என்னுடைய பிள்ளைதான். அவனது வெக்கங்கெட்ட காரியங்களுக்காக நான் வருந்தினாலும் இதில் எல்லாம் நீதி சொல்ல ஏலாது. ஆனால் பக்கத்து கிராமமொன்றிலிருக்கும் க்வாகு அனன்ஸி என்னும் மனிதன் தன்னைப் பெரிய புத்திசாலியாகக் கருதிக்கொள்கிறான். அவனது பெருமைகளைக் கேட்டுக் கேட்டு நான் அலுத்துவிட்டேன். அவனிடம் சென்று இவ்வாறு கூறுங்கள்:

'அவன் அம்மலைப்பாம்பை துரத்தியடித்துவிட்டானென்றால் அவனைப் புத்திசாலியாக ஏற்று அவனுக்கு மேலும் ஞானத்தை வழங்குவேன். தோற்றுப் போனால் தண்டிக்கப்படுவான்' என்று தெரிவியுங்கள்".

வானதேவன் வார்த்தைகளுடன் கிராமம் சென்ற தூதுவன், பின்னர் சிலந்தி மனிதனான க்வாகு அனன்ஸியைப் பார்க்கப் போனான். எலும்பும்தோலுமாயிருந்த அவன் தன் மனைவியுடன் குடிசையில் சாப்பிட்டுக் கொண்டிருந்ததைக் கண்டான். தன் ஞானத்தின் மீது வானதேவன் நிழல் கவிந்திருப்பதைக் கேட்டதும் உரத்துக் கொக்கரித்தான்.

"ஓ, ஹி ஹி. நான் எவ்வளவு புத்திசாலி என்பதை ஒவ்வொருவரும் அறிவார்கள். நிச்சயமாக உனக்கு உதவுகிறேன். சரி. அம்மலைப்பாம்பு எவ்வளவு பெரியது? என் குடிசையைவிடவும் பெரியதா?"


"மிக மிகப் பெரியது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைப் பருவத்தில் நாம் கேட்ட தேவதைக் கதைகள், நீதிக் கதைகள், வாய்மொழிக் கதைகளினாலேயே நாம் உருவாக்கப்பட்டிருக்கிறோம். குழந்தைகளின் அக உலகைப் பிரதிபலிக்கும் மாயக் கண்ணாடியாக, நேரிடையாக மனித நனவிலியுடன் பேசுபவையாக அவை உள்ளன. வேடிக்கை, விநோதம், அதிசயம், ஆனந்தம், ஏக்கம், பரிதாபம் எனப் பல்வேறு உணர்வுகளும் நெகிழ்வுகளுமாக நமக்குள் ஊடுருவி இறங்குபவை இந்த வாய்மொழிக் கதைகள்.

காலத்தின் ஓட்டத்தில் சிலவற்றை நினைவு கூரவும், சிலவற்றை அசைபோடவும், சிலவற்றை வேறு கோணத்தில் சொல்லிப் பார்க்கவும், இன்னும் புதிராயிருப்பவற்றை விளங்கிக் கொள்ளவும், சமுதாயமாகும் கட்டத்தில் போட்டுக் கொள்ளும் நெறிமுறைகள் சரியானவையா என்று விசாரணை செய்யவும், ஆதிநிலைக்குப் போய்வரவும்.... மனிதனுக்கிருந்த ஒரே களன் என்ற வகையில் வாய்மொழிக் கதைகளின் முக்கியத்துவம் அளப்பரியது.

சர்வதேச வாய்மொழிக் கதைகள் சிலவற்றை மொழியாக்கம் செய்து தொகுப்பாகத் தந்திருக்கிறார் சா. தேவதாஸ். அவரது 'கதாசாகரம்' தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது இந்த ஆபிரிக்கக் கதை.



# அனன்ஸியும் மலைப்பாம்பும்

"தலைவனின் குடிசையை விடவுமா பெரியது?"

"மிக மிக மிகப் பெரியது"

"ஆறு குடிசைகளை விடவுமா பெரியது?"

"அது நீளம்தான். அத்துடன் கொழுத்தும் வலுத்தும் இருக்குமே"

க்வாகு அனன்ஸி மிகப் பெரியதொரு புன்னகை செய்தான்.

"நன்றாகக் கவனி. நாளைக் காலையில் பொழுது விடிந்ததுமே தூள் செய்யப்பட்ட யாம் ஒரு கிண்ணம், கொஞ்சம் முட்டைகள், பெரிய கலயத்தில் மது நிரப்பி உங்கள் ஜனங்கள் ஆற்றங்கரைக்குக் கொண்டுவர வேண்டும். கொடிய பாம்பை நான் கவனித்துக் கொள்கிறேன். அப்பாம்பு வயதான க்வாகுவை வீழ்த்திவிட்டால் நீங்கள் எனக்கு சம்பிரதாயமான இறுதி ஊர்வலம் எடுக்க வேண்டும். உங்களது பெண்டிர் தலையை மொட்டையடித்துக் கொள்ளவேண்டும். நல்ல துணியில் போர்த்த வேண்டும். என் விரலில் பொன் மோதிரம் போட வேண்டும்.

சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அடுத்த நாள் காலை புலர்ந்ததுமே க்வாகு தன் கோடரியுடன் காட்டுக்குள் போனான். நேரிதான இளம் மரக்கன்றையும் சில கொடிகளையும் கயிறுகள் செய்வதற்காக வெட்டினான். அவற்றைச் சுமக்க தனது பலமான பிள்ளைகளைத் துணைக்கழைத்து அவற்றை ஆற்றுக்கு எடுத்துப் போனான். அங்கே ஈச்சமரத்தின் கீழே யாம் தூளும் முட்டைகளும் கள் கலயமும் ஏற்கனவே காத்திருந்தன. அவற்றை மலைப்பாம்பு விழுங்குவதற்குள் போய் விட வேண்டும் என்று கிராமத்தவர் ஓடிப் போயிருந்தனர்.

தொலைதூரத்தில் இறுதி ஊர்வலத்திற்கான முரசொலி கேட்டது. அவன் தனக்குத்தானே புன்னகைத்தான். மலைப்பாம்பு நிச்சயம் தன்னை விழுங்கிவிடுமென்று ஊரவர்கள் இறுதி ஊர்வலப் பாடலைப் பாடுகிறார்கள்.

க்வாகு அனன்ஸியின் அப்போதைய காரியங்களைப் பார்க்க ஊர்மக்களில் யாராவது நின்றிருந்தால் அப்படியே திகைத்துப் போயிருப்பார்கள்.

அனன்ஸி முதலில் மலைப்பாம்பின் பொந்துக்கு மேலாக உள்ள மரக்கட்டையில் ஏறி அமர்ந்து கொண்டான். அப்புறம் தன்னுடனேயே பேசிக்கொள்ளத் தொடங்கினான்.

அவனது ஒரு குரல் உயர்ந்தும் புகழ்ந்தும் பேசியது, இன்னொன்று தாழ்ந்தும் இகழ்ந்தும் பேசியது. இக்குரல்கள் மோதிக் கொள்வதை மலைப்பாம்பு கேட்டது.

"அது மிகமிகப் பெரியது. வலுவானது, அழகானது என்கிறேன். கிராமத்தவர் ஏன் அதனை வெறுக்கின்றனர் என்பது எனக்குப் புரியவில்லை. அது மிகவும் நல்லது" என்றது உயர்ந்த குரல்.

'நீ பொய் சொல்கிறாய். அது குட்டையானது. எலும்பும் தோலுமானது. மிக மிக அருவருப்பானது. மக்கள் அதனை வெறுப்பதில் ஆச்சரியமே இல்லை. அவர்களது கால்நடைகளையும் குழந்தைகளையும் திருடித் தின்கிறது அது" என்றது தாழ்ந்த குரல்.

"இல்லவே இல்லை. அம்மலைப்பாம்பு என் சிநேகிதன். மிகவும் நல்லது. பசியெடுப்பது அதன் தவறல்ல. அற்பமான இந்த அஸாண்டி மக்கள் அதற்கு யாம் தூளும் முட்டைகளும் கலயத்தில் கள்ளும் தந்துவிட்டால் அது திருடப்போவதில்லை"

"அஸாண்டியர் அற்பமானவரென்று யார் கூறியது? நீ கூறியதை வாபஸ் பெற வைக்கிறேன் பார்" -தாழ்ந்த குரல் சினந்தது.

உடனே தட தடவென்ற சப்தத்தையும் விரைந்தோடும் பாதங்களையும் மலைப்பாம்பால் நன்றாகக் கேட்கமுடிந்தது. உயர்ந்த குரல் கேட்கவே இல்லை. குறுகுறுப்பால், தன்னைப் பற்றி யார் புகழ்ந்து பேசியது என்று அறியும் பொருட்டு மெல்ல தலையை எட்டிப் பார்த்தது.

நீரிலிருந்து எழும்பிய அது, காலை நேர ஒளியில் தன் சுருள் மடிப்புகள் தகிக்க, ஆற்றங்கரையில் வளைந்து வளைந்து வந்தது. உண்மையிலேயே அது அச்சமூட்டுவதாயிருந்தது. க்வாகு அனன்ஸி கூட பீதியில் பல்லைக் கடித்துக் கொண்டான். ஆனால் வெளிக்காட்டிக்கொள்ளவில்லை. பாம்பினை சகோதரனைப் போல வரவேற்றான்.

"மலைப்பாம்பு சகோதரனே, வந்ததற்காக நன்றி. நன்றி. நான் சொன்னது போன்றே இருக்கிறாய். அம்முட்டாள் மனிதனை நான் துரத்தியதைக் கேட்டாயா? அவன் பறந்தோடுவதை நீ பார்த்திருக்க வேண்டும். சரி, நான் கொண்டுவந்துள்ள உணவை புசி."

மிகவும் பசித்திருந்த மலைப்பாம்பு சந்தோஷமாக உண்டது. யாம் தூள், முட்டைகள் கலயமும் காலியானபோது, க்வாகு அனன்ஸிக்கு நன்றி தெரிவித்தது. புகழ்ச்சி மொழிகளைச் செவிமடுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது நேரம் கழித்து க்வாகு அனன்ஸி மலைப்பாம்பிடம் வேண்டினான்.

"மலைப்பாம்பு சகோதரா, நீ எனக்கு சிறிது உதவ வேண்டும். உனது நீளத்தைப் பற்றி அம்முட்டாள் மனிதனிடம் விவாதித்தேன். தமது குடிசையைக் கூட சுற்றிவர இயலாத நீளம் கொண்டதுதான் மலைப்பாம்பு என்றான். ஆறு குடிசைகளை ஒன்று சேர்த்தால் வரக்கூடிய நீளம் உன்னுடையது என்றேன். அவன் நம்பவில்லை. 'அளந்து பார்த்தாயா?' என்று கேட்டான். இம்மரக்கட்டையால் உன்னை அளந்து பார்க்கட்டுமா?"

பாம்பு இப்போது தூக்கக் கலக்கமாயும் நல்மனநிலையிலும் இருந்ததால் அவனது வேண்டுகோளுக்கு இசைந்தது. க்வாகு போட்டு வைத்திருந்த மரத்தையொட்டி மலைப்பாம்பு நீண்டு படுத்தது. தலை ஒரு பக்கத்தில் எட்டி இருக்குமளவுக்கு அது நீண்டதாயிருந்தது.

"நல்லது நண்பனே, எவ்வளவு நீளம் இருக்கிறேன்?"

"அவசரப்படாதே, அஸாண்டியர் பாணியில் உன்னை அளக்க வேண்டும். இக்கொடிகளால் இம்மரத்தில் உன்னைப் பிணைக்க வேண்டும்".

கொடிகளால் அதன் உடலை தலையிலிருந்து வால் வரையிலும் மரத்துடன் இறுகக் கட்டினான். கட்டும்போதே, தந்திரமாக, அளவீட்டு எண்களை முணு முணுத்துக்கொண்டு மேலும் கீழுமாக போய் வந்தான். சீக்கிரத்திலேயே ராட்சத மலைப்பாம்பு கட்டுண்டது.

க்வாகு தன் கோடரியை எடுத்து வந்தான். பாம்பு இப்போது பீதியுற்றது,

"வா வா நண்பனே, அவிழ்த்துவிடு. இக்கயிறுகள் இறுக்குகின்றன. சூரியன் வேறு வாட்டியெடுக்கிறது. இப்போது என்னை அளவெடுத்திருப்பாய்"

"உன்னை அளந்துவிட்டேன். சரிதான்"

பாம்பிடம் கூறிவிட்டுத் திரும்பிய க்வாகு அனன்ஸி, கிராமத்தினரை கூச்சலிட்டு வரவழைத்தான்.

அவர்களால் நம்பவே முடியவில்லை. மாபெரும் மலைப்பாம்பு வறுபடும் கோழி போல பிடிபட்டுள்ளது. கட்டுண்டு கிடந்த மலைப்பாம்பைச் சுற்றி அவர்கள் வாய்திறந்தபடி நிற்கையில் வால் பக்கமாகச் சென்று க்வாகு சட்டென ஒரு போடு கோடரியால் போட்டான். வால் துண்டிக்கப்பட்டது.

"முதலில் நீ திருடிய குழந்தைக்காக இது"

ஸ்விஸ், ஸ்விஸ், ஸ்விஸ்....

கோடரி மீண்டும் மீண்டும் பதம் பார்க்க மலைப்பாம்பு துண்டுதுண்டுகளாகப் போய்க் கொண்டிருந்தது. பாதி உடல்தான் இப்போது எஞ்சியிருந்தது.

"நீ தின்ற பன்றிக்காக இது. ஆட்டுக்காக இது. பசுவுக்காக இது. கிடாய்க்காக இது. ஆண்கள், பெண்களுக்காக இது...."




ஒவ்வொரு துண்டு விழுந்தபோதும் கிராமத்தினர் ஆரவாரித்தனர். விரைவிலேயே கோடரியால் பாம்பின் தலையினையும் க்வாகு துண்டித்துப் போட்டான்.

நன்றி கொண்ட கிராமத்தினர் க்வாகுவைப் பாராட்டி வெகுமதிகள் கொடுத்தனர். வெகுமதியைப் பெற்றுக்கொண்ட சிலந்தி மனிதனான க்வாகு அனன்ஸி, வானத்திற்குச் செல்ல நூலேணி பின்னினான்.

"ஓ நியமே, எவ்வளவு புத்திசாலி என இப்போது நிரூபணம் செய்திருக்கிறேன் எனது வெகுமதியைத் தருக" என்றான்.

வானதேவன் நியமே புன்னகைத்தான். தனது அரசவையினரைக் கூட்டி, அவர்களிடம் உரத்துக் கூறினான்.

"இத்தனை உதவிகள் தேவைப்பட்டாலும் கூட, அவன் ஒரு தந்திரசாலி. தனியொருவனான க்வாகு அனன்ஸியைப் பாருங்கள். மலைப்பாம்பை விடவும் சாதுர்ய மிக்கவனாகத் தன்னை நிரூபித்திருக்கிறான். அவனுக்கு என் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும். வாக்குறுதி வாக்குறுதியே. எனவே, எல்லோரும் இப்போது தொடக்கம் எப்போதும் அவன் புகழ் பாடுக. இதுவே என் ஆணை."

தன் அரியணைக்கருகேயிருந்து தங்கப் பெட்டியொன்றை எடுத்த வானதேவன் நியமே, அதனை க்வாகுவிடம் அளித்தான்.

"ஞானக் களஞ்சியமான இதனை எடுத்துச் செல்க. புவியில் உனக்கு உதவிடும் வகையில் மேலும் பல தந்திரங்களையும் சூழ்ச்சிகளையும் இதில் கண்டுகொள்வாய். இனிமேல் மக்கள் உன் ஞானம் குறித்த கதைகளைக் கூறுவார்கள். அவற்றைச் சிலந்திக் கதைகள் என்பார்கள்...."

க்வாகு அனன்ஸி ஞானப் பொக்கிஷத்தை தன் குடிலுக்கு எடுத்து வந்தான். அதனின்றும் ஜனங்கள் தந்திரசாலியான சிலந்தி மனிதன் பற்றி கதைகளைப் புனைந்து கொண்டு வருகிறார்கள். ●


**கதைகளினால் சிலிர்ப்புகள் பெறுவோம். சகல ஜீவராசிகளினதும் கருணைக்குப் பாத்திரமாவோம். பிரபஞ்சத்துடன் இணக்கமாவோம். இந்தப் பிரபஞ்சம் மானுடனுக்கு மட்டுமல்லாமல் தாவரங்களுக்கும், வனங்களுக்கும், மிருகங்களுக்கும், பறவைகளுக்கும், நதிகளுக்கும், சமுத்திரங்களுக்கும் உரியதே என்பதை நினைவில் வைப்போம். மனிதனுக்குரியது பூமியன்று, பூமிக்குரியவன் மனிதன்!**



நாயும் ஒருநாள் எருமையில் ஏறும்

**ஐந்தறிவு உலகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவபெருமான் வேடம் தரித்து கல்கத்தா வீதிகளில் உலா வருகிறார் இளைஞர் ஒருவர். ஞாபகத்திற்கு வந்த மஹாகவியின் குறும்பா:
"சிவபெருமான் இந்
நிலத்தில் வந்தார்
சில்லாலைப் பக்கம்
நடந்தார்
அவர் உடை
கண்டால் விடுமா
அவ்விடத்து நாய்?
அப்பன்
அவசரமாய்த்
தம்விடை இவர்ந்தார்."

## நாடக உலகம்



இந்தியப் படவுலகைக் கலக்கிய 'கஹோ நா பியார் ஹை' நாயகனும் நாயகியும் முதன்முறையாக மேடை நிகழ்ச்சி ஒன்றில் தோன்றினார்கள். கல்கத்தாவில் கடந்த 11ந் திகதி நடைபெற்ற இசைநிகழ்ச்சியில் ஹ்ரிதிக் ரோஷனும், அமிஷா பட்டேலும் இணைந்து நடனமாடினார்கள். ரிக்கெட் விலை மிக உயர்வு. இருந்தும் வந்திருந்த பார்வையாளர்களின் எண்ணிக்கையோ ஒரு லட்சத்து முப்பதினாயிரத்துக்கும் மேல்.

சிங்கப்பூரில் 'அக்னிக் கூத்து' என்ற பெயரில் நாடகக் குழு ஒன்றை நடத்தி வருகிறார் இந்தியப் பெண்ணான எஸ். தேன்மொழி (நடுவே நிற்பவர்). பாதிக்கப்பட்ட முஸ்லிம் பெண்களின் அனுபவங்களை மையமாக வைத்து 'தலாக்' என்ற பெயரில் மேடையேற்றிய அவரது தமிழ் நாடகத்தை சிங்கப்பூர் பொலீஸார் தடை செய்திருக்கிறார்கள். அரங்கை விட்டு நகர மறுத்தவரை பலவந்தமாக ஜீப்பில் ஏற்றிச் சென்றனர்.



## நாடக உலகம்

வியட்நாமிய நடிகை பாம் நாகன் ஹோவாவும், அமெரிக்க நடிகர் டக் மில்லரும் நாடக ஒத்திகையில் ஈடுபட்டிருக்கிறார்கள். வியட்நாம் - அமெரிக்க கூட்டுத் தயாரிப்பான வில்லியம் ஷேக்ஸ்பியரின் *A Midsummer Night's Dream* ஹனோய் நகரில் மேடையேறுகையில் பார்வையாளராகக் கலந்துகொள்ள ஜனாதிபதி பில் கிளின்டனுக்கும் அழைப்பு. நவம்பர் நடுப்பகுதியில் வியட்நாமுக்கு விஜயம் செய்யும்போதே நாடகத்தையும் பார்ப்பார் கிளின்டன்.





பிரெஞ்சு நாடகக் குழுவினர் சர்வதேசப் பயணத்தினது ஒரு கட்டமாக ஜோர்டான் தலைநகரான அம்மானில் *May B* என்ற பெயரில் சமாதானத்துக்கான அரங்க நிகழ்வை நடத்துகிறார்கள்.

## நாடக உலகம்

சீனாவின் மக்கள் விடுதலைப் படை பாடல் ஆடல் குழுவினர் ஹொங்கொங் கலாசார நிலையத்தில் தங்கள் அரங்க நிகழ்வை நடத்துகிறார்கள்.




கல்கத்தாவிலுள்ள பல்பொருள் அங்காடித் தொகுதி ஒன்றின் வாயிலில் - மொடல்கள் இருவர் கிருஷ்ணனாகவும், ராதையாகவும் வேடமிட்டு நின்று மக்களைக் கவர்ந்திழுக்கின்றனர். ம்.. இது உத்திகள் ஆயிரம் கொண்ட வியாபார உலகம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொடர்பாடல் மற்றும் மானுடத் துறைக்குச் செய்த பங்களிப்புக்காக அண்மையில் உயர் விருது பெற்றிருக்கிறார் இத்தாலிய எழுத்தாளரான உம்பர்ட்டோ ஈகோ. சென்ற ஒக்டோபர் மாதம் 27ம் திகதி அவருக்கு இந்த விருது கிடைத்தது.**
**கடந்த ஆயிரமாண்டின் மிக முக்கிய கண்டுபிடிப்பு தொலைக் காட்சியோ, அணுசக்தியோ, தரையில்-நீரில்-ஆகாயத்தில் பயணம் செய்யக் கண்டுபிடித்த வாகனங்களோ, கம்பியூட்டரோ மைக்ரோ சில்லோ அல்ல பீன்ஸ் மற்றும் அவரை வகைகளின் கண்டுபிடிப்புத்தான் மனித நாகரிகத்தைக் காப்பாற்றியது என்று கூறும் கட்டுரை ஒன்றை 'தி நியூயோர்க் ரைம்ஸ்' இதழில் எழுதியிருக்கிறார் உம்பர்ட்டோ ஈகோ.**
**'காலச்சுவடு ஜனவரி - மார்ச்' இதழில் அதைத் தமிழில் தந்திருக்கிறார் ஆர். சிவகுமார். 'நாகரிகத்தை பீன்ஸ் காப்பாற்றிய விதம்' என்ற அக் கட்டுரையிலிருந்து சில பகுதிகள்:**



# உம்பர்ட்டோ ஈகோ

**1918**இல் என்னுடைய அம்மா வழி தாத்தா தன்னுடைய நாற்பதாவது வயதில் ஸ்பானிஷ் காய்ச்சல் என்று பரவலாக அழைக்கப்பட்ட ஒருவகை நச்சுக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டார். ஐரோப்பாவின் பெரும் பகுதியை அந்நோய் அப்போது கொன்றொழித்துக் கொண்டிருந்தது. மூன்று மருத்துவர்களின் மிகச் சிறந்த சிகிச்சையையும் மீறி அவர் ஒரு வாரத்திற்குள் இறந்துவிட்டார்.

1972ல் என்னுடைய நாற்பதாவது வயதில் ஸ்பானிஷ் காய்ச்சலுக்கு ஒப்பானதாகத் தோன்றிய ஒரு வகை நோயால் நான் பீடிக்கப்பட்டேன். 'பென்சிலின்' காரணமாக ஒரே வாரத்தில் நான் எழுந்து நடமாட ஆரம்பித்துவிட்டேன். அணுசக்தி, விண்வெளிப் பயணம் மற்றும் கம்பியூட்டர் ஆகியவற்றை மறந்துவிட்டு, நம் நூற்றாண்டின் மிக முக்கிய கண்டுபிடிப்பாக பென்சிலினை நான் விடாப்பிடியாக கருதுகிறேன் என்பதை இதனால் எளிதாகப் புரிந்துகொள்ள முடியும். (மேலும் கடந்த காலத்தில் ஐம்பது அல்லது அறுபது வயதில் இறந்து போயிருக்கக்கூடிய மனிதர்களை இன்று எண்பது வயதுவரை இருக்க வைக்கக்கூடிய எல்லா மருந்துகளையும் இதில் நான் பொதுவாகச் சேர்த்துக்கொள்கிறேன்.)

ஒரு நூற்றாண்டின் மிக முக்கியமான தொழில்நுட்ப கண்டுபிடிப்பையோ அல்லது விஞ்ஞானக் கண்டுபிடிப்பையோ தீர்மானிப்பது மிகக் கடினம். ஒரு குறிப்பிட்ட கண்டுபிடிப்பின் தேதி குறித்த நம்முடைய கருத்துக்கள் தெளிவாக இல்லாமையே இதற்குக் காரணம்.

இந்த நூற்றாண்டின் அதி சுவாரஸ்யமான கண்டுபிடிப்புக்களாக பல பொருட்களை வாசகர்கள் பட்டியலிடக் கூடும். ஆனால் உண்மையில் அவை நம்முடையதுக்கும் முந்தைய நூற்றாண்டிலிருந்து தொடங்குபவை.

உதாரணமாக தானியங்கி, விண்முட்டும் கட்டடம், சுரங்க நடைபாதை, டைன்மோ டர்பைன் போன்றவை, தட்டச்சுப்பொறி, கிராமஃபோன், ஒலிப்பதிவுப் பொறி, தையல் எந்திரம், குளிர்பதனப் பெட்டி ஆகியவற்றோடு டப்பாக்களில் அடைக்கப்பட்ட உணவுப் பொருள்கள், சுத்திகரிக்கப்பட்ட பால், சிகரெட் லைட்டர் (சிகரெட்டையும் சேர்த்து), நகரும் படிக்கட்டு, சலவை இயந்திரம், அழிப்பான், மையொற்றும் தாள், மின்விசிறி, பாதுகாப்பான சவரக்கத்தி, மர்ஃபி கட்டில், முடி திருத்துபவரின் நாற்காலி, பாதுகாப்பான தீக்குச்சி, மழை அங்கி, சேஃடி பின், காற்றூட்டப்பட்ட பானங்கள், காற்றடைத்த டயர்கள் மற்றும் கியர்கள் கொண்ட சைக்கிள்கள், மின்சார ட்ராம், செயற்கை நூலிழைகள், இவையெல்லாம் விற்கும் பல்பொருள் அங்காடி - இன்னும் பட்டியலை நான் தொடர வேண்டுமானால் பின்வருவனவற்றையும் சேர்த்துக்கொள்ளலாம் - மின்விளக்கு, தொலைபேசி, தந்தி, ரேடியோ, புகைப்படக்கலை மற்றும் சலனப்படங்கள், மேலும் ஒரு நிமிடத்தில் எண்ணற்ற கூட்டல்களைப் போடும் திறமை வாய்ந்ததும், கம்ப்யூட்டருக்கு இட்டுச் சென்ற பாதையில் நம்மை இருத்தியதுமான ஒரு கணக்குப் போடும் எந்திரம்....

பலநூறு ஆண்டுகளைக் கையாள வேண்டிய நிலையில் நாம் இருக்கும்போது கணக்கிடுதல் மேலும் கடினமாகிறது. வெடிமருந்து மற்றும் திசைகாட்டும் கருவி ஆகியவற்றின் தோற்றத்தைக் கணக்கிட கட்டுக்கதைகளையே நாம் நம்ப வேண்டியுள்ளது.

உதாரணமாக, பன்னிரண்டாம் நூற்றாண்டு ஓவியம் ஒன்றில் ஒரு கருவி சித்தரிக்கப்பட்டிருந்தால் அது அந்நூற்றண்டில் இருந்திருக்க வேண்டும் என்று நாம் உறுதியாக நம்பமுடிந்தாலும் கூட, அதற்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னால் அக்கருவி இருந்திருக்கவில்லை என்று நம்மால் உறுதியாகச் சொல்ல முடியாது.

இந்தப் பிரச்சினைகளை நான் எழுப்புவதற்குக் காரணம், நம்முடைய இந்த ஆயிரம் ஆண்டு காலத்தின் (*Millennium*) துவக்கத்தில் தோன்றிய சில கண்டுபிடிப்புக்களைக் குறித்து நான் பிரஸ்தாபிக்க விரும்புவதுதான். அக்கண்டுபிடிப்புக்களில் சில யாருடைய கவனிப்பையும் பெறாமலேயே முந்தைய ஆயிரம் ஆண்டுக் காலத்தின் கடைசி இரண்டு நூற்றாண்டுகளில் தயக்கத்துடன் தோன்றியிருப்பதற்கும் வாய்ப்புண்டு. எப்படி இருந்தாலும், கடந்த ஆயிரம் ஆண்டுகளை மாற்றியவை இந்தக் கண்டுபிடிப்புகள்தான்....

கி.பி. 1000க்கு முந்தைய இடைநிலைக் காலம் வறுமை, பசி, பாதுகாப்பின்மை ஆகியவற்றின் காலமாக இருந்தது. மக்கள் தொகை குறைந்து உடல்ரீதியாக வலிமை குன்றியபோது, நிலப்பகுதி தொடர்பாக வரும் நோய்களாலும் (காசநோய், தொழுநோய், சீழ்ப்புண்கள், தோல்படை, கழலை), பிளேக் போன்ற பயங்கர கொள்ளை நோய்களாலும் மக்கள் அழிந்தனர்.

கடந்துபோன நூற்றாண்டுகளின் புள்ளிவிவரங்களில் ஈடுபடுவது எப்போதும் அபாயம் நிரம்பியது. ஆனாலும், சில ஆய்வாளர்களின் கருத்துப்படி, ஏழாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் வசித்தவர்களின் எண்ணிக்கை தோராயமாக 1 கோடியே 40 லட்சத்திற்குக் குறைந்து போனது. அருகிப்போன விவசாயம், குறைவான மக்கள் தொகையோடு சேர்ந்து அநேகமாக எல்லோரையும் ஊட்டச்சத்து குறைந்தவர்களாக ஆக்கியது.

இரண்டாவது ஆயிரம் ஆண்டு தொடங்கியபோது எண்கள் மாறின, மக்கள் தொகை பெருகியது. 950ல் 2 கோடியே 20 லட்சம் ஐரோப்பியர்கள் இருந்ததாக சில நிபுணர்கள் கணக்கிடுகிறார்கள். வேறு சிலர் கி.பி. 1000ல் 4 கோடியே 20 லட்சம் என்று சொல்கிறார்கள். 14ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவின் மக்கள் தொகை 6 கோடிக்கும் 7 கோடிக்கும் இடையில் ஊடாடியது.

எண்ணிக்கைகள் மாறினாலும் ஒரு விஷயத்தில் ஒப்புமை தெரிகிறது. ஆயிரமாவது வருடத்திற்குப் பின் வந்த ஐந்து நூற்றாண்டுகளில் ஐரோப்பாவின் மக்கள் தொகை இரண்டு மடங்காகியுள்ளது, ஒருவேளை மூன்று மடங்காகவும் ஆகியிருக்கலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஐரோப்பாவின் திடீர் உயர்வுக்கான காரணங்கள் இவை என்று குறிப்பாகச் சொல்வது கடினம். 11ம் நூற்றாண்டுக்கும் 13ம் நூற்றாண்டுக்கும் இடையில் அரசியல் வாழ்க்கை, கலை, பொருளாதாரம், தொழில்நுட்பம் ஆகியவற்றில் புரட்சிகர மாற்றங்கள் ஏற்பட்டன. உடல் சக்தி மற்றும் கருத்துக்களில் உண்டான புது எழுச்சியை அக்காலகட்டத்தில் வாழ்ந்தவர்கள் உணர்ந்திருந்தார்கள்....

ஆயிரமாவது ஆண்டுக்கு முந்தைய நூற்றாண்டுகளில் மூன்று வருடத்துக்கு ஒருமுறை மாறும் பயிர் சுழற்சி முறை மெதுவாக மேற்கொள்ளப்பட ஆரம்பித்தது. இதன்மூலம் நிலத்தின் வளம் அதிகரித்தது. ஆனால் விவசாயத்திற்கு உபகரணங்களும், பணியாற்றும் விலங்குகளும் தேவைப்படுகின்றன. இந்தத் தளத்திலும் புதிய கண்டுபிடிப்புக்கள் தோன்றின.

ஆயிரமாவது ஆண்டுக்கு சற்று முந்திதான் குதிரைகளுக்கு இரும்பு லாடங்களும் (அதுவரை குதிரைகளின் குளம்புகள் துணியால் கட்டப்பட்டிருந்தன), குதிரையைச் செலுத்துபவர்கள் பாதங்களை வைத்துக் கொள்ளும் தாங்கிகளும் பொருத்தப்பட்டன. இந்தத் தாங்கிகள் போர் வீரர்களுக்கே அதிகம் பயன்பட்டன. உழவர்களுக்கு அவற்றால் பயன் குறைவுதான்.

குதிரைகள், எருதுகள் மற்றும் பாரம் சுமக்கும் விலக்குகளுக்கென்று ஒரு புது வகை கழுத்துப் பட்டை கண்டுபிடிக்கப்பட்டது. அது ஒரு புரட்சிகரமான நிகழ்வு என்பது நிரூபணமானது. பழைய வகை கழுத்துப்பட்டைகள் எல்லாப் பளுவையும் விலங்கின் கழுத்துத் தசைநார்கள் மீதே சுமத்தி அதன் மூச்சுக்குழாயை அபாயத்துக்குள்ளாக்கின. புதுக் கழுத்துப்பட்டை மார்புத் தசைகளையும் சேர்த்திணைப்பதால் விலங்கின் திறன் மூன்றில் இரண்டு மடங்கு அதிகரித்தது. சில பணிகளில் எருதுகளுக்கு பதிலாகக் குதிரைகள் ஈடுபடுத்தப்படுவதும் இதனால் சாத்தியமாயிற்று.

மேலும், கடந்த காலத்தில் கிடைமட்ட கோட்டில் நுகத்தடி பூட்டப்பட்ட குதிரைகள் தற்போது ஒன்றன்பின் ஒன்றாக செல்லும்படி இணைக்கப்பட முடிந்ததால் அவற்றின் இழுப்பு விசையும் கணிசமாக அதிகரித்தது. இதே காலகட்டத்தில் உழும் முறைகளும் மாறின. கலப்பைக்கு இரண்டு வெட்டுவாய்கள் இருந்தன - ஒன்று நிலத்தை பிளப்பதற்கும், மற்றொன்று மண்ணைப் புரட்டிப் போடவும்.

ஆனால் உண்மையில் நான் பேச விரும்புவது பீன்ஸ் பற்றித்தான். பீன்ஸ் மட்டுமல்ல, பயறு மற்றும் அவரையைப் பற்றியும் தான். பூமியிலுள்ள எல்லா பழங்களிலும் தாவர புரோட்டின் மிக அதிகம் உள்ளது என்பது குறைவாக இறைச்சி சாப்பிடும் எல்லாருக்கும் தெரிந்திருக்கும். அவரை அல்லது உடைத்த பயறு பயன்படுத்தப்பட்ட ஒரு சிறந்த உணவு வகை, திண்மையான, சுவையான ஒரு இறைச்சிக்கு இணையான சத்து உடையது என்று ஊட்டச்சத்து வல்லுநர் வலியுறுத்திச் சொல்வார்.

நெடுங்காலத்துக்கு முந்திய அந்த இடைநிலைக் காலங்களில் ஏழைகள் அவர்களே கோழிகளை வளர்த்தாலொழிய - அல்லது திருட்டுத்தனமாக விலங்குகளை வேட்டையாடினாலொழிய - இறைச்சி சாப்பிட முடியாது. (காடுகளில் வேட்டையாடுதல் பிரபுக்களின் தனி உரிமையாக இருந்தது.) நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல, இந்தச் சத்துக் குறைவான உணவு, ஊட்டமில்லாத, மெலிந்த, சோகை படிந்த, குள்ளமான, வயல்களைப் பராமரிக்க இயலாத ஒரு மக்கள் திரளை உண்டாக்கியது.

எனவே பத்தாம் நூற்றாண்டில் பயறு வகைகளின் சாகுபடி பரவத் தொடங்கியபோது ஐரோப்பாவின் மீது அது மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. உழைக்கும் மக்களால் அதிக புரோட்டினை உண்ண முடிந்தது. அதன் விளைவாக அவர்கள் அதிக உடலுரம் பெற்று, நீண்ட நாட்கள் வாழ்ந்து, அதிகக் குழந்தைகளைப் பெற்று, ஒரு கண்டத்தின் மக்களை மறுபெருக்கம் செய்தார்கள்.

நம் வாழ்க்கையை மாற்றியமைத்த கண்டுபிடிப்புக்கள், சிக்கலான எந்திரங்களைச் சார்ந்துள்ளன என்று நாம் நம்புகிறோம். ஆனால் உண்மை என்னவென்றால் நாம் - அதாவது ஐரோப்பியர்களாகிய நாம்,



**பயறு வகைகளின் சாகுபடி பரவத் தொடங்க, உழைக்கும் மக்களால் அதிக புரோட்டினை உண்ண முடிந்தது. அதன் விளைவாக அவர்கள் அதிக உடலுரம் பெற்று, நீண்ட நாட்கள் வாழ்ந்து, அதிகக் குழந்தைகளைப் பெற்று, ஒரு கண்டத்தின் மக்களை மறுபெருக்கம் செய்தார்கள்.**

அமெரிக்காவில் குடியேறிய ஆங்கிலேய மத குருக்களின் வழித்தோன்றல்கள், மற்றும் ஸ்பானிய வெற்றியாளர்கள் - இன்னும் இங்கிருப்பதற்குக் காரணம் பீன்ஸ் தான். அவை இல்லாவிட்டால் ஐரோப்பிய மக்கள் தொகை சில நூற்றாண்டுகளுக்குள்ளாகவே இரண்டு மடங்கு ஆகியிருக்காது. பல லட்சக்கணக்கானவர்களாக எண்ணிக்கையில் இன்று நாம் இருக்க மாட்டோம். நம்மில் சிலர், இந்தக் கட்டுரையை வாசிப்பவர்களையும் உள்ளிட்டு, வாழ்ந்திருக்க மாட்டோம்.

சில தத்துவவாதிகள் மக்கள் தொகை பெருகாமலிருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று சொல்கிறார்கள். ஆனால் எல்லோரும் இதை ஏற்றுக் கொள்வார்களா என்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியவில்லை.

ஐரோப்பியர் அல்லாதவர்களைப் பற்றி என்ன சொல்வது? மற்ற கண்டங்களின் பீன்ஸ் வரலாறு எனக்குப் பரிச்சயமில்லை. சீனப்பட்டும், இந்திய வாசனைத் திரவியங்களும் இல்லாமலிருந்தால் ஐரோப்பாவின் வணிக வரலாறு வேறு மாதிரி ஆகியிருக்கும் என்பதைப் போல மற்ற கண்டங்களின் வரலாறும் ஐரோப்பிய பீன்ஸ் இல்லாமலிருந்திருந்தால் மாறியிருக்கும் என்பது நிச்சயம்.

எல்லாவற்றுக்கும் மேலாக, இந்த பீன்ஸின் கதை நமக்கு முக்கியத்துவமுடையது என்று எனக்குத் தோன்றுகிறது. முதலாவதாக, சுற்றுச் சூழல் பிரச்சினைகளில் நாம் தீவிர கவனம் கொள்ள வேண்டும் என்று அது சொல்கிறது. இரண்டாவதாக, மேற்கத்திய மக்கள் அரைக்காத அரிசியை உமியோடு சேர்த்து (சுவையானது) சாப்பிடப் பழகியிருந்தால் நாம் குறைவான அதே சமயம் நல்ல உணவை சாப்பிடுவோம் என்பது தெரிந்திருக்கிறது.

ஆனால் இந்தமாதிரி விஷயங்களைப் பற்றி யார் சிந்திக்கிறார்கள்? எல்லாரும் இந்த ஆயிரம் ஆண்டின் மிகப் பெரிய கண்டுபிடிப்பு என்று தொலைக்காட்சியையோ அல்லது மைக்ரோ சில்லையோதான் சொல்வார்கள். ஆனால் இருண்ட காலத்திலிருந்தும் கூட சிலவற்றை நாம் கற்றுக் கொள்ளலாம் என்று தெரிந்து கொண்டிருந்தால் நன்றாக இருக்கும். ●

**ஐந்தறிவு உலகம்**

**இங்கிலாந்துப் பிரதமர் ரொனி பிளேயரின் மெய்ப் பாதுகாவலர் ஒருவரது தொப்பியில் பயணம் செய்கிறது ஆந்தை! அவருக்கும் இரவில்தான் வேலை போலும்!**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறவைகளும் சிறகுகளும்



காதல் தொடர்

கனிமொழி

"காதல் காதல் காதல்
காதல் போயின்
சாதல் சாதல் சாதல்"

"காதல் என்பது எதுவரை...
கல்யாணக் காலம் வரும்வரை"

"காதல் என்பது
முட்டாள்களின் சொர்க்கம்"

"விழியில் விழுந்து இதயம்
நுழைந்து
உயிரில் கலந்த உறவே"

"என்னை நான் தேடித் தேடி
உன்னிடம்
கண்டுகொண்டேன்"

இவற்றில் எது சரி,
எதுவாயிருந்தாலும் சரி.

காதல் சொல்லச் சொல்ல இனிக்கும். காதில் தேன் பாய்ச்சும். இதமும் அதுவே. ரணமும் அதுவே. அதுவே நோயாகும். அதற்கு அதுவே மருந்தாகும். ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அதன் மயக்கப் பிடியில் சிக்க வைத்து வதைக்கும்.

பாரதிதாசன் சொல்வதைப் போல "கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால், மண்ணில் குமரருக்கு மாமலையும் ஓர் கடுமாம்." என்று தூணைத் துரும்பாக்கும்.

காதல் கலைகளை வளர்த்திருக்கிறது.
கவிதை படைக்கிறது.
இசையமைக்கிறது.
ஓவியம் தீட்டுகிறது.
தாஜ்மஹால் கட்டுகிறது.
காதலின் சக்தி காதலுக்குத்தான் உண்டு.

எத்தனை சாம்ராஜ்யங்கள் சரிந்திருக்கின்றன. எத்தனை சமாதிகள் எழும்பியிருக்கின்றன. எத்தனை எத்தனை யுத்தங்கள். கண்ணீர் வடிக்கப்பட்டு ரத்தம் சிந்தப்பட்டு... சோகங்களே சுகமாகிப் போன சரித்திரங்கள்...

இதயம் துளைத்த ரணத்தையெல்லாம் இசையாய்ச் சொல்ல மூங்கில்களுக்கு மட்டும்தான் முடிகிறது.

இலக்கியங்களில் கடவுளை விடவும் அதிகமாகப் பாடப்பட்டிருப்பது காதல்தான்.

காதலை.... அதன் அர்த்தத்தை அந்த முழுச் சாரத்தை வடித்துக் கொடுத்துவிட எவ்வளவு முயற்சிகள் நடக்கின்றன... நேற்றும் இன்றும் இனி என்றென்றும்!

காதல் -

ஒரு சில புண்ணிய ஆத்மாக்களின் மனதில் ஒரே ஒரு முறை அரிதாக மலரும் பூ. அந்த மலரின் மணம் இறுதி மூச்சு உள்ளவரையில் உயிரோடு கலந்து கமழும். மனச்செடியில் இரண்டாவது மகரந்தம் விழுந்துவிடாதபடி வாசலடைத் துக்கொண்டு வாழும் என்பது ஒரு பக்கத் தீர்மானம்!

பெரியார் சொன்னதைப் போல 'அன்பு, கோபம், ஆசை, பயம் போல காதலும் ஓர் உணர்வுதான். இது எதைவிடவும் உயர்ந்தது இல்லை. மறுமுறை வராது என்பதும் இல்லை' என்பவர்களும் உண்டு.

ஒருவர் இப்படிப்பட்டவர் என்கிற சில அனுமானங்களோடு வரும் காதல் அது தவறாகும்போது மரித்துவிடுகிறது. ஒருவனை யாரென்றே தெரியாதபோது காதலிக்கத் துவங்கும் ஒரு பெண், அவன் நான்கு கொலைகளைச் செய்தவன் என்று அறிய வரும்போது தன் காதலை நிறுத்திக்கொள்வதும் திருத்திக் கொள்வதும் அப்படித்தான். இங்கே காதல் என்பது அறிவுக்கு அப்பாற்பட்டது என்கிற வாதம் பொய்த்துப் போவது உண்மைதானே.

காதல் என்பது தியாகத்தின் குழந்தை. அது தன்னைப் பற்றிச் சிந்திக்காத ஒரு தன்னலமற்ற நிலை, என்பார்களே! என் தோழியின் கணவன் - இருபது வயதில் தன் காதலுக்காக, அதை நிறைவேற்ற வேண்டி தற்கொலைக்குக் கூடத் தயாரானவன். காதல் நிறைவேறி கல்யாணத்தில் முடிந்த பிறகு மாறிப்போனான். நாட்டியத்தை உயிராக நேசித்த தன் காதல் மனைவியை "நீ சலங்கை கட்டி பலர் முன் ஆடுவது எனக்குப் பிடிக்கவில்லை. நீ எனது உடமை. எனக்கு மட்டுமே சொந்தம்' என்று கூண்டுப்பறவையாக்கிய போது அது அன்பின் வெளிப்பாடாகவோ, தியாகத்தின் அறிகுறியாகவோ, இருக்க முடியாதல்லவா! இன்றும் எங்காவது ஒரு நடன நிகழ்ச்சிக்குப் போக நேரிட்டால், கண்ணீர் மல்கத் தன் வாழ்க்கையின் அர்த்தத்தையே இழந்து விட்டதாக அவள் சொல்லும்போதுதான் வலிக்கிறது. அந்தக் காதல் என்னவாயிற்று?

ஒருவரை நசுக்கி, அவரின் உணர்வுகளையும் லட்சியங்களையும் தகர்த்து, அதன் மீது உருவாக்கப்படும் எந்த ஒரு உறவும் எப்படி உரிமை கொண்டாட முடியும்?

"நீயில்லாமல் என்னால் வாழமுடியாது. ஆனால் உன்னையும் வாழவிட முடியாது' எனும் உறவுகளுக்கு என்ன பெயர்?

இதையெல்லாம் பார்த்துவிட்டு அறிவுபூர்வமாக யோசித்து வருவதுதான் காதல் என்று தோன்றுகிறது.

'எனக்கு கண்ணாடி போட்ட பொண்ணுங்களைப் பிடிக்காது'

'எனக்கு குண்டாயிருக்கிற பசங்களைப் பிடிக்கவே பிடிக்காது'

'பெண்ணுரிமையில் நம்பிக்கையற்ற ஆண்களைப் பிடிக்காது' என்பது வரை நீண்டு பெரிதாய்ப் பொருத்தம் எதுவும் இல்லாத ஜோடி, பார்த்த மாத்திரத்தில் இதயங்கள் இடம் மாறி கருத்தொருமித்த காதலர்களாவதையும் பார்க்கிறோம்.

"டைம் பத்திரிகை சில வருடங்களுக்கு முன் காதல் பற்றிய ஓர் அறிவியல் ஆய்வை வெளியிட்டிருந்தது. அந்த ஆய்வில் மனதில் ஏற்படும் சில எண்ணங்களுக்கேற்ப உடலில் சில ரசாயனங்கள் சுரக்கின்றன. அந்த ரசாயனங்கள் உடலில் ஒரு மந்தகாசப் போதையைத் தருகிறது. மேகங்களுக்கிடையே மனசு சஞ்சரிக்கிற பூரிப்பு முளைக்கிறது. காலம் போகப் போக அதிகபட்சம் நான்கு ஆண்டுகளில் உடல் இந்த ரசாயன மாற்றங்களுக்குப் பழகிவிடுகிறது. அப்போது காதல் வயப்பட்ட நிலை மெல்ல சராசரிக்கு வந்துவிடும்' என்றிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடானு கோடி கவிதைகளுக்குக் கருவறையாக இருக்கும் ஓர் உணர்வைக் கண்ணாடிக் குப்பிகளில் ஒரு கெமிஸ்ட்ரி லேப்பில் அடைத்துவிட்ட சோக நிகழ்ச்சி அது!

இருந்தாலும் வேதியில் கட்டுரைகளோ, சமுதாயக் கட்டுப்பாடுகளோ காதலையும் காதலர்களையும் தடுத்ததில்லை.

பெற்றோர்கள் தங்கள் காதலை அங்கீகரிக்கவில்லை. 'சேர்ந்து வாழத்தான் முடியவில்லை. சேர்ந்தாவது சாவோம்' என்று தங்கள் வாழ்க்கையை முடித்துக்கொள்ளும் முடிவுக்கு முன்னால் கட்டுப்பாடுகளும், கண்டுபிடிப்புக்களும் தோற்றுப்போகும். இதை முட்டாள்தனம் என்று சொல்லிவிடலாம். ஆனால், ஒருவரை விட்டு ஒருவர் உயிர் வாழ சாத்தியப்படாது என்று உயிர் துறக்கும் அன்பை நாம் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் உதாசீனப்படுத்த முடியாதே!

இன்னொரு பக்கம் இப்படி உயிரோடு உயிர் கலந்து நேசிக்கத் துவங்கி போராடி கல்யாணம் செய்து கொள்ளும் பலர், சில காலத்திலேயே காதல் நீர்த்துப்போய் பிரிய நேர்வதை எதில் சேர்ப்பது?

எனக்குத் தெரிந்த இருவரின் கதை இது!

பத்து வருடங்களாகக் காதலித்து, வீட்டை விட்டு வெளியேறி திருமணம் செய்து கொண்டவர்கள் அவர்கள். ஏழு வருட வாழ்க்கைக்குப் பிறகு சமீபத்தில் பிரிந்துவிடத் தீர்மானித்திருக்கிறார்கள்.

பிரிவுக்கு அவன் தரப்புக் காரணம்: "அவளுக்குக் குடும்பப் பொறுப்பே இல்லை. ஊர் சுத்தறதுலதான் சந்தோஷம்."

அவளது தரப்பில்: "அவன் சோம்பேறி. சம்பாதிக்கிற யோக்கியதைகூட இல்லை"

பெரிய முரண்பாடுகள் இல்லாவிட்டாலும் சொல்லிக் கொள்ளும்படி ஈடுபாடு இல்லாமல்போய் இப்படிப் பிரியும் எண்ணிக்கை கூடிக்கொண்டிருக்கிறதே!

முப்பது ஆண்டுகளுக்கு முன் தான் நேசித்துக் கைகூடாமல் போன காதலுக்காக உருகிக் கொண்டிருப்பவர் களை எப்படிச் சொல்வது...?

அதே ஆணையோ பெண்ணையோ உங்களால் இன்றும் நேசிக்க முடியுமா..? எண்ணங்களும், நம்பிக்கைகளும், விருப்பு வெறுப்புகளும், அறிவும் வெவ்வேறு திசைகளில் இரு துருவங்களாக வளர்ந்து நிற்கும். ஒருவருக்கொருவர் என்ன பேசிக்கொள்வது என்றுகூடத் தெரியாத நிலையில் நேசம் மாறவில்லை என்று சொல்ல முடியுமா?

**காதல் என்பது எதையும் தனக்கென்று சுருக்கிக்கொள்வதன்று. உள்ளங்கையில் வைத்து இறுக்கமாக விரல் மூடிக்கொண்டு 'இனி நீ தப்ப முடியாது' என்று பிடித்து வைத்துக் கொள்வதன்று... நாம் நேசிப்பதை அதன் குணமும் போக்கும் மாறாதபடி வாழவிடுவதுதான் காதல்.**

சொல்கிறார்களே... நினைவுகளோடு வாழ்வதாக நிற்கிறார்களே!

காதல் என்பது எதையும் தனக்கென்று சுருக்கிக்கொள்வதன்று. உள்ளங்கையில் வைத்து இறுக்கமாக விரல் மூடிக்கொண்டு 'இனி நீ தப்ப முடியாது' என்று பிடித்து வைத்துக் கொள்வதன்று.

நாம் நேசிப்பதை அதன் குணமும் போக்கும் மாறாதபடி வாழவிடுவதுதான் காதல். நேசிக்கப்படுபவரின் சுதந்திரம் அழியாமல் மதிப்பது, கழுத்தைச் சுற்றி கயிறு மாட்டி, 'இனி நீ தப்ப முடியாது' என்று பறவையைக் கூட்டுக்குள் அடைத்து வைத்து, அதன் இறக்கைகளை வெட்டிவிட்டு, தான் 'பறவைக் காதலன்' என்பது குரூரம். அவற்றைச் சுதந்திரமாய் விட்டுப்பாருங்கள்.... சிறகடித்த பறவை திரும்பி வந்து உங்கள் வீட்டு முற்றத்தில் அமர்ந்தால்... அந்த சந்தோஷத்துக்கு ஈடு இருக்க முடியுமா? தன் சிறகுகளின் ஸ்பரிச தூரத்தில் இருக்கும் பிரபஞ்ச வெளியை விட்டுவிட்டு, உங்களிடமே வந்தமர்ந்த அந்த ஜீவனின் அன்புக்கு இணை எதுவும் உண்டோ! எந்தவித நிர்ப்பந்தங்களும் இல்லாத அந்த தூய அன்பைவிட உங்களது கூண்டுகளும், பூட்டுகளும் காவல் புரிந்துவிடுமா?

காதலில் 'எனக்கு நீ... உனக்கு நான்' என்ற நம்பிக்கை வரும்போது அங்கு அன்பு சுரக்கும். அந்த உறுதி உங்களைப் பரந்து விரியச் செய்யும். கூட்டுப் புழுக்களாகக் குறுகிப் போகாமல் சாதிக்கும் தைரியம் தரும். தேடி வருபவர்களுக்கு நிழல் தரும் விருட்சமாகக் கிளைக்கும். 'நான் ஒடிந்துபோகும்போது, உலகின் எந்த மூலையில் நீ என்ன செய்து கொண்டிருந்தாலும் சரி... ஏழு மலையும் கடலும் தாண்டி என்னைத் தாங்கிக்கொள்ள ஓடி வருவாய்' என்று காதல் வளர்க்கும்.

'உனது தாய்க்கும், தந்தைக்கும் என் பெற்றோரோடு என்ன உறவு? உனது உறவினர்களுக்கும் என் சுற்றத்துக்கும் என்ன சொந்தம்? நீ யாரோ, நான் யாரோ. ஆனால் இந்தக் காதலினால்... மழை நீர் மண்ணோடு கலந்தது போல நாமும் ஒன்றுகலந்தோமே!'



"திராவிடஇயக்க இலக்கியத்தில் முக்கியமானவராக அறியப்படும் கலைஞர் மு. கருணாநிதியின் சிறந்த படைப்பு என்று எதைக் கருதுகிறீர்கள்?"

எழுத்தாளர் சுஜாதா பதில் : "கனிமொழி!"

- இது சங்கப்பாடல் சொன்ன காதல். இதற்கு முன் அத்தனை அறிவும் அதன் அர்த்தம் இழந்து போகும்.

காதல் என்பது உடலும் மனசும் பூரித்துப் புல்லரித்துப் போதையில் சஞ்சரிக்கும் நிலையா, ஆழமான அமைதியானதொரு நதியா, ஒரே ஒருமுறை மட்டும் வரும் வசந்தமா? அது கவிஞனின் கனவா, புனிதமா, பொய்யா, ரசாயன மாற்றம் மட்டும்தானா...?

பொழிப்புரைகள் பலன் தராது. அது முழுமையாகப் பகிர்ந்துகொள்ள முடியாத ஓர் அனுபவம். ஒரு வகையில் 'கடவுளைப் போலத்தான் காதலும்!'

உண்டா... இல்லையா என்பதை எந்தத் தர்க்கமும் முடிவு செய்ய முடியாது. வார்த்தைகளுக்குள் சிக்குமா உணர்வுப் பிரவாகம்?!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன தமிழ்ச் சிறுகதையை உன்னத ஸ்தானத்திற்கு உயர்த்திப் பிடித்தவர்களில் எஸ். இராமகிருஷ்ணனின் பாத்தியதை போற்றுதற்குரியது. 'தமிழ் இனி 2000' எழுத்தாளர்கள் ஒன்றுகூடலில் - பல படைப்பாளிகளைக் காணவும் கதைக்கவும் கிட்டிய தருணம் பரவசமிக்கது.

ஒரு சாய் பொழுதில் நானும் இராமகிருஷ்ணனும் ஹோட்டல் படிக்கட்டிலேயே எங்கள் கடையை விரித்தோம். அவரின் நெஞ்சப் பட்டறைக்குள்ளிருந்த அற்புத மனிதன் கதை சொல்லத் தொடங்கினான். கண நேரத்திற்கெல்லாம் நானும் இராமகிருஷ்ணனும் காணாமல் போனோம்.

மீண்டும் நானும் அவரும் உடல் பெற்றபோது - இரவு நீண்டு கிடந்தது. தமிழ் நேர்காணல் மரபில் மூன்று கேள்விகள் மட்டும் கேட்டு வைத்தேன்.



எஸ். ராமகிருஷ்ணன்



நேர்கண்டவர் :
எஸ்.எல்.எம். ஹனீபா

***நவீன சிறுகதை முன்னோடிகள் சிலரில் நீங்களும் முக்கியமானவர் என்பது பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இது பற்றி நீங்கள் என்ன சொல்றீங்க?***

எனக்கு இந்த மாதிரி ஒரு அங்கீகரிப்பு சந்தோஷம் கொடுக்கிறதுன்னாலும், பெரிய அளவில் பாதிக்கிறதுன்னு சொல்ல முடியாது. எனக்குச் கிடைச்சிருக்கிற உற்சாகம் என்றுதான் சொல்ல முடியும்.

இதைத் தாண்டி என்னுடைய 'கதை'ங்கிற அந்த உலகம் எல்லோருக்குள்ளயும் ஓடிட்டிருக்குன்னு நினைக்கிறேன். இப்போ ஒரு வேளை நாம் தனித்தனியாக இருக்கிற - நபர்களாக இருக்கிற மாதிரி கதை வழியாக ஒண்ணு சேர்ந்த நபர்களாகவும் இருக்கோம். அப்பிடிப் பார்த்தால் நாம எல்லோருமே ஒருத்தருக்கொருத்தர் தெரிஞ்சு பரிச்சயமான நபர்கள்தான். ஒருத்தர ஒருத்தர் தெரியாதுன்னு சொல்ல முடியாது.

இந்த அங்கீகாரம்தான் எனக்கு ரொம்ப முக்கியமானதா இருக்கு. நம்ம கதைகள் வழியாகவே நாம ஒருத்தர ஒருத்தர் சந்திக்கிறோம். பேசிக்கிறோம். கதாபாத்திரங்கள் வழியா நாம ஒருத்தர ஒருத்தர் தெரியாத நபர்களாக இருந்து அவுங்க வீட்டுக்குள்ள புகுந்துக்கிறோம். அவுங்களுட தனி அறைகள்ல நம்மளும் போயி அமர்ந்துக்கிறோம். அந்த அங்கீகாரம்தான் முக்கியமானதுன்னு நினைக்கிறேன்.

***உங்க சின்ன வயசில எப்படியான எழுத்துக்கள்ல ஆர்வம் காட்டினீங்க?***

நான் ஆரம்ப காலகட்டங்கள்ல, இலக்கியபூர்வமான புத்தகங்கள் வாசிக்கக்கூடியவனாக இருக்கல்ல. ஊர்சுத்துகிற பையனாகத்தான் இருந்தேன். நிறையத் தடவைகள் வீட்லேருந்து வெளில ஓடிப்போற ஒருத்தனா இருந்திருக்கன்.

வெவ்வேற காலகட்டத்தில நான் எங்க வீட்டிலேருந்து ஓடிப்போயிருக்கன். எங்கெ போறதின்னு தெரிஞ்சிராத காலகட்டத்தில - ஊருக்கு வாற ரயில்ல ஏறி எங்கெயாவது போயிரணும் அப்டீன்னு ரயிலேறி வேற வேற ஊர்களுக்குப் போய்... திருப்பி அந்த ஊர்ல இருந்து இன்னொரு ஊருக்கு...

அந்த மாதிரி நேரங்களிலெல்லாம் ஏதாவது தனி இடங்கள்ல இருக்கும்போது நான் என்னத்துக்காக போயிட்டிருக்கேன் என்கிறது தெரியாது. அந்த மனநிலை தொடர்ந்து இருந்திட்டே இருக்கு.

பள்ளிப் பருவத்திலேயிருந்து எனக்கு கார்ட்டூன், காமிக்ஸ் படிக்கிறதிலே ரொம்ப விருப்பம் இருந்தது. அப்ப வந்து அதிலெ ஒரு விதமா நான் பார்த்தேயிராத கரெக்டர்ஸ் இருந்தாங்க. ஒரு நாய் ஓடிட்டிருக்கும்போது - அதனுடைய உடல் அப்படியே நீண்டு போகும் என்று நான் முதல்ல கார்ட்டூன்லதான் பார்த்தேன். அப்புறம் வெய்யில் நீள நீள நாயும் நீண்டு போயிட்டிருக்கும்ன்னு காமிக்ஸ்லதான் கத்துக்கிட்டேன்.

அதற்கப்புறம்தான் என்னுடைய சகோதரர் ஒருத்தர் வந்து - அவர் ஒரு எழுத்தாளராக விரும்பியவர். நிறைய இலக்கியப் புத்தகங்களைப் படிச்சிட்டிருப்பார். அவர்தான் ஒரு நாள் என்னை அழைச்சுப் போய் 'நீ வேற புத்தகங்களைப் படி'ன்னு நிறைய கதைப் புத்தகங்களைக் கொடுத்தாரு. அதைத் தொடர்ந்து லைப்ரரிக்குப் போய் நிறைய - குறிப்பாக இந்திய நாவல்கள் - பெரிய பெரிய நாவல்கள் எல்லாம் அதை யார் எழுதினாங்க என்று தெரியாமலே படிக்க ஆரம்பிச்சிட்டேன்.

அப்புறம் கொஞ்சம் தெரிஞ்ச பின்னாடி ருஷிய இலக்கியத்தின் மீது ரொம்ப ஆர்வம் உண்டானது. அப்ப எல்லாம் ருஷியப் பத்திகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் சந்தா கட்டியிருந்தேன். பத்திரிகைகள் வரும். புத்தகங்களும் வரும். ருஷியப் பத்திரிகைகளினுடைய காகிதங்கள் வழவழப்பானது. அதில் இருந்த கதைகளெல்லாம் என்னெ ரொம்பத் தூண்டிச்சி.

ருஷியக் கதாசிரியர்களான டால்ஸ்டாய், தஸ்தேயெவ்ஸ்கி, ஷெக்காவ் என்று இவர்களுடைய புத்தகங்களைத்தான் ஒரு குறிப்பிட்ட கால வரைக்கும் படிச்சென். பிறகு கல்லூரியில ஆங்கில இலக்கியம் படிச்சேன். அப்போ ஐரோப்பிய எழுத்தாளர்கள் என்று பலரையும் தெரிஞ்சிட்டேன்.

ஆங்கில இலக்கியத்தில டொக்டரேட் வரைக்கும் பண்ணினேன். அதில டி. எஸ். எலியட்டோட கவிதைகளை ஆய்வு செய்தேன். அப்பவரைக்கும் எனக்கு மேற்கத்திய இலக்கியங்கள் மேல கொஞ்சம் ஈடுபாடிருந்தது. ஆனா படிச்சி முடிச்ச பின்னாடி இவை எதையுமே நாம் செய்யக் கூடாது என்று தப்பித்துக் கொள்வதற்குத்தான் உதவியாயிருந்தது.

ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்தைப் பார்க்கப் போகும்போது அங்கு ஒரு மயில் நடனமாடுறதப் பார்த்தா உடனே அவருக்கு அந்த இடத்தில நிக்கத் தோணுது. ஆனால் போயிட்டிருக்கும் பாணன் தன்னுடைய வறுமையிலதான் போயிட்டிருக்கிறான். பசி இருந்தாலும் மயில் ஆடுறதைப் பார்க்குமளவுக்கு வாழ்க்கை ருஷிகரமாகத்தானிருக்கு. இந்த வாழ் நிலையில இருந்திட்டு, நாம இந்த இயல்பான தமிழ் வாழ்விலிருந்தே கதையைச் சொல்லலாம் அப்படீன்னு தோணுது. என்னுடைய ஆதாரமான வாழ்நிலையில இருந்துதான் அதிகமா என் கதைகளை எழுதுறேன்.

## நிறையப் பேருடைய தொடர்ந்த தீவிரமான வாசகன் நான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***இந்த 'தமிழினி 2000' மாநாடு பற்றி என்ன சொல்கிறீர்கள்?***

*தமிழினி என்கிற இந்த முக்கியமான முயற்சியிலே - எனக்கு ரொம்ப ஆர்வமானதிற்கு காரணம் நிறைய முகம் தெரியாத நண்பர்களுடைய சந்திப்பிற்கு இது களமாயிருந்தது. இதில் விவாதிக்கப்படக்கூடிய இந்த ஐம்பதாண்டுகால மதிப்பீடுகளை விடவும் நாம் சந்திச்ச இந்தச் சந்திப்பு என்கிறது எனக்கு முக்கியமாப் படுது.*

*நான் சந்திக்க விரும்பிய நிறைய எழுத்தாளர்களை சந்தித்தேன். நான் என்னை ஒரு வாசகனாகவே எப்போதும் முன்னிறுத்திக்கிட்டிருக்கேன். தொடர்ந்து நிறையப் பேருடைய தீவிரமான வாசகன். அந்த எழுத்தாளர்களை நேருக்கு நேர் பார்க்கும்போது என்னுடைய பால்ய பருவத்தில அவர்களுடைய கதைகளைப் படித்த ஞாபகம் இன்னும் துலக்கமாயிருக்கிறது. அவர்களைச் சந்திப்பதற்கு இது ஒரு பெரிய வாய்ப்பாக இருந்தது. எனக்குத் தெரிந்து, நான் பார்த்தறியாத நிறைய எழுத்தாளர்களைச் சந்திக்க முடிந்தது.*

*இதுபோல என்னைச் சந்திக்கணும்னு விரும்பிய நிறையப் பேரோட பேசுவதற்கான வாய்ப்பும் கிடைத்தது. இந்த மாதிரியான ஒரு சந்திப்பு ஒரு நிகழ்ச்சி மாதிரி ஒரு நாடகம் மாதிரி நிகழ்த்திக் காட்டியது. வெவ்வேறு ஆட்களை பக்கத்தில வர வச்சு அவங்களைப் பேச வச்சு - அவங்கள ஒருத்தருக்கொருத்தர் ஊடாட வெச்சு - இப்படியான பரிமாற்றங்கள் - இந்தச் சந்திப்பில் எனக்கு மிகவும் நல்ல விசயமாகப்பட்டது.*

*இந்த மாதிரி ஒருத்தருக்கொருத்தர் நாம தொடர்ந்து பரிமாறிக் கொள்வதற்கான உலகத்தை உருவாக்கியிருக்கும் இந்த தமிழினி-2000, கருத்து ரீதியாக முக்கியமான எந்தப் பங்களிப்பையும் நிகழ்த்தவில்லை என்றுதான் எண்ணுகிறேன்.*

*இங்கு வாசிக்கப்பட்ட கட்டுரைகள் வழியாக ஐம்பதாண்டுகளை நாம் மதிப்பிட முடியாது. பொதுவாக இலக்கியத்திற்கு சரித்திரம் கிடையாதென்று நம்புகிறவன் நான். சரித்திரம்னா ஒவ்வொரு பத்து வருஷத்திலயும் அந்தப் பத்து வருஷத்துக்குரிய விசயம் முடிஞ்சிரணும். அப்படின்னாதான் அடுத்த பத்துவருஷம் ஆரம்பிக்கும். ஆனா இலக்கியத்துல ஐம்பதில இருந்து இரண்டாயிரம் வரைக்கும் ஒரே வாழ்க்கையைத்தான் எழுதிக்கிட்டிருக்காங்க.*

*வாழ்வு வெவ்வேறு விதங்களிலே பாதிச்சுக்கிட்டேயிருக்கும். அதுக்கு சரித்திரம் இருக்காது. இதே பிரச்சினைகள், இதே மனிதர்கள், இதே விதமான வாழ்வியல் துரத்திட்டேயிருக்கும். கதைகளுக்கும் தனியான சரித்திரம் இருக்காது. ஏன்னா கதையாசிரியர்களுடைய சரித்திரம் கதைகளினுடைய சரித்திரம் அல்ல -*

*அந்த வகையில் 'தமிழினி 2000' பங்களிப்பு எனக்கு ரொம்ப முக்கியமா தெரியுது. குறிப்பாக இலங்கையைச் சேர்ந்த நிறைய எழுத்தாளர்களை சந்திப்பதற்கான ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.* •



*...நான் சின்ன வயதில் எங்கள் வீட்டுச் சுவரைத் தடவிகிட்டேயிருப்பேன். பளபளன்று இருக்கும். கொஞ்சநாள் கழித்து வீசு காற்றால் அதில் மறைந்த மணல் துகள்கள் தென்பட விரல் மேடுபள்ளங்களை உணர்ந்தது. காற்றும் வெக்கையும் ஒவ்வொரு நாளும் வீட்டின் சுவர்களில் ஊர்ந்து அரித்து கல் தெரியத் துவங்கியது. எப்போதும் காற்றால் என் வீடு மட்டுமல்ல ஊரே மெல்ல அரித்துத் தின்னப்படுவதை உணர்ந்தேன்.*

*வெக்கையும் காற்றும் கூடின landscapeல்தான் நான் வாழ்ந்து கொண்டிருந்தேன். அப்பதான் தோணிச்சு வீழ்ச்சியினுடைய பெருங்காற்று சுற்றியலையும் ஊரையும் அதன் முணுமுணுப்பையும் எழுதவேண்டுமென. ஊரின் விசித்திர நம்பிக்கைகள், புதைவுண்ட உலகின் ஞாபகங்கள், நாவிதர்களின் ரகசிய மருத்துவங்கள் என நான் அறிந்த ஊரினுள் அறியாத ஊர் படுத்துக் கிடப்பதைக் கண்டேன்.*

*எனக்குள் fantasyயினுடைய சிற்றோடை ஓடத் துவங்கியது. சின்ன வயதிலிருந்து எனக்கு குடும்பத்துக்குள்ள திடீரென ஒரு குழந்தை பிறந்து விடுவதுதான் பெரிய அதிசயமாக, மேஜிக்காக இருந்தது. ஏன்னா எனக்குத் தொடர்ந்து சகோதர சகோதரிகள் பிறந்து பிறந்து... இந்த அதிசயத்திலிருந்து என்னால மீளவே முடியலை. நான் என்ன எழுதினாலும் குழந்தை பிறப்பினுடைய ஒரு வரி தானா வந்து சேர்ந்துரும்.*

*என் தங்கைக்கு குழந்தை பிறந்தப்ப விரல் தொட்டு நாக்கில் இனிப்பு வைக்கச் சொன்னார்கள். அந்த குழந்தை பிரபஞ்சத்தின் முதல் சுவையை என் விரல்வழி நுகர, நான் சிலிர்ப்டைந்தேன். என் தங்கை சொன்னா, உன் விரல் ரேகையும் அது நாவில் ப்திஞ்சிருச்சின்னு. என்னுடைய மொத்த வாழ்க்கையே ரேகையாகி குழந்தை நாவில் பதிஞ்சிட்டதா தோணிச்சு. என் சுபாவம் விரல்வழி இன்னொரு தலைமுறைக்குள் இறங்கி ஓடும் விசித்திரமது.*

*நான் என்னுடைய நாக்கில் விரல் தொட்டு தேனை வைத்த ஆளைத் தேட ஆரம்பித்தப்ப, ஒரு மருத்துவச்சி கருப்பட்டியில் விரலை வைத்து தொட்டிருக்கிறாள். அவள் எவ்வகையிலும் எங்களுக்கு உறவில்லை. ஆனாலும் அந்த விரல் சுவை வழியே முகம் தெரியாத பெண்ணின் உருவம் உடலெங்கும் நிரம்புகிறது. இதை எழுதும்போது ஒரு கலாசாரம் தன்னுடைய நுட்பத்தை இதுபோல விரல்வழி வெளிப்படுத்துவதாக விந்தை கலையாமல் எழுதணும்.*

*இந்த காட்சிகள் எல்லாமே சாதாரண நிகழ்வுகள்தான். ஆனா இதற்குள் பல வினோதமான அர்த்தங்கள் இருக்கு. அப்போதுதான் போர்ஹேயின் எழுத்துக்கள் படிக்கக் கிடைத்தது. அவர் மொழியின் கட்டுமானத்தில் விசித்திர புதிர் பாதையாக எழுத்தை உருவாக்குவதைப் பார்த்தேன். அப்புறம் அவரை நோக்கிப் போக ஆரம்பித்தேன்....*



*...தமிழ்க் கதைகளின் மிகப்பெரிய அதிர்ச்சி தரக் கூடிய சம்பவம் என்னதுன்னு பார்த்தீங்கன்னா படுக்கையறையின் கதவு பாதி திறந்து மூடுவதுதான். இந்தப் பாதி திறந்த கதவுக்குள்ள தமிழ்ச் சமூகம் ஒரு நிமிஷம் ஆடி அடங்கி, இந்த மாதிரி எழுதி மானபங்கப்படுத்திட்டானே என்று குரல் கொடுக்கிறதா இருக்கு. தமிழில் பெரிய புரட்சிக்காரன் விபச்சாரி வீட்டுக்குப் போய் வந்தவன்தான். பெரிய கலாசார மீறல் காதல் கலப்புத் திருமணம். தமிழ் classical எழுத்தில் இதெல்லாம் அன்றாடக் காட்சிகள். தமிழில் எழுதும் பலரும் தன்னை நீதி போதகராகவோ, பிரச்சாரகனாகவோ, சமயங்களில் பாவமன்னிப்பு கேட்டு மண்டியிட்டு வாக்குமூலம் தருபவனாகவோதான் தொடர்ந்து கற்பனை செய்து எழுதிட்டு வாறாங்க....*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யார்...? யாருக்கு...?

உளிக் கீறல்களால்
சிற்கபம் உருவாக்கி
காயங்களால்....
ஆடை அணிவித்து
இரத்தக் கோடுகளால்
வாழ்க்கையை வரைவர்....

பசுமையை
சுட்டுக் கருக்கிய
இறுமாப்புடன்...
எஞ்சிய வாழ்வையும்
எரிய விட்டு
தம் வசதிக்கு மேலும்
வெளிச்சம் சேர்ப்பர்...

சுதந்திரமாக்கப்பட்ட
அவலக் குரல்களை....
குழிகளிலிடுவர்...

முச்சந்தியிலோ
வனப்புதரிலோ... மூச்சுத்திணற
நிறமெல்லாம் அழிந்து,
உருவின் ஜீவனது
பிசகிப் பறந்திடும் ஓர் நாள்...

காலத்தின் கால்களில்
வீழ்ந்து மன்றாடி...
விமோசனத்திற்கும்...
விடுதலைக்கும் இறைஞ்சி...

திராணியற்று
அறுந்து சாய்ந்தன வேர்கள்,
மௌனித் தடங்கிற்று... ஆத்மா

மரணங்களை நிர்ப்பந்திக்கும்
வன்மப் பிரயோகங்களால்...
சுபிட்சமுள்ள வாழ்வை
யார்....
யாருக்கு....
வழங்க முடியும்??

- அனார், சாய்ந்தமருது.

### பெண்கள்

அழகியவை அனைத்தும்
உதாரணங்கள்
மேன்மையானவை யாவும்
வரைவிலக்கணங்கள்.

- எம். அமலராஜ், அளவெட்டி

### தூரத்துத் துருவங்கள்

எனக்கு ஒன்றுமே தெரியாத
குஞ்சுப் பருவம்!
வீடு, பாடசாலை, தோழிகள்
பிறந்து... படித்து...
விளையாடும் வேளை!

பெண்ணுரிமைப் படைப்புக்களில்
இயற்கையின் ஒன்றிப்பால்
பொருமல், உரோமச் செறிவு,
குருதி... இப்படி ஏதோ ஏதோ....

பணம் பங்கீடாகா நோக்கில்
படுக்கையின் பங்களிப்பு
வருகிறது.

பெண் பீர்க்கங்காய்
காலச் சமாளிப்பை உணர்த்தும்
அத்தையின் வார்த்தைகள்
அரங்கேறுகின்றன.

செப்பு, சிமிழ்
போக்குவரத்து, மேளதாளம்
எனக்கும் வேடிக்கைதான்.

என்னிலும் இருமடங்கு
உடலருகில்
மூச்சுத் திணறல்,
சுவாசம், புகை வாசம்
தினமும் படுக்கையில்
அலட்டல்கள்

உடம்பில் கை ஸ்பரிசம்
தற்செயலானதல்ல
நகர்ந்து
ஒருக்களித்து கொள்வேன்.

முதுகின் மேற்பரப்பில்
மீசை ஊசிகள் பிராண்டும்
வெறுப்பு... நகர்வு.

வேளைகள் சாவதால்
இராப் பிடியிலிருந்து
உலகம் விடுதலை
என்னைப்போல.

வெறுமனே குரல்களோடு
உடல்கள் ஒட்டாத
ஒரு வாழ்க்கை
உனக்கும் எனக்கும்
கசப்புத்தான்.

- மருதமைந்தன்.

### சிரிப்பொலி

சில வேளைகளில் உன்
சிரிப்பொலி
வேலியைக் கடந்து
வீதியிலும் கேட்கும்.

அம்பாள் கபேயின்
பிளேன் ரீயும், பிறிஸ்டலும்
அடித்தபின்பு
பனி தொடங்கும் நேரம்
விரைந்து வருகையில் உன்
சிரிப்பொலி
சில வேளைகளில் கேட்கும்.

சிறிய சில்வர் பாத்திரத்தில்
தட்டினால் எழும் ஒலிபோல்
உன் சிரிப்பொலி - அதிக
தூரம் கேட்காது.
எனக்கு மட்டும் கேட்பதாக
இருக்கும்.
அந்த பிறிஸ்ரலின்
சுவையைவிட
உன் சிரிப்பொலியின் சுவை-
என்னை அதிகம் மயக்கும்.

உன் முகம் கண்டு
பல நாட்களாகிவிட்ட
வேளையில்,
உன்னை திட்ட
மனம் முனையும்போது உன்
சிரிப்பொலி - அதனை
தடுத்துவிடும்.

நேற்றும் கூட
அம்பாள் கபேயில் இருந்து
திரும்பும் வழியில் -
உன் வீட்டைக் கடக்கையில்
நீ சிரித்தது மாதிரி இருந்தது.
நிச்சயம் அது பிரமைதான்.
ஏனெனில் -
நீதான் உன் வீட்டில்
இல்லையே!

எப்படியாயினும்
நீ என்னை மறந்தும்
நான் உன்னை இழந்தும் -
எல்லாம் முடிந்த பின்பும்

உன் சிரிப்பொலியை
என்னால் மறக்க முடியவில்லை.

- இராகிதாசன்

### காத்திருப்பு

பொக்கெட்டுக்குள்
உன்னிழல் படத்தையும்
ஹார்டுக்குள்
உன் நினைகளையும்
சுமந்தபடி...
உன்னை தொடவும் முடியாமல்
விடவும் முடியாமல்
தவித்தபடி...
நெஞ்சில் விதையாகவும்
என்னால் வரையப்படும்
கவிதையாகவும்
வளர்ந்தபடி...
சந்திப்புக்களின் பசிய
ஈரங்களுடனும்
சிந்தித்த நேரங்களுடனும்...
தவிக்கும் மனமும் - இது
தொடர்ந்திட தினமும்
காத்திருப்புக்களுடன்
நானிங்கு!
பார்த்திருப்பாயோ
நீயங்கு?

- J.M.T. றொட்ரிகோ,
யாழ். பலகலைக்கழகம்.

### நன்றிகெட்டோர்

நாற்காலியில் நானமர்ந்தேன்
நாலுபேர் தூக்கி நின்றார்
இருகால்களும் இல்லாமல்
நானுருகித் தவிக்கின்றேன்,
பாய்கூடப் பக்கத்திலில்லை.

ஏறிச்செல்ல ஏணியானேன்
எத்தனைபேர் உயரே சென்றார்
எட்டடுக்கு மாடியினில்
ஏறிநின்று ஏணியினைத்
தட்டிவிட்டோர் அனேகருள்ளார்.

கைநிறையப் பொருளீந்தேன்
கைதட்டிப் புகழ்ந்துரைத்தார்
கைகளிலே கனமின்றி,
கண்கலங்கி விம்முகின்றேன்
கண்கொண்டு காண்பாரில்லை.

பால்சோறு பகிர்ந்துகொண்டேன்
பலபேரும் பக்கமிருந்தார்
பாத்திரமே பழுதடைந்து
பசியுடனே படுத்திருந்தேன்,
பசியாறியோர் ஏப்பமிட்டார்.

- ஊாவூர் நஸ்ஸாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடங்குமா டெங்கு?

**திகதி: செப்டம்பர் 29**
**இடம்: மாத்தறை மாவட்டம்**

**வைத்தியசாலைக்குப் படையெடுக்கும் நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார் டாக்டர் ஏ.ஜீ. வீரரத்ன. இளமையும் திறமையும் துடிப்பும் மிக்க அந்த இளம் டாக்டருக்கு வயது 32தான். திருமணமாகி ஒருவருடம் கூட ஆகவில்லை. மனைவி நிறைமாதக் கர்ப்பிணி. அவரின் வாரிசைச் சுமந்து கொண்டிருக்கிறாள். எதிர்காலம் பற்றிய கற்பனைகளும் கனவுகளும் பூத்துக் குலுங்கும் நேரத்தில் கருகிப் போனது அவர்களின் வாழ்வு.**

திடீரென்று அவருக்குக் காய்ச்சல். 30,1,2,3ம் திகதி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பரிதாபமாக மரணத்தைத் தழுவுகின்றார். சடலமாக வீடு வந்து சேருகின்றார். முழு மாத்தறையும் கலங்கிப்போய் நிற்கிறது. மாத்தறை இன்னும் இந்த அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை.

இந்தத் துயரச் சம்பவம் நிகழ்ந்து 3வாரங்கள் கூட ஆகவில்லை.

சிறுமி சுஜாதாவின் மரணச் செய்தி மீண்டுமொருமுறை மாத்தறையை உலுக்கி எடுத்தது. மக்களைக் கண்ணீரில் குளிப்பாட்டியது.

உயர் பெண்கள் பாடசாலையில் 9-ம் வகுப்பு மாணவி சுஜாதா. டெங்கின் கொடூரத்தை நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்லும் தேசிய பணியில் பாடசாலை சார்பாக சென்ற பயணம் அவளுக்கு இறுதிப் பயணமாக அமைந்து விட்டது. அவளும் டெங்குக்குப் பலியானாள்.

பாடசாலைக் குழுவுக்கு தலைமை தாங்கிச் சென்ற மாணவ தலைவிகளில் அவளும் ஒருத்தி. குடும்பத்தில் ஒரே பிள்ளை. செல்லமாக வளர்ந்தவள். சொல்லாமலேயே போய்விட்டாள்.

டெங்கு இரத்தபேதிக்கு இரையாகி இறுதிப்பயணம் போனவர்கள் இந்த டாக்டரும் இளஞ்சிறுமி சுஜாதாவும் மட்டுமே அல்ல. ஏராளமானோர் நாடெங்கிலும் இக்கொடிய நுளம்புத் தாக்கத்துக்கு இரையாகியுள்ளனர்.

மாத்தறை மாவட்டத்திலிருந்து ஆரம்பித்த டெங்குப் பீதி இப்போது காலி, அம்பாந்தோட்டை, குருநாகல், இரத்தினபுரி, பதுளை, கொழும்பு, கம்பஹா என மாவட்டத்திற்கு மாவட்டம் பரவிக்கொண்டே வருகின்றது.

டெங்கு ஒரு தேசியப்பிரச்சினையாக விஸ்வரூபம் எடுத்து வருகின்றது. இன்று இலங்கையில் 3000பேர் வரை டெங்கு நோய்க்கு ஆளாகியிருக்கின்றனர். இது வரை 30 பேர்வரை மரணமடைந்திருக்கின்றார்கள்.

எதிர்வரும் வாரங்களில் இத் தொகை மென்மேலும் அதிகரிக்கலாம் என்று வைத்தியர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

உலகில் வருடாந்தம் ஐந்து இலட்சம் பேர் டெங்கு வைரஸ்க்கு ஆளாகின்றனர். இதில் ஐயாயிரம் பேர்வரை மரணமாகின்றனர்.

இலங்கையில் இலங்கை தொற்றுநோய் தடுப்புப் பிரிவிடம் இது தொடர்பான திட்டவட்டமான புள்ளி விபரங்கள் இல்லை. அரசாங்க வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுபவர்களினதும் மரணிப்பவர்களினதும் எண்ணிக்கை மட்டுமே அவர்களிடம் உள்ளன.

அரசாங்க வைத்தியசாலைகளில் வெளிநோயாளர் பிரிவுகளில் மருந்து எடுப்பவர்களினதும் தனியார் மருத்துவ மனைகளில் மருந்து எடுப்பவர்கள், சிகிச்சை பெறுபவர்கள், மரணிப்பவர்கள் பற்றிய தகவல்கள் இப்பிரிவுக்குக் கிடைப்பதில்லை.

எனவே உண்மையில் இலங்கையில் டெங்கு நோயின் தாக்கம் தடுப்புப் பணிகளின் வெற்றி தோல்விகள் பற்றி நிச்சயமான முடிவுக்கு வரமுடியாதுள்ளது.

இந்த டெங்கு, இலங்கைக்கு வேண்டாத விருந்தாளியாக வந்த நோயாகும். தென் ஆபிரிக்கா, தென் அமெரிக்கா நாடுகளிலிருந்து கப்பல் அல்லது விமானம் மூலம் இலங்கைக்கு வந்து சேர்ந்திருக்கலாம் என்று டாக்டர்கள் கருதுகின்றார்கள்.



இவ்வளவு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய நுளம்பு மிகச்சிறியதானாலும் அதன் வரலாறு மிகத் தொன்மையானது. உலகில் 3000 வகையான நுளம்புகள் உள்ளன. ஆனால் அவற்றின் தோற்றம் 20 கோடி வருடங்களுக்கு அப்பால் செல்கின்றது.

டெங்குக் காய்ச்சல் இனங்காணப்பட்டு நூறு வருடங்களுக்கு மேலாகின்றன. ஆனால் இரத்தப் பேதியுடன் கூடிய காய்ச்சல் ஒரு புது வகை நோய் என அடையாளம் காணப்பட்டது 1956ல் பிலிப்பைன்சில்தான்.

1956 பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் திடீர் என இறப்பு வீதம் 5 வீதத்தால் அதிகரித்தபோது மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்போதே இந்த உண்மை கண்டுபிடிக்கப்பட்டது.

இலங்கையிலும் டெங்கு பல தசாப்தங்களாகக் காணப்பட்டாலும் இரத்தப் பேதியுடன் கூடிய நிலை 1967ல் தான் அறியப்பட்டதுடன் 08 பேர் மரணமடைந்தனர்.

1965ல் டெங்கு நோயாளர் ஒருவர் மேல் மாகாணத்தில் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டார்.

பின்னர் நோயின் தாக்கம் படிப்படியாகக் குறைந்து 1970ல் எவருமே டெங்கினால் மரணிக்கவில்லை. ஆனால் 1988ல் மீண்டும் அது தலைதூக்கியது.

1989ல் 203 பேர் இனங்காணப்பட்டு ஆய்வுகளுக்குப் பின் 87 பேர் டெங்கு நோயாளிகள் என்று ஊர்ஜிதம் செய்யப்பட்டனர். 20 பேர் இதன்போது மரணமாகினர்.


**எம்.எச். பதி-யுஸ்-ஸமான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாய்லாந்து, மியன்மார், மலேசியாவுடன் ஒப்பிடும் போது இலங்கையில் டெங்கு அவ்வளவு தூரம் உக்கிர நிலையில் இல்லை. ஆனாலும் தாய்லாந்தில் சில வருடங்களுக்கு முன் எமது நாட்டைப் போலவே இருந்தது. ஆனால் இன்று அங்கு மக்கள் ஆயிரக்கணக்கில் இதனால் இறக்கின்றனர்.

ஆகவே, இதே நிலைமை நீடித்தால் இலங்கையும் தாய்லாந்தின் நிலைக்கே தள்ளப்படலாம் என்று வைத்தியர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.



**டெங்கு வைரஸ் ஃபிளேவி விரடே(*flavi virade*) எனும் வைரஸ் இனத்தைச் சேர்ந்தது. இலங்கையில் இந்த வைரஸ்களைப் பரப்புவது மனிதனின் இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும் இருவகை நுளம்புகளே... ஏனைய நுளம்புகளுக்கும் டெங்கு நுளம்புகளுக்கும் இடையிலுள்ள வித்தியாசம் டெங்கு ஏனைய நுளம்புகளைப் போல இரவில் நடமாடாமல் பகலில் நடமாடுவதுதான்.**

### உலக நாடுகளில் டெங்கு

1979ல் கெய்ரோவில் முதன்முதல் டெங்கு ஏற்பட்ட போது முட்டுக்காலில் கடும் வருத்தம் ஏற்பட்டதால் நீஸ் பீவர் *Knees Fever* என்று அவர்கள் அதனை அழைத்தனர்.

1779ல் ஜகார்த்தாவிலும், 1780ல் அமெரிக்க பில்டெல்பியாவிலும், 1797ல் குயீன்ஸ்லாந்திலும், 1903ல் ஹவானாவிலும், 1927-28ல் கிரீஸிலும் மிகவும் பாரதூரமான முறையில் டெங்கு நோய் ஏற்பட்டது.

ஆசியாக் கண்டத்தில் முதன் முதலில் மணிலாவில் 1954ல் டெங்கு ஏற்பட்டது. அப்போது அங்கு அதனை ஹெமோர்ஹேஜிக் ∴பீவர் *Haemorrhagic Fever* என்று அழைத்தனர்.

1958ல் பாங்கொக்கில் 2500 பேருக்கு டெங்கு ஏற்பட்டு இதில் 10 வீதமானோர் மரணமடைந்தனர்.

1958ல் ஹனோய், வியட்நாமிலும் டெங்கு பரவியது.

1960 - சாய்கோன் (இப்போது ஹோஷிமின் சிட்டி என அழைக்கப்படும்) நகரில் டெங்கு 1, 2, 3, 4 என்று நான்கு வகைகள் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டது.

1960ல் 1, 2 என்பவற்றை வேறுபடுத்தினர்.

1961-63ல் 3, 4 வகைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

கம்பூச்சியாவிலே 1, 4 வகைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

1963-ல் யன்கோன் - மியன்மாரில் டெங்கு பரவியது. 70களில் உக்கிரமடைந்தது.

டெங்கு தென் கிழக்காசிய நாடுகளான பங்களாதேஷ், இந்தியா, இலங்கை, மாலைத்தீவுகளில் ஆரம்பத்தில் இருக்கவில்லை. 1963-64 களில் இந்தியாவில் மட்டும் ஓரளவு காணப்பட்டது.

1964ல் பங்களாதேஷில் அதிகமான டெங்கு நோயாளர்கள் இருந்தனர். இது டெக்கா பீவர் என்று அழைக்கப்பட்டது. இது 3வது வகைக்குரிய டெங்குவாகும்.

இதைவிட, சிங்கப்பூர், கியூபா போன்ற நாடுகளும் அமெரிக்காவை அண்டிய மேற்கிந்திய தீவுக் கூட்டங்களில் ஒட்றிகோ தீவிலும் டெங்கு அதிகளவில் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

### டெங்கு நுளம்பைப் பற்றி

ஆபோ (*Arbo*) வைரஸ் குடும்பத்தைச் சேர்ந்த பிளேவி (*Flavi*) இனத்திற்குரிய வைரஸ் ஒன்றின் மூலமே டெங்குக் காய்ச்சல் (*Dengue Fever*) பரப்பப்படுகின்றது என்று வைத்திய ஆய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆபோ என்ற குறுஞ் சொல்லுக்கு ஆத்ரேபாட் - பரவக்கூடியது என்று பொருள்.

டெங்கு வைரஸ் பிளேவி விரடே(*flavi virade*) எனும் வைரஸ் இனத்தைச் சேர்ந்தது. இலங்கையில் இந்த வைரஸ்களைப் பரப்புவது மனிதனின் இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும் இருவகை நுளம்புகளே.

எனவே, டெங்கு வைரஸின் நோய்க்காவி ஈடிஸ் இனத்துக்குரிய இரு வகை நுளம்புகளாகும்.

1. ஈடிஸ் ஈஜிப்டை - *Aedes Aegypti*
2. ஈடிஸ் அல்போபிக்டஸ் - *Aedes Allbopictus*


இவை தவிர ஈடிஸ் பொலிநெஸியன்ஸிஸ் - *Aedes Polynessiensis* ஈடிஸ் ஸ்கடர்லேரிஸ் - *Aedes Scatellaries* உட்பட இன்னும் பல வகைகள் உண்டு.

முதலிரு வகை நுளம்புகளும் சுத்தமான நீர் தேங்கியிருக்கும் இடங்களில் வாழ்வதற்கு விருப்பமுடையவை.

ஏனைய நுளம்புகளுக்கும் டெங்கு நுளம்புகளுக்கும் இடையிலுள்ள வித்தியாசம் டெங்கு ஏனைய நுளம்புகளைப் போல இரவில் நடமாடாமல் பகலில் நடமாடுவதுதான்.

டெங்கு மனிதனிடமிருந்து மனிதனுக்குப் பரவுவதில்லை. நுளம்புகள் மூலமே பரவுகின்றன. பெண் நுளம்புகளே மனித இரத்தத்தை உறிஞ்சி இந்த நோயைப் பரப்புகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இச்சூழ்நிலை காரணமாக நுளம்புகளின் முட்டை அழியாதிருப்பதுடன் இந்தக் காரணத்தினாலேயே இதன் வளர்ச்சியும் செல்வாக்குப் பெறுகின்றன.

டெங்கு நுளம்பின் முட்டை ஒரு வருடமானாலும் காய்ந்த நிலையில் அப்படியே இருந்து மீண்டும் தண்ணீருடன் சேர்ந்தவுடன் நுளம்பு பிறக்கலாம்.

இது, நுளம்புத் தடுப்புப் பணிகள் வாரம், மாதம், வருடம் என்றில்லாமல் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற அவசியத்தையே உணர்த்துகின்றது.



யானைக்கால் வியாதி போன்ற நோய்கள் வருமானம் குறைந்த குடும்பங்களிலேயே அதிகம் காணப்படுகின்றன. ஆனால் டெங்கு, போசாக்கு மட்டங்கள் பற்றிய வேறுபாடுகள் எதுவுமின்றி எல்லோருக்கும் ஏற்படலாம்.

**டெங்கு நுளம்பின் முட்டை ஒரு வருடமானாலும் காய்ந்த நிலையில் அப்படியே இருந்து மீண்டும் தண்ணீருடன் சேர்ந்தவுடன் நுளம்பு பிறக்கலாம்.**

**இது, நுளம்புத் தடுப்புப் பணிகள் வாரம், மாதம், வருடம் என்றில்லாமல் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் மேற்கொள்ளப் பட வேண்டும் என்ற அவசியத்தையே உணர்த்துகின்றது.**

*Flavi Virus* வகையைச் சேர்ந்த இது *Serotypeesoe* நால்வகை கொண்டது. மனிதனுடைய உடலுக்கு உள் செல்லும் வைரஸின் வகைக்கேற்ப நோய் நிலைமை மாறலாம். இதனை டெங்கு 1, 2, 3, 4 என்று அழைப்பர்.

இதில் டெங்கு 1-தான் அதிகமாகப் பரவுகின்றது. பொதுவாக எல்லோரையும் பீடிப்பது.

டெங்கு 2, 1942ல் சுவிட்சர்லாந்தில் பெரும் கொள்ளை நோயாகப் பரவியது.

அதே போல டெங்கு 3, கரிபியன் தீவுகளில் பரவியது. 1977-78 காலப்பகுதியில் கரிபியன் தீவுகளில் டெங்கு 1, 2 மீண்டும் பரவியது அவதானிக்கப்பட்டது.

### இனப்பெருக்கம்

பொதுவாக டெங்கு மழைக்காலங்களைத் தொடர்ந்தே பரவும். அக்டோபர் முதல் ஜனவரி வரை பருவப் பெயர்ச்சி மழைக் காலங்களிலும் ஏப்ரல் பின்னரைப் பகுதியிலும் மே, ஜுன் காலங்களிலும் டெங்கு வரக்காணலாம்.

மாரி காலம் நுளம்புகளின் வசந்த காலம். ஜுலை, ஆகஸ்ட் மாதங்களிலும், வருட இறுதி மாதமான நவம்பர் மாதத்திலும் டெங்கு கொள்ளை நோய் தலைகாட்டக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம்.

மழைக் காலங்களில் நுளம்புகள் அதிகரிப்பதற்குக் காரணம் நுளம்பு பெருகுவதற்கு உகந்த இடங்கள் அதிகரிப்பதே.

ஒரே பிரதேசம் ஒரே மாவட்டம் என்ற வரையறையின்றி இந்நோய் பரவும் தன்மை கொண்டது.

பொதுவாக ஓரளவு ஈரலிப்பான சூழ்நிலைகளிலேயே இவை வாழுகின்றன.

கடல் மட்டத்திலிருந்து 500 - 1000 அடி உயரத்தில் அமைந்துள்ள மலைநாட்டுப் பிரதேசங்களில் இந் நுளம்பினம் அதிகளவு உருவாவதில்லை. 300 - 400 அடி உயரத்திலுள்ள நகரங்களில் டெங்கு பரவியுள்ளது பற்றி 1970 - 1980 காலப் பகுதியில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதைவிட உயர்ந்த இடங்களில் டெங்கு உயிர்வாழ்வதற்கான சாத்தியக்கூறுகள் அரிது. நுவரெலியா போன்ற இடங்களில் இந்நோய் பரவுவதில்லை.

நுளம்புகளுக்கு எவ்வாறான சூழலிலும் எளிதாக வாழமுடியும். உலகிலுள்ள நுளம்புகளின் தொகையில் 3/4 பங்கு வாழ்வது ஈரவலயங்களிலாகும்.

டெங்கு முட்டையிட சிறிய சோடா மூடி போதுமானது.

### நுளம்பின் வாழ்க்கை

டெங்கு நுளம்புகளில் பெண் நுளம்பே இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும். ஆனாலும் இரத்தம் குடிக்காத நுளம்பு வகைகளும் உண்டு.

நோய் ஒருவரிலிருந்து இன்னொருவருக்கு நேரடியாகத் தொற்றுவதில்லை. இந்த ஈடிஸ் (*Aedes*) நுளம்புகள் மூலம் மட்டுமே பரப்பப்படுகின்றது.

நோய் ஒருவருக்குப் பரவுவது, நோயை ஏற்படுத்தும் வைரஸ் காவி நுளம்பு மூலம் மட்டுமே. நோயைப் பரப்பும் நுளம்பு வைரஸைப் பெறுவது இவ்வாறுதான்.

நோய் உண்டான ஒருவரின் இரத்தத்தை நுளம்பு உறிஞ்சிப் 10 நாட்களில், அந்த இரத்தத்தை உறிஞ்சும் வைரஸ் கிருமிகள் அதன் உடலில் பல மடங்கு விருத்தியாகும்.



**ஐந்தறிவு உலகம்**
முதலை வாய்க்குள் எருமை



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



நுளம்பு பிறந்து 1-2 நாட்களில் வைரஸ்"டனான இரத்தத்தை உறிஞ்சினால் 10-12 முறை மனிதர்களுக்குச் செலுத்தும் அதாவது ஒரே முறையில்.

இதன் ஆயுட்காலம் இரு வாரங்கள் மட்டுமே. இக்காலத்தில் நூறு மீட்டர் தூரம் மொத்தமாகப் பறக்கும்.

பிறந்த இடத்திலிருந்து 4 -5 கிலோ மீட்டர் தூரம் வரை செயல்படும்.

இது காலை 6 மணி முதல் காலை 9 மணி வரையும் மாலை 3 மணி முதல் 5 மணி வரையும் மனிதர்களைத் தாக்கும்.

சூரிய வெளிச்சம் இருக்கும்போதும் குறைந்த இருள் இருக்கும்போதுமே மனிதர்களைக் கடிக்கும்.

இதனால் பாடசாலையில், தொழில் நிலையங்களில், காரியாலயங்களில், வாகனங்களில் இதன் பாதிப்புக்கள் ஏற்படலாம்.

**நுளம்பு எப்படி செயல்படுகிறது?**

நுளம்பின் வாயில் நுழையும் ஒரு வகை வைரஸ் அதன் வயிற்றில் சென்று விஷமாக மாறும். இதற்கு 8 - 14 நாட்கள் வரை செல்லலாம். அதன்பின் அது இறக்கும் வரை தன் வாழ்நாள் முழுவதும் நோயைப் பரப்பும்.

டெங்கு நோயாளியின் இரத்தத்தை உறிஞ்சி அன்றே ஒருவரைக் கடித்தால் அவருக்கு நோய் பரவாது.

பெண் நுளம்பு இரத்தத்தை உறிஞ்சும்போது ஊசியை சதையினுள் நுழைக்க முன் தனது எச்சிலைத் துப்பும். அப்படிச் செய்யாவிட்டால் உறிஞ்சிய இரத்தம் ஊசியிலேயே உறைந்து கெட்டியாகிவிடும். இது நுளம்புக்கு பெரும் திண்டாட்டமாகப் போய்விடும்.

மனிதனின் இரத்தம் உடலிலிருந்து வெளியேறியவுடன் கெட்டியாகிவிடும். அப்படி கெட்டியாவதைத் தடுக்கும் ஆற்றல் நுளம்பின் எச்சிலுக்கு உண்டு.

னால் 8 - 12 நாட்களுக்குப் பின் குத்தும் ஒவ்வொரு முறையும் நுளம்பு எச்சிலுடனான வைரஸ் சுகதேகியின் உடலுக்குள் நுழையும்.

வைரஸ் எமது உடலுக்குள் சென்றதும் நோய் அறிகுறி தென்பட '3 - 15 நாட்கள் வரை எடுக்கலாம். பொதுவாக இந்த நாள் 5 - 6 வரையாகும் என்பது அனுபவங்களில் கண்ட உண்மை. இந்தக் காலத்தை *Incubation Prriod* என்பர்.

ஏனைய வைரஸ்கள் போல் டெங்கு வைரஸ்"க்கும் மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் வைரஸ் உடலினுள் சென்றால் அதற்கு எதிர்ப்புச் சக்தியை உண்டாக்கலாம். வெண்குருதிச் சிறுதுணிக்கைகள் மூலமே இது நடைபெறும். இந்த எதிர்ப்புச் சக்தியில் வைரஸ் மடிந்தால் எமக்கு டெங்கு வராது. ஆனால் யுத்தத்தில் வைரஸ் வென்றால் நாம் நோய்க்கு ஆளாகிவிடுவோம்.

இவ்வளவு வைரஸ் உடலினுள் சென்றால் நோய் உண்டாவதும் உண்டாகாமல் இருப்பதும் வெண்குருதிச் சிறுதுணிக்கைகளில் டெங்குக்கு எதிரான எதிர்ப்

தாக்காது. ஆனால் வேறு ஒரு வகை டெங்கு தாக்க முடியும் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

ஒருவருக்கு ஒரு வைரஸ் நோய் ஏற்பட்டால் அவருக்கு அந்நோய்க்கு எதிரான எதிர்ப்புச் சக்தி ஏற்படுகின்றது. ஆனால் ஒரு டெங்கு வைரஸ் தொற்றினால் ஏற்படும் பிறபொருள் எதிரி மறுமுறை வேறு ஒரு டெங்கு வைரஸ் கிருமியைச் சந்தித்தால் கூடிய தாக்கமுள்ள நோய் நிலைமை தோன்றலாம்.

எனவே டெங்கு இரத்தப் பேதி ஏற்படுபவர்களில் 90 வீதமானோர் முன்பு ஒரு தடவை அல்லது இரு தடவைகள் டெங்குக் காய்ச்சலால் தாக்கப்பட்டவர்களே என்பது தெரியவருகின்றது.

டெங்கு ஏற்பட்டவர்களின் மரண வீதம் அதிகம் *DHF, DSS* நோய்கள் ஏற்படக் காரணம் நிச்சயமாக கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் டெங்கு வைரஸ் உடலுக்குள் நுழைவதால் ஏற்படுகின்றது என்பது தெளிவு.

இதற்குப் பலியானோர் ஆரோக்கியமான இள வயதி



**ஒருவருக்கு ஒரு வைரஸ் நோய் ஏற்பட்டால் அவருக்கு அந்நோய்க்கு எதிரான எதிர்ப்புச் சக்தி ஏற்படுகின்றது. ஆனால் ஒரு டெங்கு வைரஸ் தொற்றினால் ஏற்படும் பிறபொருள் எதிரி மறுமுறை வேறு ஒரு டெங்கு வைரஸ் கிருமியைச் சந்தித்தால் இன்னும் கூடிய தாக்கமுள்ள நோய் நிலைமை தோன்றலாம்.**

இவ்வாறு கெட்டியாவதைத் தடுக்க நுளம்பு இரத்தத்தை உறிஞ்சியபின் வாயினுள் நுழைந்த வைரஸ் அதன் எச்சில் சுரக்கும் இடம்வரை செல்லவே அந்த காலம் தேவைப்படும்.

அதன் பின் தொடர்ச்சியாக எச்சில் சுரக்குமிடத்தில் வைரஸ் இருக்கும்

புச் சக்தியில் *Anty body* வென்று நோய் குணமாகினால் அந்த எதிர்ப்புச் சக்தி 9 மாதங்கள் வரை தாக்குப் பிடிக்கும்.

ஆனால் டெங்கு வைரஸில் 4 வகைகள் உண்டு என்று ஏற்கனவே குறிப்பிட்டோம். ஒரு வகை டெங்கு தாக்கினால் மீண்டும் அதே வைரஸ்

னரும், சிறுவர்களுமே. எனினும் வயது வேறுபாடின்றி எவரும் பாதிக்கப்படலாம்.

**படித்தரங்கள்**

☞ 4 வகைகளும் மனிதனை தாக்கலாம். ஆனால் ஒரு தடவையில் தாக்காது. ஆரம்பத்தில் தக்க சிகிச்சைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் அடுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டங்களை அடைய நேரிடும்.

1வது- 2வது படித்தரங்களும் குணப்படுத்தக்கூடியவை. ஆரம்ப கட்டங்களாகும்.

3 - 4ம் கட்டங்கள் ஆபத்தானவை. நோய் குறித்து மிகவும் விழிப்புணர்வு தேவை.

வாந்தியிலும் மலம் கழிக்கும்போதும் இரத்தம் வெளியேறலாம். சிவப்பு, கபில நிற இரத்தம் வெளியேறலாம். ஈரல் வீங்கும். தொடர்ச்சியான வயிற்று வலி, உடலில் இரத்தத் தழும்புகள் தோன்றும். மருத்துவமனைகளில் தங்கி சிகிச்சை பெற வேண்டும்.

**குணமாகும் சந்தர்ப்பத்தில் உடல் வெளிறிக் காணப்பட்டால் இலேசான வியர்வை தோலைத் தொடும்போது, குளிர்த்தன்மை, கூடுதலான நாடித் துடிப்பு என்பவை காணப்படும். பொதுவாக காய்ச்சல் குறையும் வேளையில் நாடித்துடிப்பு மந்தமாக நிகழ வேண்டும். அல்லாமல், மேற் குறித்த அறிகுறிகள் நோயாளியிடம் தென்படுமாயின் உடனடியாக நோயாளியை மருத்துவ மனையில் அனுமதித்தல் வேண்டும்.**



**2வது கட்டம்:** தீவிர காய்ச்சல், தலைவலி, முகத்தில் அரிப்பு, கை, கால்களில், மூட்டுக்களில் வலி, அடி வயிற்றில் வலி, வாந்தி, குமட்டல். மூன்று தினங்களில் குணம் பெறலாம். ஆனால் வைரஸ் அழிந்து முடிய அதிக நாட்கள் எடுக்கலாம்.

### டெங்கு அதிர்ச்சி

☞ மிக மிக உயிராபத்தானது. உடல் குளிர்ச்சியடையும். தொடர் தாக்க மயக்கம், சோர்வு நிலை, உடல் வெளிறும். சிறு குழந்தைகளானால் நீலம் பாரிக்கும். போதிய ஓய்வு அவசியம். அதுவும் ஒருவகை சிகிச்சை முறையே.

### டெங்கு எப்படி உடலைத் தாக்குகின்றது?

ஒரு நோயால் பீடிக்கப்பட்டவுடன் ஆதாரமாக குருதிப் பாதையிலுள்ள நீர், பிளாஸ்மா எனும் பகுதி, இரத்த நாளங்களைச் சுற்றியுள்ள இழையங்களில் பரவுகின்றது. இந்த நோயின் தன்மை 2 -3 நாட்களுக்கு மட்டும் நிகழ்வதுடன், இது மேலெழுந்து உச்ச நிலையை அடைவது காய்ச்சல் தோன்றி 4 - 5 நாட்களின் பின்னராகும்.

2 - 3 நாட்களின் பின் உடலின் நீர் வெளியேற்றத்துடன் உடலிலுள்ள குருதியின் அளவும் குறைவடைகின்றது. இச்செயற்பாட்டிற்குச் சமனாக குருதி அமுக்கமானது தாழ்வடைவதுடன் நோயாளி அதிர்ச்சி எனும் கடுமையான நிலையை எய்துவர்.

டெங்கு நோய்க்கு ஆளான அதிகமானோர்க்கு தமது உடலிலிருந்து நீர் வெளியேறத் தொடங்கியவுடன் அல்லது அதற்கு முன்னர் குருதி வெளியேறும் வாய்ப்புக்கள் உண்டு.

இவ்வாறு இரத்தம் வடிதல், உடல் மூக்கு, வாய், முரசு, பல்வேர் மற்றும் குடல் ஆகிய பகுதிகளிலிருந்தும் வெளியேறலாம். இவை சிறிய புள்ளிகளாகவோ, தழும்புகளாகவோ தோற்றமளிக்கலாம்.

இவ்வாறான நிலை உண்டாகும் போது இரைப்பையில் குருதிச் சுற்றோட்டம் அதிகரிக்க வாய்ப்புண்டு. இரைப்பை பூராகவும் குருதி பாயும் போது ஏற்படும் அமிலத் தன்மை காரணமாக வாந்தி கபிலநிறமாக வெளியேறும்.

நிலைமை இவ்வாறிருக்க காய்ச்சல் அதிகரிப்பதுடன் நான்கு ஐந்து தினங்களின் பின் காய்ச்சல் குறையலாம். இது அதிர்ச்சி காரணமாக ஏற்படும் சிறு பிரதிபலனாகும், பூரண சுகத்திற்குரிய அறிகுறியைக் காட்டாது. திடீர் என்று காய்ச்சல் குறைவது கண்டு நோயாளர் சுகமடைந்துவிட்டார் என்ற முடிவிற்கு வர முடியாது என்பது முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயமாகும்.

குணமாகும் சந்தர்ப்பத்தில் உடல் வெளிறிக் காணப்பட்டால் இலேசான வியர்வை தோலைத் தொடும்போது, குளிர்த்தன்மை, கூடுதலான



நாடித் துடிப்பு என்பவை காணப்படும். பொதுவாக, காய்ச்சல் குறையும் வேளையில் நாடித்துடிப்பு மந்தமாக நிகழ வேண்டியதுடன் இவ்வாறான அறிகுறிகள் நோயாளியிடம் தென்படுமாயின் உடனடியாக நோயாளியை மருத்துவ மனையில் அனுமதித்தல் வேண்டும்.

மேலும் அதிகமானோர் அக்கறை காட்டாவிட்டாலும் பொதுவான காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 3 - 4 தினங்களின் பின்னர் இவ்வாறான அறிகுறிகள் தென்படுகின்றனவா என மிக அவதானத்துடன் இருப்பது முக்கியமானதாகும்.

### தடுப்பு முயற்சிகள்

1996 டிசம்பர் 5ம் திகதி அப்போதைய சுகாதார அமைச்சர் **"தேசிய டெங்கு தடுப்பும் தினம்"** என்று ஒரு தினத்தைப் பிரகடனப்படுத்தினார்.

அன்று பாடசாலை மாணவர்களுடன் வீடுகள்தோறும் சென்று மக்களை விழிப்படையச் செய்யும் வேலைத் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. நோய் பரப்பும் நுளம்புகள் வளரும் இடங்களை நீக்குதல், நுளம்புக் கொல்லி மருந்துகளைத் தெளித்தல், மக்களுக்கு விழிப்பூட்டும் கருத்தரங்குகள், பத்திரிகை, இலத்திரனியல் ஊடகங்கள், வீடியோ நாடாக்கள், திரைப்படங்கள் ஆகிய எல்லாவற்றையும் பிரசாரத்திற்காக அவர்கள் உபயோகப்படுத்தினர்.

பிரதேச மட்டத்தில் இதற்கான கமிட்டிகளும் விழிப்புக்குழுக்களும் ஏற்படுத்தப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சபை வழக்கு தாக்கல் செய்துள்ளது.

பிராந்திய மட்டங்களில் அச்சு / இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பல சமூக சேவை தொண்டர் நிலையங்கள் போஸ்டர், துண்டுப் பிரசுரங்கள் மூலம் பிரசாரம் செய்கின்றனர்.

மாத்தறை மாவட்டத்தில் ஒரு தேதியில் சகல பாடசாலைகளும் மூடப்பட்டன. காலி மாவட்டத்தில் பிராந்திய சுகாதாரப் பணிமனை நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. மேல் மாகாணத்திலும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சிரமதானங்கள் இடம்பெற்றன.

சுகாதார அமைச்சர் திரு. டபிள்யூ. டி. ஜோன் செனவிரத்ன வாரத்தில் ஒரு நாளில் காரியாலயங்களில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு பணித்துள்ளார்.

டெங்கு பரவக்கூடிய வகையில் குப்பை கூளங்களை போட்டவர்கள் 104 பேருக்கு மேல் கொழும்பு மாநகர

சிங்கப்பூரில் டெங்கு கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவரப் பட்டது, டெங்கு ஏற்படும் இடங்களை சுத்தமாக வைத்திருப்பதால் மட்டுமல்ல. அவ்வாறான இடங்களை ஏற்படுத்துபவர்களைக் கண்டுபிடித்து சட்டத்தின் மூலம் தண்டனை வழங்கப்பட்டதன் மூலமே என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

ஒரு கையில் சமய நூலும் மறு கையில் தடியுடனுமே இச்செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வெளிநாடுகளில் இவ்வாறு செய்யப்பட்டாலும் இலங்கையில் செய்யக்கூடிய வாய்ப்புக்கள் அரிது.

இலங்கையில் நடைமுறையிலுள்ள சட்டத்திற்கமைய தமது வீட்டு முற்றத்தை அசுத்தமாக வைத்திருப்பவர்களுக்கு எதிராக வழக்கு தொடரும் உரிமை மாகாண சபைகளுக்குண்டு.

எனினும் வழக்கு தொடர்ந்து செயல்பட மாதக்கணக்கில் அல்லது வருடக்கணக்கில் செல்லலாம்.

மேலும் ஒட்றிகோ தீவில் டெங்கு நோய் தடுப்பதற்கு அந்நாட்டு அரசு விமானம் மூலம் கிருமிநாசினிகளைத் தெளித்து உதவியுள்ளது.

சிங்கப்பூர், கியூபா போன்ற நாடுகளில் கிருமிநாசினிகளைத் தெளிப்பதற்குச் செய்யும் செலவுகளைத் தவிர்த்து, நுளம்புக் காவிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு மக்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொண்டுள்ளமை தெரியவருகின்றது.

இதிலிருந்து பணத்தைப் பயன்படுத்துவதைவிட மக்களின் பங்களிப்பைப் பயன்படுத்துவதே சாலச் சிறந்தது என்பது தெரியவருகின்றது.

பிரான்ஸ் போன்ற நாடுகளில் டெங்கு தடுப்பூசிகளை கண்டுபிடிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

கியூபாவில் ஒரு வகை புகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், அதன்மூலம் டெங்கு நுளம்புகளை அடியோடு ஒழிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## டெங்கு

டெங்குக் காய்ச்சலின் நோய்க்காவி வைரஸ் ஒன்றாகும். ஆனால் இந்த வைரஸை நோயாளியிடமிருந்து சுகதேகி ஒருவருக்கு கடத்துவது ஈடிஸ், ஈஜிப்டை, ஈடிஸ் எல்போபிக்டஸ் ஆகிய இரு வகை நுளம்புகளே.

டெங்கு நுளம்புகள் கடிப்பது பெரும்பாலும் பகல் காலங்களிலேயே. விசேடமாக காலை, மாலை நேரங்களிலேயே. அதனால் பாடசாலை, காரியாலயம், வேலைத்தலங்களில், வாகனங்களில் இது போன்ற நுளம்புகள் கடிக்கலாம்.

டெங்கு நுளம்புகள் உண்டாவது சுத்தமான பாத்திரங்களிலேயே. அங்குமிங்கும் எறியப்பட்டுள்ள பாத்திரங்களை அழித்துவிடுவது டெங்கு நோய் ஒழிப்புக்கான சிறந்த வழியாகும்.

வீட்டுத் தோட்டத்தில் வீசும் சிரட்டையில் உங்கள் அன்புக் குழந்தையின் எமன் இருக்கலாம்.

## நுளம்பு வகைகள்

உலகில் 3000 வகைகள் உண்டு. இலங்கையில் 140 வகைகள் உள்ளன. இவற்றில் 10 வகை நுளம்பு இனங்களே நோய்களைப் பரப்பி வருகின்றன.

இவற்றில் 4 வகையான நுளம்புகளும் அவை பரப்பும் நோய்களும்...

1. அனோபிலஸ் கியூலெசி-பெஸிஸ் - **மலேரியா**

**சிங்கப்பூரில் டெங்கு கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது, இடங்களை சுத்தமாக வைத்திருப்பதால் மட்டுமல்ல. அவ்வாறான இடங்களை ஏற்படுத்துபவர்களைக் கண்டுபிடித்து சட்டத்தின் மூலம் தண்டனை வழங்கப்பட்டதன் மூலமே என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.... இலங்கையிலும் நடைமுறையிலுள்ள சட்டத்திற்கு அமைய தமது வீட்டு முற்றத்தை அசுத்தமாக வைத்திருப்பவர்களுக்கு எதிராக வழக்கு தொடரும் உரிமை மாகாணசபைகளுக்குண்டு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கியூலெக்ஸ் ஜெலிடஸ் - **மூளைக் காய்ச்சல் (ஜப்பான் என்சபலைடிஸ்)**

3. கியூலெக்ஸ்க்வின்கி பெசியேட்டஸ் - **யானைக் கால் (பைலேரியா)**

4. ஈடிஸ் இஜிப்டைடிஸ், ஈடிஸ் அல்போபிக்டஸ் - **டெங்கு**

இவற்றில் 1,2, 3 வகைகளையும் குணப்படுத்த தடுப்பு மருந்துகளும் சிகிச்சை முறைகளும் இல்லை.

ஆனால் டெங்குக்கு தடுப்பு மருந்துகளும் சிகிச்சை



முறைகளும் இல்லை. நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதே சிறந்ததும் பாதுகாப்பாதுமான வழியாகும்.

**டெங்கு நுளம்புகளின் விருத்தி**

- சுத்தமான நீரில்
- இருளான இடங்களில்
- வெற்றுப் பாத்திரங்களில், போத்தல்கள், டின்கள்
- பழைய சட்டி பானைகள்
- கோம்பைகள், சிரட்டைகள்
- டயர்கள்
- தண்ணீர் ஓடாது தடைப்பட்டுள்ள வடி பீலிகள் - கான்கள்
- தண்ணீர்க் குடம், மற்றும் நீர் தேங்கும் பாத்திரங்கள்
- பூச்சாடிகள்
- மேசைக் கால்களுக்கு எறும்பு வராமல் வைக்கும் நீர்ப் பாத்திரம்
- பயன்படுத்தாத வெற்று மீன் தொட்டிகள்
- அடிக்கடி மாற்றாத தேவைக்கு வைத்துள்ள தண்ணீர்
- மாணிக்கக்கற்கள் தோண்டிய குழிகள்
- செங்கல், ஓடு, சட்டி பானை, மட்பாண்டங்கள் தயாரிக்கும் இடங்கள்
- பொலிதீன் உறைகள், இற்றுப்போகாத பிளாஸ்டிக் பாத்திரங்கள்
- குப்பை கூளங்கள் கொட்டப்படும் இடங்கள்
- நகரங்களில் தொலைபேசி, மின்சாரம், குடிநீர் வழங்க தோண்டப்படும் குழிகள்

பொதுவாக ஈரலிப்பான சூழ்நிலைகளிலேயே நுளம்புகள் வாழும். இங்கு முட்டை அழியாதிருப்பதுடன் இதன் பெருக்கம் அதிகம்.

**தடுப்பு முறைகள்**

1. வெற்று டின்கள், பாத்திரங்கள், போத்தல்கள், சிரட்டைகள், தயிர்ச் சட்டிகள் போன்றவற்றை மழைநீர் தேங்காதவாறு உடைத்து விடுங்கள். அல்லது தலைகீழாக புரட்டி விடுங்கள்.

2. தேங்காய், குரும்பைக் கோம்பைகளை வெட்டிவிடுங்கள்

3. கூரை வடிபீலிகளிலுள்ள இலைதழைகளை அகற்றிவிடுங்கள்

4. வடிகால்களை மழைநீர் தேங்காது வடிந்து செல்லக் வகையில் செப்பனிடுங்கள்.

5. டயர்களில் மண்ணை நிரப்பிவிடுங்கள். அல்லது நீர் தேங்காது வடியக் கூடிய வகையில் துளைகளை இடுங்கள்.

6. பூச்சாடி, எறும்பு வருவதைத் தடுக்க வைக்கும் பாத்திரங்களில் உப்பு, சவர்க்காரத்தூள் போன்றவற்றை சேர்த்துவிடுங்கள்.

7. நீர் சேகரித்து வைக்கும் பாத்திரங்களிலுள்ள நீரை அடிக்கடி மாற்றுங்கள். நன்றாக தேய்த்து தூரிகையினால் கழுவுங்கள். நன்றாக மூடி வையுங்கள்.

8. வீடு, பாடசாலை, காரியாலயங்களின் அக்கம் பக்கத்தை சுத்தமாக வைத்திருங்கள். குப்பை கூளங்களைத் தீயிடுங்கள் அல்லது குழி தோண்டிப் புதைத்து விடுங்கள்.

**பலனளிக்காத தடுப்பு முறைகள்**

1. கிருமிநாசினிகள், நுளம்பு ஒழிப்பில் பங்களிப்புச் செய்யவில்லை.
2. மலேரியா ஒழிப்பில் DDT அல்லது மலத்தியன் சுவர்களில் அடித்து வைப்பது பரிகாரமல்ல. காரணம் டெங்கு நுளம்பு சுவர்களில் அடைவது இல்லை.
3. டெங்கு நுளம்பு பகல் பொழுதுகளில் நடமாடுவதால் நுளம்புச் சுருள்கள், நுளம்பு வலைகள் பலனளிப்பதில்லை.

**டெங்குக் காய்ச்சல்**

டெங்குக் காய்ச்சல் சுலப நோய் நிலையாகும். அதன் அறிகுறிகளாவன....

- 2-3 தினங்கள் கடுமையான காய்ச்சல்
- தலைவலி, இடுப்பு வலி, வாந்தி
- உடல் வலி
- கண்குழி வலித்தல், எரிவு



- வயிற்று வலி போன்றன

அதிகமானவர்களிடம் இந்த நோய் அறிகுறி சில நாட்களில் மறைந்து போகும். எனினும் சிலரிடம் டெங்கு இரத்தபேதி நிலை வளர்ச்சியடைய இடமுண்டு.

**டெங்கு இரத்த பேதிக் காய்ச்சல்**

- கடுங் காய்ச்சல்
- 103 - 105 பாகை F அல்லது 39-40 பாகை C
- அமைதியின்மை - கடுமையான சோர்வு
- தோலுக்குக் கீழ் சிறிய இரத்தத் தழும்புகள் தோன்றுதல்
- இரத்தம் கலந்த அல்லது கபில நிற வாந்தி
- மூக்கில் இரத்தம் வடிதல்
- கண் சிவத்தல்
- முரசில் இரத்தம் வடிதல்
- மலத்தில் இரத்தம் கலந்திருத்தல் அல்லது மலம் கறுப்பு நிறமாதல்

டெங்கு இரத்த பேதிக் காய்ச்சல் ஆபத்தான நோய் நிலை. குறிப்பிட்ட அறிகுறிகள் ஒன்றல்லது பல இருந்தால் அவசரமாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லவும்.

**நுளம்பின் வாயில் நுழையும் ஒரு வகை வைரஸ் அதன் வயிற்றில் சென்று விஷமாக மாறும். இதற்கு 8 - 14 நாட்கள் வரை செல்லலாம். அதன்பின் அது இறக்கும் வரை தன் வாழ்நாள் முழுவதும் நோயைப் பரப்பும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கவனிக்கவும்:**

டெங்கு இரத்த பேதிக் காய்ச்சலும், சில நோயாளிகளுக்கு திடீர் என்று குறையலாம். எனினும் நோய்த் தன்மை - வருத்தம் தொடர்ந்து இருக்கும்.

அத்துடன் -

- உடல் குளிர்ச்சியடைதல்
- சேர்வடைதல்
- கலவரமடைதல் - தூக்க மயக்கம்
- மூச்சு விடுவது, நாடித் துடிப்பு வேகம் அதிகரிப்பு போன்ற அறிகுறிகள் தோன்றலாம்.

டெங்கு அதிர்ச்சி என்ற நிலை என்று கருதப்படும் இந்நிலை பெரும் ஆபத்தான தாகும். நோயாளியை உடன் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

**காய்ச்சல் ஏற்பட்டவுடன்...**

- முடியுமானவரை ஓய்வு எடுங்கள். விசேடமாக சிறு குழந்தைகளை பாடசாலைக்கு அனுப்பாமல் படுக்கையில் ஓய்வு எடுக்கச் செய்யுங்கள்.
- நல்ல காற்றோட்டமுள்ள அறையில தங்க வையுங்கள்.
- மெல்லிய இறுக்கமற்ற ஆடைகளை அணிவியுங்கள்.
- கடும் காய்ச்சல் இருப்பின் காய்ச்சலைக் குறைக்க குளிர்ந்த நீரில்




நனைத்த துணியொன்றினால் உடலைத் துடையுங்கள்.
- அதிகமதிகமாக நீராகாரங்கள், பானங்கள் பருகக் கொடுங்கள்.
- அஸ்பிரின், டிஸ்பிரின் அடங்கிய மருந்து வகைகளைக் கொடுக்க வேண்டாம்.
- பெனடோல், பெரசிட்டமோல் போன்றவற்றை ஒரு நாளைக்கு நான்கு தடவைகளுக்கு மேல் கொடுக்கக் கூடாது.
- உங்கள் குழந்தைக்கு தடிமன், இருமல் வேறு காரணம் இன்றி காய்ச்சல் வந்தால் எச்சரிக்கையாக வைத்திய ஆலோசனையைப் பெறுங்கள்.

டெங்கு இரத்தப் பேதி / டெங்குக் காய்ச்சல் அறிகுறிகளில் அவதானமாக இருங்கள். இதுபோன்ற அறிகுறிகள் தென்பட்டால் தாமதிக்காமல் வைத்தியசாலைக்கு / வைத்தியரிடம் நோயாளியை கொண்டு செல்லுங்கள்.

### இதோ நுளம்பு!

பொதுவாக ஈடிஸ் வகை நுளம்புகளின் வயிற்றின் நுனியிலும் மத்தியிலும் சற்று நேரான இரு கோடுகள் இருக்கும். முதுகில் வெள்ளைக் கோடுகள், வெள்ளைத் தழும்பு, வெள்ளை வைரம் அமைந்துள்ள முறையில் அடையாளம் காணலாம்.

**ஈடிஸ் ஈஜிப்டை - பெண் நுளம்பு** கறுப்பு நிறம், அளவில் சிறியது, கால்களில் வெள்ளை வைரம் இருக்கும். நுளம்பின் தலைக்குப் பின்புறமாக பிடரிப் பகுதியில் வெள்ளை நிறமான கோடுகளைக் காணலாம். நெஞ்சறைப் பகுதியில் வெள்ளை நிறக் கோடு ஒன்றையும் காணலாம்.

**ஈடிஸ் எல்போபிக்டஸ்** கறுப்பு நிறம், அளவில்சிறியது. கால்களில் வெள்ளை வயிரம் இருக்கும். பிடரியில் தனிக் கோடு மட்டுமே இருக்கும்.

எப்படி இருப்பினும் கறுப்பு நிற நுளம்பின் வெள்ளை நிற வய்ரம் ஈடிஸ் வகைக்கே உரிய இலட்சணமாகும்.

### பல பெயர்கள்

டெங்கு என்பது தென் ஆபிரிக்கச் சொல் ஆகும். இதன் பொருள் எலும்பு முறிவு என்பதாகும்.

இதேபோல பல்வேறு நாடுகள் டெங்கு நோயை பல் வேறு பெயர்களில் அழைக்கின்றனர். அவற்றில் சில...



டெண்டி பீவர், *Denty Fever*, டெங்குரோ *Denguero*, டெங்கா *Denga*, டுங்கா *Dunga*, பிரேக்போன் ஃபீவர் *break bone Fever*, பௌஜட் *bouguet*, 7நாள்பீவர் *Sevenday Fever*, பொனன் *bonon*, செப்பனோனாடா *Chapeno-nada*, கியூபல் *Knieueble*, டொக்கிவ்அனா *Tok kive ana*, மல் டீ ஜெனொக்ஸ் *mal de genoux*, ஹோமாமுநு *homa mgnu*, குப் டீ பா *Coup-d-barre*. •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இன்டர்நெட்டிலிருந்து....
குட்டிக்கதை

# எல்லாம் தெரிந்தவன்

"நந்தினியிடம் இன்றைக்கே 'ஐ லவ் யூ' சொல்லிவிடலாம்...." என்று தீர்மானித்துக்கொண்டான் பரத். அவனைப் பற்றி முதல்முதலில் உள்ளூர்ப் பத்திரிகையில் எழுதியவள் நந்தினி.

'உலகின் அதிசய மனிதன்... எதைப் பற்றிக் கேட்டாலும் பதில் சொல்கிறார்.

**அவளது அந்த அக்கறைக்கும் கவனிப்புக்கும் பரிசுதர விரும்புபவன் போன்ற தொனியில் "நந்தினி.. உன் தயக்கத்தை நானே தீர்த்துவிடுகிறேன். ம்.. நம் கல்யாணத்தை எப்போது வைத்துக்கொள்ளலாம்...?" என்றான்.**

உலகின் அதிக டேட்டாபேஸ் உள்ள கம்ப்யூட்டருக்கு, இந்தியாவின் மனிதச் சவால்' என்று எழுதியிருந்தாள்.

உண்மையில், பரத் அதற்கு முழுக்கத் தகுதியானவன். அது எப்படி என்று தெரியவில்லை. பதினைந்தாவது வயதில் 'அந்த'த் திறமை தனக்கு இருப்பதை உணர்ந்தான். யார் எதைக் கேட்டாலும் அதற்கான பதில், இவனுக்குச் சந்தேகமில்லாமல் மூளையில் பளிச்சிட்டது.



'தாமிரத்தின் இரசாயனவியல் குறியீடு என்ன? செக்கோஸ்லோவேகியாவில் எத்தனை மாகாணம்...? இடைக்காலச் சோழர்களில் தாவர விரும்பியான மன்னன் எவன்..? பதினொன்றின் வர்க்கமூலம் என்ன...? சந்தன வாசனையோடு கூடிய கழிவை வெளியேற்றும் காட்டுப் பன்றி, ஆபிரிக்காவின் எந்தப் பகுதியில் இருக்கிறது..? 'செஸ்'ஸில் கார்ப்போவ் தேசிய லெவலில் எத்தனை முறை வென்றிருக்கிறார்...?'

எதைக் கேட்டாலும் 'டக்... டக்' கென்று பதில் சொன்னான்.

'பரத் - ஆராய்ச்சிக்குரிய ஒரு மனித பொக்கிஷம்' என்ற ஆங்கிலப் பத்திரிகை ஒன்று தலையங்கம் எழுதியது.

தொலைக்காட்சி, வானொலி நிலையங்கள் இவன் பேட்டியை ஆர்வத்தோடு ஒளி, ஒலிபரப்பின. ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யும் மருந்து தயாரித்து வெளியிடும் கம்பெனி ஒன்று இவனை விளம்பரத்தில் நடிக்க வைப்பதற்காக இவன் வீட்டுக்கு நடையாய் நடந்தது. அரசியல் கட்சிகள் இவனைத் தங்கள் பக்கம் இழுத்துக்கொண்டு ஆதாயம் தேட அலைந்தன.

இது மறுபிறவிக் கோளாறா, வேறு ஏதாவதா என்று இவனே ஐந்து வருடங்களாகக் குழம்பிக்கொண்டிருக்க, தற்செயலாகச் சந்தித்த நந்தினிதான் ஒரு பிரபல மனோதத்துவ நிபுணரிடம் இவனை அழைத்துச் சென்றாள்.

"இந்தத் திறமை எப்படி வந்தது என்று யோசிக்கிறதை மட்டும் நிறுத்திடுங்க... மற்றபடி எந்தப் பிரச்சினையும் இதனால் இருக்காது..." என்று சொல்லிவிட்டார் டொக்டர்.

அப்போது இவனைப் பற்றி பத்திரிகையில் எழுதியதுடன், நேரம் கிடைக்கும் போதெல்லாம் இவனைச் சந்திக்க வந்துவிடுவாள் நந்தினி. மாலை 5 மணிக்கு வந்தால் இரவு 10 மணிக்குத்தான் போவாள். இவனைப் பற்றிய செய்தியைப் படித்துவிட்டுக் கேள்விகள் கேட்க வருகிறவர்களைப் பேசிச் சமாளிப்பாள்...

"ஓகே! இனி நாளைக்கு வாங்க... மணி பத்தாச்சு" என்று விரட்டுவாள்.

ஏறக்குறைய இவனைப் போஷிப்பவளாக, இவனிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டவளாக, அக்கறையாக நடந்துகொண்டாள்.

'மிக இனிமையான பெண்' என்று இவன் நினைத்துக்கொண்டிருக்கும் போதே "ஹாய் பரத்" என்றபடி நந்தினி நுழைந்தாள்.

முகம் மலர வரவேற்றான். "வா நந்தினி. உன்னைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டிருந்தேன்" என்றான்.

"என்ன நினைத்துக் கொண்டிருந்தீர்கள் என்று சொன்னால்தானே எனக்குத் தெரியும். உங்களைப் போல எல்லாம் தெரிந்தவளா நான்?" என்று சிரித்தாள்.

தன்னைப் பற்றி அவள் எவ்வளவு உயர்வாக நினைத்துக் கொண்டிருக்கிறாள் என்பது பரத்துக்கு மகிழ்ச்சி தந்தது. அவளது அந்த அக்கறைக்கும் கவனிப்புக்கும் பரிசுதர விரும்புபவன் போன்ற தொனியில் "நந்தினி.. உன் தயக்கத்தை நானே தீர்த்துவிடுகிறேன். ம்.. நம் கல்யாணத்தை எப்போது வைத்துக்கொள்ளலாம், சொல்?" என்றான்.

அவ்வளவுதான்... வெடித்தாள் நந்தினி. கோபம் கொண்டவளாக படபடவென்று கத்தி, பொரிந்து தள்ளினாள். அடுத்து வந்த சுமார் அரை மணி நேரத்துக்கு தொடர்ந்து அவள் கத்திய தன் சாராம்சம் இதுதான்:

"நான் உன்னிடம் ஒரு சினேகிதியாகத்தானே பழகினேன். ஒரு நல்ல நண்பனுக்குத்தானே உதவி செய்யறதாய் நினைச்சிருந்தேன்... இப்பிடிப் பல்லை இளிச்சிட்டியே.. முட்டாள்... ஒரு பெண்ணின் மனதைக் கூடப் புரிந்துகொள்ள முடியாத முட்டாள்... வடிகட்டின முட்டாள்..."

- கோ. ராஜலட்சுமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆத்மதரிசனம்

கோபிகிருஷ்ணன்

"நீங்கள் யார்?"

"மன்னிக்க வேண்டும் எனக்குத் தெரியாது"

"என்ன விநோதமாக இருக்கிறதே! நீங்கள் யார் என்பது உங்களுக்கே தெரியாதா! ஹஹ்ஹஹ்ஹா!"

"உண்மையிலேயே தெரியாது. நான் ஏதோ விளையாட்டுக்குச் சொல்லவில்லை"

"மிகவும் வேடிக்கையாக இருக்கிறது. நீங்கள் சுவாதீனமாகத்தானே இருக்கிறீர்கள்?"

"அப்படித்தான் நம்பிக்கொண்டிருக்கிறேன். அப்படி நினைத்துத்தான் எனக்கு ஒரு கம்பெனியில் வேலை போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். பெரியவர்களெல்லாம் சொல்லி வைத்திருக்கிறார்களே, 'பைத்தியக்கார உலகமடா இது' என்று. அதுவும் சகல விதத்திலும் உண்மையாக இருக்கலாம். நீங்களும் பெரியவராக இருக்கிறீர்கள். இன்றைக்கு இருக்கிற சமூகச் சூழலில் ஒருவன் சுவாதீனமாக இருக்கமுடியும் என்று நீங்கள் நினைப்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான குறைந்தபட்ச சுவாதீனம் இருப்பதே மகாப் பெரிய விஷயம். உங்களுக்குத் தெரியுமா பைத்தியக்கார ஆஸ்பத்திரி என்று சொல்கிறார்களே மன நலக் காப்பகம், அங்கு எனக்கு நான்கைந்து உற்ற நண்பர்கள் இருக்கிறார்கள். ஒரு நாள் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தேன். பேச்சு விளையாட்டுக்கள் பற்றியும் குறிப்பாகக் கால்பந்தாட்டம் நோக்கியும் திரும்பியது.

ஒரு நண்பர் ரொம்பவும் துக்கப்பட்டுப் போனார். 'பாவம் ஒரு கால்பந்தை வைத்துக்கொண்டு விளையாடும் அளவுக்கு நாட்டில் நிதிநிலை வறண்டுவிட்டதே. ஒரு முழுப் பந்தை வாங்க முடியக்கூடிய சுபிட்ச காலம் எப்பொழுது வருமோ?' என்று சங்கடப்பட்டுக்கொண்டார்.

உலக பளு தூக்கும் போட்டியைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தபோது 'உலகப் பளுவை ஆண்டவன் ஒருவன் ஏற்கனவே தூக்கிக் கொண்டிருக்கிறான்' என்பதை நினைவு கூர்ந்தார் இன்னொரு நண்பர்.

இவர்களையெல்லாம் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? சுவாதீனமில்லாதவர்களா? எவ்வளவு மேதைகள் எவ்வளவு அறிவாளிகள் உள்ளே கிடக்கிறார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா?

ஒரு வாரம் தினமும் மாலை உள்ளே போய்ப் பழகிப்பாருங்கள். எவ்வளவு தங்கமான மனிதர்கள் என்பது உங்களுக்கே தெரியும். அதுவரை சுவாதீனத்தைப் பற்றி நீங்கள் பேசாமல் இருப்பது நல்லது"

"மன்னியுங்கள். நான் வேறு ஏதோ கேட்க வந்தேன். நீங்கள் என்னைக் குழப்பிவிட்டீர்கள்."

"குழம்பிய நிலையில் சுவாதீனமாக இருப்பது சிரமம். சிறிது நேரம் ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள். சுவாதீனமின்மையின் அநேக வகைகள் கிட்டத்தட்டத் தற்காலிகமானவைதான். ஓய்வுக்குப் பின் சாதாரண நிலைக்குத் திரும்பிவிடுவீர்கள். இப்பொழுது உங்களுக்குத் தேவையானதெல்லாம் சிறிது ஆசுவாசம், ஓய்வு."

"இல்லை. எனக்கு ஓய்வு தேவையில்லை. நான் கேட்டதெல்லாம் நீங்கள் யார் என்பதுதான். இது ஓர் எளிமையான கேள்வி. ஓர் அறிமுகத்துக்காக."

"நான் இதற்கு ஏற்கனவே பதில் சொல்லிவிட்டேன். எனக்குச் சாமி சத்தியமாகத் தெரியாது. உங்களுக்குத் தெரியுமா நீங்கள் யார் என்று?"

"ஓ நன்றாகவே தெரியும். நான் எல். ஜலகஜேந்திரன்"

"திட்டவட்டமாகத் தெரியுமா நீங்கள் ஜலகஜேந்திரன்தான் என்று?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதில் என்ன சந்தேகம்? நான் ஜல கஜேந்திரன், எல். ஜலகஜேந்திரன்."

"மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. பார்த்தால் ஜலகஜேந்திரன் மாதிரியே இல்லை."

"எனக்குப் புரியவில்லை."

"அதாவது ஜலகஜேந்திரனாக இருப்பது என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியாது"

"அதைத்தான் நான் சொல்கிறேன். நீங்கள் யார் என்று உங்களுக்கு உண்மையிலேயே தெரியாது"

"இல்லை தெரியும். நான் எல். ஜலகஜேந்திரன். என்னைத் தெரிந்தவர்கள் 'மிஸ்டர் ஜலகஜேந்திரன்' என்றுதான் என்னை அழைக்கிறார்கள்."

"நீங்களும் புளகாங்கித்துப்போய் உடனே நம்பிவிடுகிறீர்கள். அதாவது பிறர் உங்களைப் பற்றி ஒன்று சொன்னால் அதுதான் நீங்கள் என்று உடனே நம்பிவிடுகிறீர்கள். மன அளவில் நீங்கள் மிகவும் பலஹீனராக இருக்க வேண்டும். 'நான்' அதாவது 'நீங்கள்' என்பது எவ்வளவு பெரிய விஷயம்! நீங்கள் என்னவோ பாயாசத்தை இரண்டாவது மிடறு விழுங்குவது போன்ற சாதாரணத்துடன் அனாயாசமாக இந்த விஷயத்தை அணுகுகிறீர்கள்."

"நீங்கள் என்னைக் கலாட்டா செய்கிறீர்களோ என்று தோன்றுகிறது"

"இல்லை, நான் இதைத் தெளிவாக விளக்கியாக வேண்டும். இல்லையென்றால் தவறாகப் புரிந்துகொள்ளப்படுவேன். முதலில் சில கேள்விகள். ஆட்சேபணையில்லையே"

"இல்லை. கேளுங்கள்"

"உங்களுக்கு கோபம் வருவதுண்டோ?"

"உண்டு"

"எரிச்சல?"

"உண்டு"

"பரிவு ஏற்படுவதுண்டோ?"

"உண்டு"

"பாசம்?"

"உண்டு"

"பாலுணர்வு?"

"இது ரொம்பவும் அந்தரங்கமான கேள்வி. எனக்குச் சகல இழவுகளும் வருவதுண்டு. நானும் மனுஷன்தானே"

"உங்களுக்கு எரிச்சல் வருவதுண்டு என்று ஏற்கனவே சொல்லிவிட்டீர்கள். இப்பொழுது இதை உறுதிப்படுத்தியிருக்கிறீர்கள். இந்த எல்லா உணர்வுகளும் யார்?"

"நான்தான்"

"ஆக, எல்லாமே நீங்கள்தான்."

"ஆமாம் ஆமாம், எல்லாமே நான்தான்"

"உங்களைச் சந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததில் என் ஆத்மா பெருமிதம் கொள்கிறது."

"இவ்வளவு வெறுப்பேற்றிவிட்டு இப்பொழுது என்ன அத்தனை சந்தோஷம்?"

"எந்த மனுஷனுக்கும் கிடைக்காத பேறு எனக்குக் கிடைத்திருக்கிறதென்றால் பிறகு எப்படி இருக்கும்?"

"என்னைச் சந்தித்தது எப்படிப் பேறு ஆகும்?"

"சற்று முன் நீங்கள் சொன்னீர்கள். எல்லாமே நீங்கள் என்று. அப்படியானால் நீங்கள் ஒரு கடவுள். பரம்பொருள் மட்டும்தான் எல்லாமாக இருக்க முடியும்."

"எனக்கு உங்கள் மேல் ஒரு திடீர்ச் சந்தேகம் இப்பொழுது கிளம்பியிருக்கிறது."

"நானும் உங்களிடமிருந்து விடைபெறுக் கிளம்பிக்கொண்டிருக்கிறேன்."

"ஒரே ஒரு நிமிஷம். என் சந்தேகத்தை நிவர்த்தி செய்துவிடுங்கள். நீங்கள் சிறிது காலம் உள்ளே இருந்தீர்களோ?"

"அப்படியே வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள். நீங்களும் கொஞ்ச காலம் அங்கு தங்கித் தெளிவு பெறுவது பலவிதங்களில் நல்லது. என்னைப் போல் தீர்க்கமான அறிவுப் பிழம்பாக வெளியே வருவீர்கள். ஒரு முக்கியமான விஷயம். தங்களைக் கடவுள் என்று அறிமுகப் படுத்திக் கொள்ளுங்கள். உங்களுக்கு வெகு சுலபத்தில் அங்கு தங்க அனுமதி கிடைக்கும். உங்களுக்கு அதிர்ஷ்டம் உண்டாகட்டும்." •

## தமிழ்நாட்டுக்குள் ஒரு "செந்தமிழ் நாடு"

ஆச்சரியமாக இருக்கிறதா? உண்மை இது!

'வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது' என திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு காலத்தில் டெல்லி ஆட்சியாளர்களுக்கு எதிராகக் கோஷம் எழுப்பியது.

இப்பொழுது அதே தி.மு.க. சென்னையில் இருந்து நடத்தும் ஆட்சிக்கு எதிராக அதே கோஷம் தென்தமிழக நகரான மதுரையிலிருந்து எழுப்பப்படுகின்றது. குரல் எழுப்பியோரில் பாரதிய ஜனதா, காங்கிரஸ், ஜனதா தள் கட்சிகளும் அடக்கம்.

சென்னையிலிருந்து கழகங்கள் நடத்தும் ஆட்சியில் வட தமிழகமும் சென்னை போன்ற வட நகரங்களும்தான் வளர்ந்துள்ளனவே தவிர, தென் தமிழகமும் அதன் தலைநகரான மதுரையும் ஏனைய நகரங்களும் வளர்ச்சியடையவில்லை என்பதே தனிநாடு கோருபவர்களின் குற்றச்சாட்டு.

இதற்காக மதுரையில் செப்ரெம்பர் 2ம் திகதி பிரமாண்டமான மாநாடும் நடத்தப்பட்டுள்ளது. தனிநாட்டின் பெயராக "செந்தமிழ் நாடு" என்னும் பெயரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

சமீபத்தில்தான் உத்தரப் பிரதேசத்திலிருந்து உத்தராஞ்சல், மத்தியப் பிரதேசத்திலிருந்து சத்தீஸ்கர், பீகாரிலிருந்து ஜார்கண்ட் போன்ற மாநிலங்கள் உருவாக்கப்பட்டதையும் மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இலங்கைத் தமிழர்கள் வடக்கு - கிழக்கு மாகாண இணைப்புக்குப் போராடுகையில், தமிழகத்தை இரண்டாகப் பிரிக்கும்படி அங்கு ஒரு பகுதித் தமிழர்கள் போராடுவது சிந்தனைக்குரியதாகின்றது.

## ஐந்தறிவு உலகம்





தாய்லாந்து விலங்குப் பண்ணை ஒன்றில் பத்து வயதுப் பெண் குரங்கு, உயர்ந்த ரக சிகரெட்டுக்களையே விரும்பிப் பிடிக்கிறாராம்! 'சிகரெட்டின் ஒரு முனையில் தீ மறுமுனையில் மந்தீ' என்று சொன்னால் புகைப்பவர்கள் கோபித்துக்கொள்ளக் கூடாது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அவளின் கதை...

எம். எச். பதி-யுஸ்-ஸமான்

எயிட்ஸ் என்ற ஒரு நோயைப் பற்றி நான் அறிந்து கொண்டது பத்து வருடங்களுக்கு முன்னர்தான். எயிட்ஸைப் பற்றி பத்திரிகையில் பார்த்த நான், அந்நோயைப் பற்றி வெறுப்பும் அருவருப்பும் கொண்டிருந்ததும் எனக்கு ஞாபகம். இது பாலியல் தொடர்பு மூலம் பரவும் நோய் என்பதால் குடும்பத்தாரும் சமூகத்தாரும் இழிவாகப் பேசிக் கொள்வதையும் கண்டேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் நான் ஹான்சைச் சந்தித்தேன். அவன் ஜெர்மனியில் பிறந்தவன். ஒரு வைபவத்தில் நாம் சந்தித்துக் கொண்டோம். அன்றைய உரையாடலில்தான் எமக்கிடையே காதல் மலர்ந்தது. நாம் காதலர்களானோம்.

ஒரு நாள் பிக்னிக் சென்றோம். அன்று 'நாம் எப்போதுமே பிரிவதில்லை' என்று சத்தியம் செய்து கொண்டோம். ஹான்ஸ் ஒரு 'சிரிஞ்சர்' ஊசியைக் கொண்டு தனது கையில் எனது பெயரைக் கீறி குத்திக் கொண்டான். நானும் அதே ஊசியினால் எனது கையில் அவனது பெயரைக் குத்திக் கொண்டேன்.

நாம் குத்திக்கொண்ட எமது கைகளை பெயர்கள் இரண்டும் இணையக் கூடியவாறு வைத்து கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, ரத்தத்தோடு ரத்தம் கலப்பதைக் கண்டு சந்தோஷக் கூத்தாடினோம்.

நான் இலங்கைப்பெண். அவனோ ஜெர்மனியன். இவ்வாறு ரத்தத்தோடு ரத்தம் கலப்பதால் எமது காதல் உறுதியாகும். சாகும்வரை பிரியமாட்டோம் என நம்பினேன்.

ஆனால் எமது காதல் மெதுவாக அடித்துச் செல்லப்பட்டது.

ஒருவருடம் கழிந்திருக்கும். ஹான்ஸ் வரவர மெலிந்துகொண்டே போனான். அவனுக்கு சயரோகம் கண்டிருக்கலாம் என்று டாக்டர்கள் தீர்மானித்தனர். ஆனால் எவ்வளவோ மருத்துவம் செய்தும் எனது உயிருக்கு உயிரான ஹான்ஸ் உயிரைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது.


ஹான்ஸின் பிரிவுக்குப் பிறகு எனக்கு ஜெர்மனியில் பிடிப்பு இல்லாமல் போய்விட்டது. ஜெர்மனியே வேண்டாம் என்றாகிவிட்டது. நான் மீண்டும் தாயகம் திரும்பி வந்தேன்.

, ஹான்ஸ் என்னை விட்டு - உலகைவிட்டுப் பிரிந்து 10 வருடங்கள் பறந்துவிட்டன. அதுவரை நான் யாரையும் காதலிக்கவில்லை. இப்போது நான் நிசாந்தவைக் காதலிக்கிறேன். அவன் ஒரு சிங்கள வாலிபன், சட்டத்தரணியும் கூட. உலகைப் பற்றி, வாழ்க்கையைப் பற்றி போதிய தெளிவு நிசாந்தவிடம் இருந்தது.

இதற்கிடையில் ஹான்சைப் பிடித்து அவனின் உயிரைக் குடித்த அதே சயரோகம் என்னையும் கொஞ்சம் கொஞ்சமாக தொற்றிக் கொண்டது. நானும் நாளுக்கு நாள் மெலிந்து கொண்டே வந்தேன்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டேன். எய்ட்சும் மனித உரிமைகளும் தொடர்பாக எழுதப்பட்ட ஒரு புத்தகம் அங்கு கிடைத்தது. எயிட்சைப் பற்றிய கட்டுரையை வாசித்து முதலில் வெட்கப்பட்டேன். அத்துடன் எனது நோயைப் பற்றியும் எனக்குச் சந்தேகம் எழ ஆரம்பித்தது. எனினும், நான் எப்போதுமே பாதுகாப்பற்ற முறையில் பாலியல் தொடர்பு வைத்துக்கொண்டதில்லையே. அதுமட்டுமல்ல நான் எனது குடும்பத்தில் ஒரே பெண் பிள்ளை. என்னை மிகவும் கவனமாகவே வளர்த்து வந்தார்கள். நானும் கவனமாகவே நடந்து கொண்டிருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



HIV இரத்தப் பரிசோதனை ஒருவரது விருப்பம் இல்லாமல் செய்யக்கூடியதல்ல. அதே போல இந்த இரத்தப் பரிசோதனையில் ஏற்படக்கூடிய மானசீக, சமூக, சட்ட மற்றும் மருத்துவம் தொடர்பான எதிர்விளைவுகள், பிரதிபலிப்புக்கள் பற்றியும் முன்கூட்டியே அறிந்து வைத்திருப்பதுடன் தம்மை அதற்கு தயார்ப்படுத்திக் கொள்ளவும் வேண்டும்.

மேலும் பரிசோதனைக்கு உட்படுவதற்கு முன்னரும் பெறுபேறுகள் வந்த பின்னரும் தொழில்சார் ஆலோசகர் ஒருவரது ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதும் அவசியம் என்று நான் வாசித்த புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. நான் HIV பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன்.

இரத்தப் பரிசோதனையை, அரசாங்க வைத்தியசாலைகளில் இலவசமாகவே செய்யலாம். ஆனால் கொடுக்க வேண்டியது 5 மி. லீ. இரத்தம் மட்டுமே.

தப்பித்தவறி நாம் எயிட்ஸ் நோயாளி என்று உறுதிப்படுத்தப்பட்டால் சமூகத்தின் வசைச் சொற்களுக்கு ஆளாகலாம் என எம்மத்தியில் ஒரு சந்தேகம் இருக்கின்றது. உண்மையில் அவ்வாறு பயப்படும் எதுவுமே நடைபெறப் போவதில்லை.

இரத்தப் பரிசோதனை எமக்குத் தேவையான முறைகளில் தான் நடத்தப்படும்.

1. பூரணமான விபரங்களைத் தெரிவித்தபின் மேற்கொள்ளப்படும் பரிசோதனை.

2. சம்பந்தப்பட்டவர் பற்றிய தகவல் எதுவுமே வழங்காமல் மேற்கொள்ளப்படும் பரிசோதனை.

இந்த இரு முறைகளில் நீங்கள் எதை வேண்டுமானாலும் தெரிவு செய்யலாம். இரத்தப் பரிசோதனைக்கு முன் நோயாளியுடன் சுமுகமாக உரையாடல் நடத்தப்படும். இந்த இரத்தப் பரிசோதனைக்கு 2 நாட்கள் மட்டுமே செல்லும். முதல் நாள் இரத்தம் எடுக்கப்படும். அடுத்த நாள் அதன் முடிவுகள் பற்றித் தெரிவிக்கப்படும்.

எயிட்ஸ் இருப்பின் அது பற்றி அவரிடமே நேரடியாகத் தெரிவிக்கப்படும். அதற்கு முன் அவரது மனோநிலை தயார்படுத்தப்படும். அவரது குடும்பத்தவர்களுக்குக் கூட அறியத் தருவது அவரது சம்மதம் கிடைத்தால் மட்டுமே.

மருத்துவத்துறை வரலாற்றில் 1985ல்தான் முதன் முதல் இவ்வாறான பரிசோதனைகளை மேற்கொள்ளப்பட்டது.

முதலில் மேற்கொள்ளப்படுவது எலிசா (*Elisa*) பரிசோதனையே. அடுத்து மேற்கொள்ளப்படும் முக்கிய சோதனை 'வெஸ்டர்ன் புளோட்' (*Western Blot*) என்ற பரிசோதனை ஆகும்.

வைத்திய நிபுணர்கள் கூறுவது போல சில சந்தர்ப்பங்களில் மனிதர்களின் நோய் எதிர்ப்பு சக்தி குறைபாடு வைரசுக்கு (*HIV*) மாற்றுப் பரிகாரம் இல்லாத இரத்தத்தில் கூட இந்த வைரசு இருப்பதை எலிசா பரிசோதனை மூலம் கண்டுபிடிக்கச் சாத்தியம் உண்டு. எனினும் இது பூரண நம்பிக்கைக்குரியது அல்ல.

வெஸ்டர்ன் புளட் பரிசோதனையில் மோசமான கட்டத்தையும் தீர்க்கமாக அறிந்துகொள்ள முடிகின்றது. அத்துடன் சம்பந்தப்பட்டவருக்கு இந்த வைரசு தொற்றியிருக்கின்றதா என்று தெரிந்து கொள்வதற்கு முதலில் எலிசா பரிசோதனையும் அடுத்து வெஸ்டர்ன் புளட் பரிசோதனையும் மேற்கொள்ளுமாறு மருத்துவவியல் குறிப்பிடுகின்றது.

*1999 மார்ச் 30ம் திகதி என் இரத்தப் பரிசோதனை அறிக்கை எனக்குக் கிடைத்தது. பதை பதைக்கும் நெஞ்சத்தோடு டாக்டரைச் சந்திக்கிறேன். இறைவனிடம் மன்றாடினேன். இந்த மோசமான நோய் மட்டும் எனக்கு ஏற்பட்டிருக்கவே கூடாது என்று. என் காதலன் இச் சந்தர்ப்பத்தில் என்னுடன் இல்லை.*



**ஐ. நா. வின் எய்ட்ஸ் ஒழிப்புக்கான நல்லெண்ணத் தூதுவராக சனத் ஜெயசூரியா நியமிக்கப்பட்டுள்ளார்.**

டாக்டர் முதலில் தனது அனுதாபத்தையும் கவலையையும் தெரிவித்துக் கொண்டார். நான் கேட்கப்போகும் செய்தி அவ்வளவு நல்ல செய்தியாக இருக்காது என்பது புரிந்தது.

எனது தொண்டை வரண்டு முழு உடம்பும் வியர்வையால் ஈரமாகிக் கொண்டே வந்தது. நான் கேட்கக் கூடாத, எதிர்பார்க்காத அந்த அதிர்ச்சி அடுத்த விநாடி என் செவிகளில் இடியாக விழுந்தது. அப்படியே மூர்ச்சையாகிப் போனேன். எனக்கு நான் மூர்ச்சையாகிக் கொண்டு வருகிறேன் என்பது மட்டும் நினைவில் இருந்தது.

*பாதுகாப்பற்ற முறையில் பாலியல் தொடர்புகொள்ளாத எனக்கு எயட்ஸ் என்பதை எப்படி நான் நம்ப முடியும்?*

**ஐந்தறிவு உலகம்**


கிளிகளின் சரணாலயமாக ஆறு வயது இஸ்ரேல் சிறுமி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் டாக்டரிடம் எல்லா விசயங்களையும் கூறினேன். ஹான்ஸ்க்கும் எனக்கும் இடையிலுள்ள காதல், ஹான்ஸின் மரணம், நிசாந்தவின் காதல் என்று எல்லாவற்றையுமே தெரிவித்தேன்.

நான் எயிட்ஸ் நோயாளி என்ற செய்தி வெளியானால் எனது குடும்பத்தினர், எனது காதலன், என் சமூகத்தினரது அவப்பெயரை - இழிச்சொல்லை சந்திக்க நேரிடும் என்று எண்ணினேன்.



இந்த எண்ணம் என்னை அதிகம் வதைத்ததால் இது பற்றி டாக்டரிடமும் கூறினேன்.

எயிட்ஸ் நோயாளி ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டஉடனேயே அதுபற்றி சுகாதார அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டும் என்ற கடமை கட்டாயம் டாக்டர்களுக்கு உண்டு.

எப்படியாயினும் அந்தத் தகவல்களை தெரிவிக்கும் போது நோயாளியின் அடையாளங்களை வெளிப்படுத்தாத முறையில் சமிக்ஞை முறையொன்று பயன்படுத்தப்படுவது வழக்கம். அப்படி வெளியிடப்படும் தகவல்களின் இரகசியத்தன்மையைப் பாதுகாக்கும் கடப்பாடு அவர்களுக்குண்டு.

இப்படியெல்லாம் ஒவ்வொரு விஷயமாக டாக்டர் எனக்குத் தெளிவுபடுத்திக் கூறினாலும் என் மனதுக்கு அந்த எண்ணங்களிலிருந்து விடுதலை கிடைக்கவில்லை. டாக்டர் விளக்கியபடி நடக்காமல் தகவல் ஊடகங்கள்மூலம் இது வெளியிடப்பட்டால்... என்ற அச்சம் சதா என்னை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தது.

ஒரே ஊசியின் மூலம் இருவருமே தமது கைகளைக் கீறிக் கொண்டதால் ஏற்பட்ட இரத்தக் கலப்பே, ஹான்ஸின் HIV வைரசு என் உடலில் நுழையக் காரணம் என்று டாக்டர் தீர்மானத்திற்கு வந்திருந்தார். என்றாலும் எனது கதையை யார்தான் நம்பப் போகிறார்கள்.

இந்த நோய் ஏற்படுவது நடத்தை கெட்டவர்களுக்கு மட்டுமே என்றல்லவா எல்லோரும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். எனக்கு உயிரை மாய்த்துக் கொள்ளவே தோன்றியது. நரகத்தில் வாழ்வது போலவே வாழ்ந்து வந்தேன்.

இதற்கு மேலும் இந்த விபரங்களை நிஷாந்தவிடம் கூறாமல் மறைப்பது நல்லதில்லை என்று எண்ணினேன். நான் தண்டனை அனுபவித்தாலும் நிஷாந்தவுக்கு அதனை பரப்புவது தவறு என்று என் மனம் உறுத்தியது.

இதை கேள்விப்பட்டவுடன் நிஷாந்த துடிதுடித்துப் போனான். எனினும் அவன் என்னை சரியான முறையில் புரிந்து கொண்டிருந்தான். எயிட்ஸ் நோயாளி குறித்து இலங்கையில் நடைமுறையிலுள்ள சட்டங்கள் பற்றியும் எனக்கு தெளிவுபடுத்திக் கூறினான்.

நோயாளிகளின் தனிப்பட்ட விஷயங்களை ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்தினால் அது மனித உரிமையை மீறுவது ஆகும் என்பதால் அதனால் ஏற்படும் பாதிப்புக்களின் அடிப்படையில் அத்தகவலை வெளியிட்டவருக்கு எதிராக வழக்குத் தொடுப்பதற்கும் அவளுக்கு அல்லது அவனுக்கு உரிமை உண்டு என்று அவன் மேலும் கூறினான்.

ஏனைய தொற்று நோய்களைப் போல எயிட்ஸ் தொற்றுவது கிடையாது. நோயாளியுடன் நீந்துவது, வீட்டில், காரியாலயத்தில் ஒன்றாகப் பணிபுரிவது, ஒரே கோப்பையைப் பாவிப்பது, டவலைப் பாவிப்பது போன்றவற்றினால் எல்லாம் பரவுவதில்லை என்பதால் இதுபோன்ற நோயாளிகளை ஒதுக்கிவைக்க வேண்டிய அவசியமில்லை என்பதையும் அவன் எனக்குத் தெளிவுபடுத்தினான்.

உலகின் சில நாடுகளில் எயிட்ஸ் நோயாளிகளை சமூகத்தில் ஏனைய மனிதர்களிடமிருந்து வேறுபடுத்தி வைக்கும் புறம்பான வைத்தியசாலைகளும், அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட சில பிரதேசங்களும் உண்டு என்பதை நான் அறிந்து வைத்திருந்தேன். ஆனால் இலங்கை சட்டத்தின் கீழ் எயிட்ஸ் நோயாளிகளை சிறையில் அடைத்து வைக்க முடியாது. சமூகத்தில் வாழும் அடுத்த மனிதர்களைப் போலவே எயிட்ஸ் நோயாளிக்கும் தனிப்பட்ட சுதந்திரத்திற்கும் பாதுகாப்பிற்கும் உரிமை உண்டு என்று எனக்குக் கூறித் தந்தது எனது காதலனே.

எனினும் நோய் அறிகுறிகளைத் தெரிந்து கொண்டே கவனயீனமாக அடுத்தவர்களுக்கும் பரவும் வகையில் நடந்துகொண்டால் அது தண்டனைக்குரிய குற்றமாகும். அப்படி செய்தால் சுதந்திரத்திற்கும் பாதுகாப்புக்கும் உள்ள உரிமை இல்லாமல் செய்யப்பட்டுள்ளதுடன், அவர் மீது அபராத வழக்கும் தொடரும் வாய்ப்புண்டு.

எயிட்ஸ் பரவுவதைத் தடுப்பதற்கு பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட செயல்முறைகள் இங்கு முறையாக கடைபிடிக்கப்படாததால் பயிற்சி பெற்ற தாதி மற்றும் வைத்திய சேவையை எயிட்ஸ் நோயாளிக்குப் பெற்றுக் கொடுப்பதற்காக புறம்பான வார்ட் ஒன்று ஐடீஎச் (IDH) என்று கூறப்படும் மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ளது.



பிரபல இந்திய நடிகையும், பாராளுமன்ற உறுப்பினருமான சபனா ஆஸ்மி, எய்ட்ஸ் தடுப்பு பிரசாரத்திற்காக எடுக்கப்படும் பங்களாதேஷ் படம் ஒன்றில் நடிக்கிறார். எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் அந்தப் படத்தின் பெயர் 'மெக்லா ஆகாஷ்' (ஆகாயம் பரந்தது). இயக்குனர் நர்கிஸ் அக்தர்.

ஒரே ஊசியின் மூலம் இருவருமே தமது கைகளைக் கீறிக் கொண்டதால் ஏற்பட்ட இரத்தக் கலப்பே, ஹான்ஸின் HIV வைரசு என் உடலில் நுழையக் காரணம் என்று டாக்டர் தீர்மானத்திற்கு வந்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகவல்கள் எவற்றினாலும் எனக்கு நிம்மதி கிடைக்கவில்லை. ஒழுங்காக நித்திரை கிட்டவில்லை. எனது சிநேகிதிகளெல்லாம் திரு மணமாகி பிள்ளை குட்டிகளை கொஞ்சிக் குலாவுவதைக் கண்ட போதெல்லாம் நான் இதயத்தால் அழுது துடித்திருக்கின்றேன்.

இந்த ஜென்மத்தில் எனக்குத் திருமணம் நடக்காது என்பது புரிந்தது. அதோடு எனக்கொரு சந்தேகமும் ஏற்பட்டது. ஒரு வேளை நான் நோயைப் பற்றி அறிந்து கொள்ளாமலே திரும ணம் செய்திருந்தால்...?

சந்தேகத்தை டாக்டரிடமே கேட்டுவிட்டேன். உண்மையில் பாலியல் உறவால் கிடைக்கும் திருப்தியை, எயிட்ஸ் நோயாளி என்ற காரணத்திற்காக கைவிட்டு விட முடியுமா? அதற்காக அவர் களுக்குள்ள உரிமை என்ன என்ற கேள்வி மனதைக் குடைந் தெடுத்தது.

"உங்களுக்குத் திருமணம் செய்யத் தடையில்லை." டாக்டர் இப்படிக் கூறியதும் எனக்குச் சந் தோஷம் பிடிபடவில்லை.

ஆனால்... ஆனால்.. எனது துணைவருக்கு என்ன ஆகும்?

எயிட்ஸ் நோயாளி திருமணம் செய்வதற்கு முன் தனது துணை வருக்கோ, துணைவிக்கோ உண் மையை தெளிவாக எடுத்துச் செல்ல வேண்டியிருக்கும்.

அதே போல, திருமணத்திற்கு முன் தனது துணைவருக்கு அல் லது துணைவிக்கு நோய் பரவு வதைத் தடுப்பது சம்பந்தமான பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி அறிந்து வைத்திருக்க வேண்டும்.

குறிப்பாக பாதுகாப்பான முறை யில் பாலியல் தொடர்பை மேற் கொள்வது பற்றி வைத்தியரிடம் ஆலோசனை பெறுவது முக்கி யம். நோயாளி பெண் எனின் கருத்தரிக்காமல் இருப்பதற்கான ஆலோசனையையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அதற்குக் காரணம் HIV நோயா ளிப் பெண்ணுக்குப் பிறக்கும் குழந்தைக்கும் நோய் ஏற்படலாம் என்பதனாலேயே ஆகும்.

டாக்டர் இந்த விஷயத்தை விளககிச் சொன்னார். என் மன தில் எழுந்த அடுத்த பிரச்சினை நிஷாந்த என்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்புவாரா என்பதுதான். அவர் எனது உடை ந்து நொருங்கிப்போன உள்ளத் தைச் சரிசெய்ய உதவினார் என் பது உண்மை. அதற்காக என் னைத் திருமணம் செய்து கொள் வார் என்று எப்படி நான் எதிர் பார்க்க முடியும்?

எப்படியும் நான் வாழ்க்கைக்கு முகம் கொடுத்துத்தானே ஆக வேண்டும். நான் விரைவில் இறந்து போவேன் என்று எனக்கு இப்போது தெரியும். எனது தலை யெழுத்தை யாராலும் மாற்ற முடியாது. எனக்கு இந்த நிலை ஏற்பட்டது நான் அறியாமலேயே. தவறான தொடர்பினாலும் அல்ல. என்னைப் போன்ற ஏனைய அப் பாவிகளுக்கு இந்த அவலநிலை ஏற்படக்கூடாது என்றுதான் என் கதையை எழுதி வைக்க விரும்பி னேன்.

நாம் மனிதர்கள் என்ற முறை யில் உணர்ச்சிகளுள்ளவர்கள். ஜாதி, மதம், நிற பேதங்களின்றி எல்லோருக்கும் ஒரே இரத்தம் வாழ்வளிப்பது போல உணர்ச்சி களும் மனிதனுக்குக் கிடைத்த வரம்.

நடந்தவை நடந்து முடிந்துவிட் டன. அடுத்து... மரணம். ஆனால் அதுவரை நான் வீட்டுக்குள்ளே யே அடைபட்டுக் கிடக்க வேண் டுமா? இல்லை... அப்படி இருக்க வேண்டிய அவசியம் இல்லை. நான் கடமைப்பட்டிருக்கிறேன் சமூகத்திற்கு ஏதேனும் செய்வத ற்கு. இன்னும் நான் கடுமையான நோயாளி அல்ல. எனவே, எனது அனுபவங்களிலிருந்து மற்றவர் களுக்கு ஏதாவது செய்ய முடி யும் என்று நினைக்கிறேன்.

இறுதியாக -

உங்களுக்கும் ஏதாவது சிறு சந்தேகம் ஏற்பட்டாலும்,

கொழும்பு-10, டீ சேரம் பிளேஸில் அமைந்து ள்ள பாலியல் தொட ர்பான நோய் கள், எயி ட்ஸ் தடுப்புத் திட்டத்தின் மத்திய நிலையத்திற்கு (தேசிய வைத்தி யசாலை வெளிநோயாளர் பிரிவு 33-0 இலக்க அறை க்கு) அல்லது அருகிலு ள்ள வைத்தியசாலையின் டாக்டரிடம் செல்லுங்கள். இங்கு இலவசமாக இரத் தப் பரிசோதனைகளை மேற்கொண்டு நோய் உண் டா இல்லையா என்ற முடி வுக்கு வர முடிவதோடு உரிய சிகிச்சை மற்றும் ஆலோசனைகளைப் பெற் றுக்கொள்ள முடியும்.




அனுராதபுரம், பதுளை, கொழும்பு தெற்கு (களு போவில), காலி, யாழ்ப்பா ணம், கண்டி (கட்டுகஸ் தொட்ட), சிலாபம், கேகாலை, குருநாகல், மாத்தறை, பொலன் னறுவை, ராகம, இத்தினபுரி, திரு கோணமலை போன்ற முக்கிய அரச பெரியாஸ்பத்திரிகளின் கீழ் இயங்கும் கிளினிக்குகளில் நேர டியாகச் சென்று உங்களின் மரு த்துவத் தேவைகளை மிகவும் இரகசியமாகவே நிறைவேற்றிக் கொள்ளலாம்.

மரணத்தைத் கண்டு கண்டு வாழ்ந்துகொண்டிருக்கும் எனக்கு எனது ஆருயிர் காதலன் நிஷா ந்தவின் அன்பும் அரவணைப்பும் புது வாழ்வு தந்தது. 'எயிட்ஸும் என் காதலும்' என்ற புத்தகத்தை எழுத ஆரம்பித்தது இதனாலேயே.

அந்த கொடிய நோய் என் னைப் போலவே உங்களையும் கொடுமைப்படுத்தலாம். துவண்டு விடாதிருக்கவே இந்த என் கதை.

கவனமாக இருந்து கொள் வோம்! வாழ்க்கைக்கு முகம் கொடுப்போம் துணிச்ச லோடு!" ●

**திருமணத்திற்கு முன் நோய் பரவுவதைத் தடுப்பது சம்பந்தமான பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி அறிந்து வைத்திருக்க வேண்டும். குறிப்பாக பாதுகாப்பான முறையில் பாலியல் தொடர்பை மேற்கொள்வது பற்றி வைத்தியரிடம் ஆலோசனை பெறுவது முக்கியம்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலகம் முழுவதையும் ஒரு குடைக் கீழ் ஆள நினைத்த மன்னர்களை அறிவோம். இதோ, கத்தியின்றி ரத்தமின்றி ஒரு குடைக் கீழ் உலகமே திரண்டு வருகிறது. நவம்பர் 30ம் திகதி நடக்கவிருக்கும் உலக அழகிப் போட்டிக்கான ஆரம்பக் கட்டப் போட்டிகளில் ஒன்றான நீச்சலுடைப் போட்டி, மாலைதீவில் நடந்தது. மாலைதீவின் அழகிய கடற்கரையை மேலும் அழகு கொழிக்கச் செய்தனர் உலகம் முழுவதிலுமிருந்து திரண்டிருந்த அழகிகள். லண்டனில் புதிய மில்லேனியம் மண்டபத்தில் நடைபெறும் இறுதிப் போட்டியில் முடிசூடும் அழகி யாரென்று தெரிந்துவிடும்.













பொங்கல் வரப் போகிறது. சூரியனுக்குப் பொங்கலிடுதல், பலகாரம் தேடுதல், பட்டாசு வெடித்தல் எல்லாம் ஒருபுறமிருக்க, அன்றைய தினம் பெரும்பாலும் வடபகுதிக் கரையோரங்களில் பட்டமேற்றும் போட்டிகளும் நடைபெறும். கொக்கு, பிராந்து, மீன், பாம்பு, படலம், சீனட்டி, ஆறுமூலை, எட்டுமூலை... என்று பட்டங்களில் எத்தனை வகைகள்!

அவுஸ்திரேலியாவிலும் இந்தப் பட்டமேற்றும் விழாவைப் பெரிய அளவில் கொண்டாடுகிறார்கள். நவம்பர் 12ல் பல ஊர்களிலுமிருந்து சிட்னியின் பிரபல கடற்கரையான பொன்டிக்கு மக்கள் திரள்கிறார்கள். சுமார் 50,000 க்கும் மேற்பட்டோர் கூடுகின்றனர். வண்ண வண்ணமாய் பல வகைகளில், ராட்சத அளவுகளிலெல்லாம் போட்டிக்குப் பட்டங்களைப் பறக்க விடுகின்றனர். இதை "காற்றின் திருவிழா" என்று அவுஸ்திரேலியர் அழைக்கின்றனர்.

*Back Street Boys* பாடகர்கள். (இ.வ.): பிறயன் லிட்வெல், ஹோவி டோர.'.ப், கெவின் றிச்சர்ட்ஸன், அஜ் மக்லீன், நிக் கார்ட்டர் ஆகியோர். 'அமிகோ' இசை விருதுகள் வழங்கும் விழாவில் தங்கள் நிகழ்ச்சியை முடித்த பின்பு.





உலகம் பல திணுசு

*The Spice Girls.* லண்டனில் நடந்த பிரிட் விருது வழங்கும் விழாவில் ரசிகர்களின் கைதட்டலை ஏற்கிறார்கள். ஏறத்தாழ இரண்டு வருடங்களின் பின் அவர்களது மூன்றாவது அல்பம் நவம்பரில் வருகிறது.

படத்தில் (இ.வ): *Emma Bunton, Mel C, Victoria Beckham, Mel B.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தினங்களுக்கு இலங்கை பிரசித்தம்.

தேயிலைக்கும் இலங்கை உலகப் புகழ்பெற்றது.

இலங்கையின் இயற்கை வனப்பும் உல்லாசப் பிரயாணிகளைக் கவர்ந்துள்ளது.

இவை எல்லாவற்றையும் விட இன்னொரு விஷயத்திலும் இலங்கை மிகவும் பிரபலம் பெற்று வருகிறது. அதுதான் தன்னினச் சேர்க்கை.

குறிப்பாக இலங்கைச் சிறுவர்கள் என்றால் உல்லாசப் பிரயாணிகள் பலர் கிறக்கமடைவது ஒன்றும் இரகசியமானதல்ல.

தாய்லாந்து சிவப்பு விளக்குச் சிங்காரிகளுக்கு பிரபலமானது போலவே இலங்கைச் சிறுவர்களும் தன்னினச் சேர்க்கைக்கு பிரபலமாகி வருகின்றார்கள்.

பெந்தோட்டை, ஹிக்கடுவை, நீர்கொழும்பு போன்ற கடற்கரைப் பகுதிகளிலுள்ள சிறுவர்கள் பற்றி ஜேர்மனி, சுவீடன், பிரான்ஸ் நாட்டு ஊடகங்களிலெல்லாம் பரபரப்பான செய்திகள் வெளிவருகின்றன.

இதற்காக உலக நாடுகளிலிருந்து உல்லாசப் பிரயாணிகள் இலங்கைக்குப் படையெடுக்கின்றனர்.

இலங்கை என்றால் அவர்களின் மனக்கண்ணில் இரத்தினக் கற்களும் தேயிலையும், இயற்கைக் காட்சிகளும் வந்துபோன காலம் போய் கலர் கலரான சிறுவர் படங்களே நினைவுக்கு வரும் காலமாகிவிட்டது.

இவர்கள் நாட்டுக்குள் அந்நியச் செலாவணியை மட்டுமல்ல பெரும் கலாசார சீரழிவையும் எயிட்ஸ் போன்ற நோய்களையும் கொண்டு வருகின்றார்கள்.

இதன் காரணமாக இலங்கையில் எயிட்ஸ் நோயாளிகளின் தொகை தாய்லாந்தையும் பின்தள்ளி உயர்ந்து வருகின்றது.

# மக்களின் மனோபாவம் மாறவேண்டும்!



சேர்மன் டி ரோஸ்

இலங்கையில் தனித்தும் இரகசியமாகவும் செயல்பட்டு வந்த தன்னினச் சேர்க்கையாளர்கள் இப்போது வெளிப்படையாக செயல்பட்டு வருகின்றார்கள். தமது உரிமைகளுக்காகவும் சமூக, சட்ட அங்கீகாரத்திற்காகவும் போராடி வருகின்றார்கள். இயக்கங்களையும் ஆரம்பித்துள்ளனர்.

உலக தன்னினச் சேர்க்கையாளர்களின் உலக



மகாநாட்டை இலங்கையில் கூட்டுவதற்கும் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

கடந்த வருடம் நடத்தப்பட இருந்த இந்த சர்வதேச உச்சிமாநாடு வெகு விரைவில் நடத்தப்படுமென்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தன்னினச் சேர்க்கையை உலகில் அதிகமான நாடுகள் தடை செய்துள்ளன. இலங்கையிலும் அது சட்டரீதியாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

1883ம் ஆண்டின் தண்டனைச் சட்டத்தின் 365 சரத்தின் கீழ் ஓரினச் சேர்க்கை 12 வருட சிறைத் தண்டனைக்குரிய குற்றம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் இந்தச் சட்டத்தில் ஒரு ஆண் மற்றொரு ஆணுடன் தன்னினச் சேர்க்கையில் ஈடுபடுவது பற்றியே குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர, ஒரு பெண் பெண்ணுடன் தன்னினச் சேர்க்கையில் ஈடுபடுவது பற்றி எதுவுமே குறிப்பிடப்படவில்லை என்று சட்ட வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

தன்னினச் சேர்க்கை தொடர்பாக இலங்கையிலுள்ள சட்டத்தையும் மக்களின் மனோபாவத்தையும் மாற்றுவதற்காக இலங்கையில் இயக்கமொன்றை நடத்தி வருகின்றார் சேர்மன் டி ரோஸ் என்ற 30 வயது இளைஞர்.

அண்மையில் இலங்கையில் தன்னினச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்க்கையாளர்களின் உலக உச்சிமாநாட்டைக் கொழும்பில் நடத்துவது தொடர்பாக அடிக்கடி கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றார்.

150 வருடத்திற்கு மேற்பட்ட பழைய சட்டம் தற்போது பல மிழந்து வருகின்றது. அதனை மாற்றியமைக்க வேண்டும்.

தன்னினச் சேர்க்கையாளர்களை நடத்தை கெட்டவர்களாகவும் சட்டத்தை மீறுபவர்களாகவும் காண்பிப்பதற்கு பொலீசாரும் இதற்கு எதிரானவர்களும் முயற்சி செய்து வருகின்றனர்.

இது எமக்கு இழைக்கப்படும் பாரபட்சமும் அநீதியுமாகும்.

இதுதொடர்பாக தாம் அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதியிப்பதாகவும் பதில் வரும்வரை காத்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

"எமது சங்கத்தில் இதுவரை 900 பேர் அங்கத்தவர்களாக உள்ளனர்.

பெண் தன்னினச் சேர்க்கையாளர்கள் இலங்கையில் சுமார் 150 பேர் உள்ளனர். ஆனால் அவர்களின் பிரச்சினைகள் வேறுபட்டது என்பதால் அவர்கள் தனியாக இயங்கி வருகின்றனர்" என்று ரோஸ் குறிப்பிட்டார்.

அதே நேரம் தமது இயக்கத்தில் சேர்ந்து வெளிப்படையாக இயங்க விரும்பாத மறைந்திருக்கும் ஆண், பெண் தன்னினச் சேர்க்கையாளர்கள் அதிகம் பேர் உள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இதுபற்றி இலங்கை 'லெஸ்பியன்' அமைப்பின் பேச்சாளரான பெண் ஒருவர், தாம் உச்சிமாநாடு நடத்துவது பற்றிக் கவனமாக ஆராய்ந்து வருவதாக பிரான்ஸ் பத்திரிகை ஒன்றுக்கு பேட்டி வழங்குகையில் குறிப்பிட்டுள்ளார்.

சேர்மன் டீ ரோஸ் தன்னினச் சேர்க்கையாளர் சங்கத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளராவார். அவர் இந்த இயக்கத்தை தமது பார்க் வீதியிலுள்ள இரு மாடிக் கட்டிடத்தில் நடத்தி வருகிறார்.

ஆண் தன்னினச் சேர்க்கையாளர்களைப் போலவே பெண் தன்னினச் சேர்க்கையாளர்களும் அடிக்கடி தமது பிரச்சினைகளைப் பற்றி கலந்தாலோசனை நடத்தி வருவதாக பெண் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.




ஆண் தன்னினச் சேர்க்கையாளர்களின் மில்லேனியக் கொண்டாட்டத்தின் போது




பெண் தன்னினச் சேர்க்கையாளர் அமைப்பின் ஏற்பாட்டாளர் கூறுவதாவது: "ஆண்கள் அவர்களது உணர்ச்சிகளைப் புரிந்துகொள்வதில்லை. அங்கீகரிக்கப்பட்ட பாலியல் தொடர்பில் ஈடுபட்டுள்ள பெண்களும் தம்மைப் பற்றிப் புரிந்து கொண்டவர்களாகச் சொல்ல முடியாது. எனினும், அவர்கள் ஏதோ கொஞ்சமாவது திருப்தி அடைவது நண்பிகளான பெண் தன்னினச் சேர்க்கையாளர்களுடன் மட்டுமே.

இது இவ்வாறிருக்க கடந்த வருடம் களுத்துறை கெலிடோ ஹோட்டலுக்கு அண்மையிலுள்ள கடற்கரையில் மிதந்த இரு பெண் சடலங்களின் தற்கொலை நாடகத்திற்குக் காரணம் தன்னினச் சேர்க்கையே என்று தெரியவந்துள்ளது.

பெண் தன்னினச் சேர்க்கையாளர்கள் இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கும்போது.... 'பெண் தன்னினச் சேர்க்கையை சமூகம் அங்கீகரிக்காததாலேயே இந்தத் துர்ப்பாக்கிய சம்பவம் நிகழ்ந்துள்ளது. சமூகம் அங்கீகரித்திருக்குமானால் - சமூகத்திலிருந்து ஒதுக்கிவைத்துவிடும் குற்றமாகப் பார்க்காமலிருந்தால் - இதுபோன்ற சம்பவங்கள் நிகழாது' என்று கூறினார்.

எயிட்ஸ் நோய் தடுப்புத் திட்டம் ஒன்றையும் இந்தத் தன்னினச் சேர்க்கையாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர். இதன் நோக்கம் ஆண், பெண் தன்



னினச் சேர்க்கையாளர்களை பாதுகாப்பான பாலியல் தொடர்புகளை மேற்கொள்ளத் தூண்டுவதே. ஒல்லாந்து நிறுவனமொன்று இதற்கான அனுசரணையை வழங்க முன்வந்துள்ளது.

மேலும் இந்த தன்னினச் சேர்க்கையாளர்கள் பாதுகாப்பான ஆணுறைகளைப் பாவிக்க எவ்வகையிலும் விரும்புவதில்லை என்றும், பாலியல் தொடர்பால் ஏற்படும் நோய்களுக்கு சிகிச்சை பெறுவதற்காக சுதந்திரமாக மருத்துவ நிலையங்கள் உருவாக்கப்படும் என்றும் சேர்மன் டி ரோஸ் தெரிவித்தார்.

பெரிய குடும்பமொன்றைச் சேர்ந்த மேரி என்ற லெஸ்பியன் பெண், இவ்வாறான பெண்களுக்கு உதவ முன்வந்துள்ளார் என்றும் கூறினார். சேர்மன் டி ரோஸ், மேரி ஆகிய இருவருமே

கூறியது வழக்கிலுள்ள சட்டத்தையும் சமூகத்தின் மனோபாவத்தையும் மாற்ற வேண்டும் என்பதைத்தான்.

எப்படியிருந்தாலும் இது ஒரு பெரிய சமூக அழிவே என்றும், இதுபோன்ற விஷயங்களை வெளிப்படையாகப் பேசுவதை விட, இருக்கிற மாதிரியே இருந்துவிட்டுப் போகட்டும் என்று விட்டுவிடுவதுதான் புத்திசாலித்தனமானது என்று பலரும் கருத்துத் தெரிவித்தனர்.

இதுபோன்ற விஷயங்களில் கைவைத்து சட்டத்தை மாற்றுவது செய்யக்கூடாத ஒன்று என்று அவர்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

இதுபற்றி கருத்து தெரிவித்த முன்னாள் நீதி அரசியலமைப்பு அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், கருத்துத் தெரிவிக்கையில், இது போன்ற சட்டங்களை மாற்றுவதற்கு முயற்சிப்பதைவிட, வேறு முக்கியமான அவசியமான பல சட்டங்கள் மாற்றப்படவுள்ளன என்று கூறினார்.

அரசியல் யாப்பு சீர்திருத்தம், வடக்கு, கிழக்கு இனப்பிரச்சினை, போன்ற மிக முக்கியமான எரியும் பிரச்சினைகள் அரசாங்கத்தினால் தீர்க்க வேண்டியிருப்பதால் இத்தகைய பிரச்சினைகளுக்குக் காலத்தைச் செலவிட இது தருணம் அல்ல என்றும் பேராசிரியர் தெரிவித்துக் கொண்டார்.

## ஐந்தறிவு உலகம்



இன்னொருவர் தலையில் ஏறி உட்கார்ந்து கொள்ளும் குணம் ஓணான்களுக்கும் உண்டு போலும். சிட்னியிலுள்ள தராங்கா மிருகக் காட்சிச்சாலையில் இந்த ஓணானுக்கு 4 மாதங்களில் 30 குட்டிகள் பிறந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தன்னினச் சேர்க்கையாளர்களின் கோரிக்கையை பரிசீலிப்பதற்கு 1992ல் அரசு இணங்கியது என்றாலும் அதனால் ஏற்படக்கூடிய சமூக பாதிப்பைப் பற்றி யோசிப்பது உசிதமானது என்று பலர் கருத்துத் தெரிவித்தனர்.

எனவே, அரசு இதுபோன்ற பொதுஜன அபிப்பிராயத்திற்கே முக்கியத்துவம் அளிப்பது என முடிவு செய்தது.

**மேலும்....**
**தன்னினச் சேர்க்கையாளர் ஒருவரை மணந்துகொண்ட ஒரு இள நங்கையின் அனுபவங்கள் இதோ:**

"எனக்கு வயது இப்போது 22. எனக்கு 18 வயதில் திருமணம் நடந்தது. எனது திருமணம் காதல் திருமணம் அல்ல. பெற்றோர் பேசி நடத்தி வைத்த திருமணம்.

எங்கள் திருமணம் நான்கு வருடங்களே நீடித்தது. அதற்கிடையில் இரண்டு பிள்ளைகள் பிறந்தனர். ஒருவர் ஆண். மற்றவர் பெண்.

எங்களிடையே விவாகரத்து வழக்கு நடந்தது. முடிவில் பிள்ளைகளைத் தந்தையிடம் ஒப்படைக்க வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

பிள்ளைகளை இழந்தது வேதனையாக என்னை வாட்டினாலும், இப்போது நான் புதிதாக ஒருவரைத் திருமணம் செய்து மகிழ்ச்சிகரமான வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருக்கிறேன்.

நான் முன்னர் திருமணம் செய்திருந்தவர் எனது முறை மச்சான். திருமணத்திற்கு முன் நான்கு வருடங்கள் அவருடன் பழகினேன். அப்போதெல்லாம் அவர் ஒரு தன்னினச் சேர்க்கையாளர் என்று எனக்குப் புரியவில்லை.

திருமணமான பின்னரே கண்டுபிடித்தேன். அதைவிட அவர் என்னை அவசர அவசரமாக வற்புறுத்தித் திருமணம் செய்ததே... தான் ஒரு தன்னினச் சேர்க்கையாளன் அல்ல, தன்னாலும் மனைவியுடன் உடலுறவு கொண்டு பிள்ளைகள் பெற முடியும் என்பதை வெளியுலகுக்குக் காட்டவே என்பதையும் கண்டுபிடித்தேன்.

அவர் என்னைத் திருமணம் செய்த கையோடு தமது நண்பர் என்று ஒருவரையும் கூட்டி வந்து எமது வீட்டில் ஒரு அறையில் ஒன்றரை வருட காலமாகத் தங்க வைத்திருந்தார்.

அவருடன் இவர் என்னோடு பழகுவதைப் போலவே அந்நியோன்யமாக நெருங்கிப் பழகினார். ஆளுக்கு ஆள் மாறி மாறி தலை வாரிக் கொள்வார்கள். சேர்ந்தே பயணம் போவார்கள். ஒரே வகையான உடைகளையே அணிவார்கள்.

ஆனால் என்னோடு ஒட்டாமல் வெட்டியே நடந்து கொள்வார். நான் உறங்கிய பின்னரே அவர் வந்து என் பக்கத்தில் படுத்துக் கொள்வார். கட்டியணைக்க மாட்டார். முத்தமிட மாட்டார். கொஞ்சிக் குலாவ மாட்டார். ஆனால் எப்படியோ பிள்ளைகள் தந்துவிட்டார்.

அவருடைய போக்கு எனக்குப் பிடிபடவில்லை, பிடிக்கவுமில்லை. இதுபோன்ற ஒரு வாழ்க்கையில் அர்த்தம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. நானே வழக்குப் போட்டு அவரிடமிருந்து விவாகரத்துப் பெற்றுக் கொண்டேன்.

நான் சொல்வது என்னவென்றால் தன்னினச் சேர்க்கையில் ஒருவர் ஈடுபடுகின்றார் என்றால் அது அவர் விருப்பம். அதற்கான உரிமையும் அவருக்கு உண்டு. அதற்கான உடல் ரீதியான - மருத்துவ ரீதியான காரணங்களும் இருக்கலாம்.

ஆனால் அவர் திருமணம் செய்யக்கூடாது. திருமணம் செய்து அப்பாவிப் பெண்களை நடுத்தெருவில் கொண்டுவந்து விடக்கூடாது. அதைவிடப் படுமோசமானதுதான் பிள்ளைகளைக் கொடுத்து விடுவது. எனக்கு மட்டும் புரிந்துணர்வுள்ள நல்லிதயம் படைத்த ஒரு மனிதர் கணவராக வாய்த்திருக்காவிட்டால் நானும் நடுத்தெருவுக்கே வந்திருப்பேன்" என்று கண்ணீர் மல்கக் கூறினார் அந்தப் பெண்.

- விசித்திரா



ஜப்பான் கியோட்டா பல்கலைக்கழக ஆய்வாளர்களால் வளர்க்கப்படும் இந்த சிம்பன்ஸிக்கு நூற்றுக்கணக்கான சீன எழுத்துக்களையும், இலக்கங்களையும் சொல்லத் தெரியுமாம்! இப்போ குழந்தை பிறந்திருக்கிறது. குழந்தைக்குத் தன்னைவிடப் பெரிய படிப்பு படிக்க வைக்க வேண்டும் என்று சொல்கிறது போலும்!

## ஐந்தறிவு உலகம்

## பேரறிஞரின் பேச்சுவன்மை

பேரறிஞர் பெர்னாட்ஷா ஒருமுறை அமெரிக்கா சென்றிருந்தார். மிகுந்த நகைச்சுவையுடனும், அதேவேளை சீரியஸாகவும் பேசக்கூடிய அவர், அங்கு மண்டபம் நிறைந்த கூட்டமொன்றில் உரையாற்றினார்.

உரையின் ஒரு கட்டத்தில், "அமெரிக்கர்களில் அரைவாசிப் பேர் முட்டாள்கள்" என்று குறிப்பிட்டு விட்டார்.
உடனே கூட்டத்தில் கூச்சலும் குழப்பமுமாய்ப் போய்விட்டது. அவரது பேச்சுக்கு கடும் எதிர்ப்புக் கிளம்பியது.
பெர்னாட்ஷா அசரவில்லை.
கூட்டத்தைப் பார்த்து, "நண்பர்களே என்னை மன்னியுங்கள். எனது பேச்சின் தவறைத் திருத்த என்னை அனுமதியுங்கள். அதாவது நான் கூற வந்தது என்னவெனில், அமெரிக்கர்களில் அரைவாசிப் பேர் புத்திசாலிகள் என்பதையே..." எனத் தெளிவாக்கினார்.
கூட்டத்தினர் அமைதியானார்கள். பேரறிஞர் தனது உரையை இடையூறின்றித் தொடர்ந்து நிகழ்த்தினார்.

☆☆☆

ஐரிஷ்காரரான பெர்னாட்ஷா தனது தாய்நாடான அயர்லாந்து மீது அளவிலாக் காதல் கொண்டவர்.
ஆங்கிலேயர்கள் அயர்லாந்தை பலவந்தமாகத் தமது நாட்டுடன் இணைத்து அடிமைப்படுத்தியதை தன் வாழ்நாள் பூராவும் வன்மையாக எதிர்த்தவர். அவரது பேச்சு, எழுத்து, செயல் எல்லாவற்றிலும் அந்த எதிர்ப்பை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்த அவர் எப்பொழுதும் தவறியதில்லை.
அவரது நாடகமொன்றின் இரண்டு பாத்திரங்களின் பின்வரும் உரையாடல், அவரது ஆங்கிலேய எதிர்ப்பு உணர்வுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு:

ஒரு பாத்திரம்: "நீ ஒரு ஆங்கிலேயனல்லவா?"
மற்றைய பாத்திரம்: "இல்லை... இல்லை... நான் ஒரு நல்லவன்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிந்துனுவெவ படுகொலை




**இரண்டாயிரமாம் ஆண்டின் ஒக்டோபர் 25 எனும் நாள் கறுப்பு ஜுலையை மிஞ்சிய ஒரு கரிய நாளாகவே பதியப்பட வேண்டும். பண்டாரவளையில் பிந்துனுவெவ எனும் இடத்தில் அமைந்திருந்த புனர்வாழ்வு முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் என்பது இலங்கையின் இனவாத அரசியல் புத்தகத்தில் இன்னுமொரு அத்தியாயமாகப் பதியவேண்டும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.**

**எஸ். மனோரஞ்சன்**

ஒக்டோபர் 25ம் திகதி அதிகாலை 6.45 அளவில் அம்முகாமில் உறங்கிக் கொண்டிருந்த புனர்வாழ்வுக் கைதிகள் திடீரென விழித்துக் கொண்டனர். முகாமைச் சுற்றி எழுந்த பெரும் சத்தமும் கூச்சலும் அப்பகுதியை ஒரு கணம் அதிரவைத்தன.

முதல் நாள் 24ம் திகதி காலைப் பொழுதில் இருந்து புனர்வாழ்வு முகாம் பொறுப்பாளரான கப்டன் வை. பி. அபேரத்னவோடு புனர்வாழ்வு கைதிகள் வாக்குவாதப்படத் தொடங்கினர். அவ்வாக்குவாதம் சற்றே முற்றத் தொடங்கி பகல் பொழுதில் கைகலப்பு நிலையை எட்டியது.

ஆனால் பொழுது சாயும்வேளை நிலைமை ஓரளவு அமைதியடைந்து வழமைக்குத் திரும்பியது. புனர்வாழ்வுக் கைதிகள் மட்டுமன்றி முகாம் பொறுப்பாளரும் கூட நிம்மதியாகவே உறங்கச் சென்றனர்.

ஆனால் முகாமுக்கு வெளியே தீட்டப்பட்ட இக் கொலைத் திட்டம் பற்றி அவர்கள் ஏதும் அறிந்திருக்கவில்லை.

இத்திட்டத்தைத் தீட்டியவர்களும், அவர்களுக்கு உதவியாக இருந்த முகாமைச் சுற்றிய ஒரு சில கிராமத்தவர்களும், பண்டாரவளை பொலீசாருமே இதுபற்றி நன்கு அறிந்திருந்தனர். செய்யப்பட வேண்டியது என்ன என்பது பற்றியும் அவர்கள் மிகத் தெளிவாக தீர்மானித்திருந்தனர்.

புனர்வாழ்வு முகாம் முற்றுமுழுதாக அழிக்கப்பட வேண்டும் என்பது அவர்களது முதல் தீர்மானம். அதைவிட மிக முக்கியமானது முகாமில் இருக்கின்ற அனைத்து புனர்வாழ்வு கைதிகளும் கொல்லப்பட வேண்டும் என்பதாகும்.

சகலதும் நடந்து முடிந்த பிறகு பழியை இன்னொருவர்மீது போடுவதும், சம்பவத்துக்கான அடிப்படைக் காரணத்தைத் திரித்துக் கூறுவதும் இலங்கையின் இனவாத அரசியல் கலாசார வரலாற்றில் ஒன்றும் புதுமையானதல்ல.

பிந்துனுவெவ விடயத்திலும் இதேதான் நடந்தது. கொலைகளுக்குப் பொறுப்பானவர்கள் முகாமைச் சூழவிருந்த சிங்களக் கிராமத்தவர்கள் மீது பழியைப் போட்டனர். இப்பிரச்சினைக்குக் காரணம் அண்மையிலே முகாமுக்கு வந்த அன்ரனி என்கின்ற புலிச் சந்தேக நபர்தான் என்று உடனடியாகவே தகவல்கள் வெளியிடப்பட்டன.

ஆனால் உண்மை நிலை மிகப் பயங்கரமானது.

அதற்குமுன்...
**ஒரு அனுபவம்.**

1999ம் ஆண்டு இந்த முகாமில் இருந்த புனர்வாழ்வு கைதிகளோடு கலந்துரையாடுவதற்கு செல்லக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிட்டியது. கொழும்பிலிருந்து இயங்கும் சமூக சமய நடுநிலையமும், திருமறைக் கலாமன்றமும் இணைந்து நடாத்திய ஒரு பயிற்சிப் பாசறையின் போது **'இன்று நிலவும் அரசியல் சூழ்நிலையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு'** என்ற தலையங்கத்தில் கலந்துரையாடுவதற்கே என்னை அங்கு அழைத்திருந்தார்கள். நானும் என்னோடு நெருங்கிய ஒரு நண்பரும் சென்றிருந்தோம்.

அதிகாலையில் கொழும்பிலிருந்து புறப்பட்டு பண்டாரவளை பிந்துனுவெவ முகாமை அண்மிக்கும் போது காலை 8.30 இருக்கும். திடீரென வானை நிறுத்திய சாரதி "முகாமுக்குள் வந்துவிட்டோம் இறங்குங்கள்" என்றார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒருவித சோதனையும் இல்லாமல் எவ்வித தடுப்புச் சாவடிகளையும் கடக்காமல் எப்படி தடுப்பு முகாமுக்குள் வந்தோம் என்பதே எனது கேள்வியாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலீசாரே பொறுப்பு

சவக்காலையில் சடலமாய்



வாகனத்தின் ஜன்னலூடாக பார்க்கிறபோது பல்வேறு வயது வித்தியாசத்தில் நெற்றியில் திருநீறணிந்து, சந்தனப் பொட்டு இட்ட இளைஞர்களின் முகங்கள் தெரிந்தன. அவர்கள் சர்வ சாதாரணமாக எம்மைப் பார்த்தார்கள். வாகனத்தைவிட்டு இறங்கிய நானும் எனது நண்பனும், புலி இயக்க உறுப்பினர்கள் பற்றி எமக்குள் இருக்கும் பீதி கலந்த கசப்புணர்வை மறைத்துக் கொண்டு அவர்களைப் பார்த்துச் சிரிக்க முனைந்தோம்.

வடகிழக்கைச் சேர்ந்த இளைஞர்கள் என்பதும் நன்கு பயிற்றப்பட்ட உடல்கள் என்பதும் அவர்களைப் பார்த்ததும் புரிந்தது. ஒருசிலர் மட்டும் எம்மைப் பார்த்துச் சிரித்தனர். பலரின் முகங்கள் எவ்வித உணர்வுகளையும் வெளிப்படுத்தாமல் இறுகியிருந்தன.

இதுதான் பிந்துனுவெவ முகாமில் சரியாக ஒரு வருட காலத்துக்கு முன் காலடியெடுத்து வைத்தபோது எமக்கு ஏற்பட்ட முதல் அனுபவம்.

இரண்டு மூன்று நீளமான தகரக் கொட்டகைகள் கடும் பச்சை நிறம் பூசப்பட்டிருந்தன. தோட்டப் புறங்களில் அமைந்த லயக் காம்பராக்களை அவை எமக்கு நினைவூட்டின. முகாம் நுழைவாயிலில் குடை போன்று கூரை அமைக்கப்பட்ட ஒரு காவல் சாவடியில் ஒரு அரைப் பொலீஸ்காரர் (ரிசேவ்) ஏனோ தானோவென நின்றிருந்தார்.

அழகாக அமைக்கப்பட்ட ஓரிரு கட்டடங்கள் முகாமுக்குள் அமைந்திருந்தன. அவை காரியாலயங்களும் முகாம் பொறுப்பாளரினதும், உதவியாளர்களினதும் விடுதிகள், இரண்டு மைதானங்களும் காணப்பட்டன. ஒன்று கைதிகள் மாலையில் வொலிபோல் விளையாடுவதற்கு அமைக்கப்பட்டது. இன்னுமொன்று வேறு விளையாட்டுகளுக்குப் பயன்படுத்தக் கூடியது. ஒருமூலையில் சிறிய மேடை போல அமைக்கப்பட்டு அதில் அமைந்திருந்த கொடிக் கம்பத்தில் தேசியக் கொடி பறக்கவிடப்பட்டிருந்தது.

முகாமைச் சுற்றி ஒரு சாதாரண மரக்கறித் தோட்டத்துக்கு போடுமளவுக்கு முட்கம்பி வேலி மட்டுமே அமைந்திருந்தது. ஒரு தடுப்பு முகாமுக்குரிய கடும் பாதுகாப்பு ஏதும் காணப்படவில்லை.

**கதிர்காமம் போகிறவர்களுக்கு "அரோகரா", சிறிமா போதிக்கு போகிறவர்களுக்கு "சாது சாது", சபரிமலைக்குப் போகிறவர்களுக்கு "சரணம் ஐயப்பா" என்பது போல இங்கே "சாந்தி சேர்" போலும்...**

இவற்றையெல்லாம் ஒருமுறை நோட்டமிட்டு திரும்பியபொழுது நாம் நின்ற இடத்திற்கு சற்றே உயரத்தில் அமைந்திருந்த காரியாலயத்திலிருந்து சுமாரான உயரமுடைய சற்றுப் பருத்த உருவம் ஒன்று எம்மை நோக்கி வந்தது. அரைவாசி முடி உதிர்ந்து பாதித் தலை வழுக்கையாக இருந்தது. காலிலே சாதாரண பாட்டா செருப்பும் பழைய ஜீன்சும் அணிந்து முழுக் கைச் சேட்டை ஜீன்சுக்கு மேலால் விட்டபடி அவ் உருவம் எம்மை நோக்கி வந்தது. முகத்தில் கம்பீரமான மீசை, மூன்று நாட்கள் சவரம் பண்ணப்படாத முகம். பருத்த தொந்திக்கு மேலால் இழுத்துப் பூட்டப்பட்ட சேட் பட்டன் எந்த நேரத்திலும் தெறித்து விடலாம்...

வாய்க்குள் குதப்பிக்கொண்டிருந்த வெற்றிலை எச்சிலை பொளிச்செனத் துப்பிவிட்டு, "வாருங்கள் மிஸ்டர் மனோரஞ்சன், நான்தான் கப்டன் அபயரட்ன. இம்முகாமுக்குப் பொறுப்பாக இருக்கிறேன்" என சிரித்த முகத்தோடு எம்மை வரவேற்றார்.

அவர் எமக்கருகில் வந்ததும் அவ்வழியால் கடந்து சென்ற புனர்வாழ்வுக்கைதிகள் எல்லோரும் தமது உள்ளங்கையை உயர்த்தி பகவான் சாயிபாபா ஆசிர்வாதம் வழங்குவது போல பொறுப்பாளரை நோக்கி ஏதோ சொல்லிவிட்டுப் போனார்கள். பதிலுக்கு அவரும் ஏதோ முணுமுணுத்தார். எமக்கு அந்தச் சொல் என்னவென்று சரியாக விளங்கவில்லை. அவர் எம்மை காரியாலயத்துக்கு அழைத்துச் சென்றார்.

போகிற வழியில் நின்ற கைதிகள் ஒவ்வொருவரும், அக்கம்பக்கத்தில் கதைத்துக் கொண்டிருந்த ஒவ்வொரு கைதியும் தமது கைகளை உயர்த்தி அதைச் சொன்னார்கள். கப்டனும் எவ்வித சலிப்புமின்றி அத்தனை பேருக்கும் திரும்பத்திரும்ப ஏதோ முணுமுணுத்தார். அதற்கு மேல் எனக்குப் பொறுமை இருக்கவில்லை.

"அவர்கள் என்ன சொல்லி விட்டுப் போகிறார்கள். நீங்கள் என்ன சொல்லிவிட்டு வருகிறீர்கள்" என்று கேட்டேன்.

"ஓ.. அதுவா... அவர்கள் 'சாந்தி சேர்' என்பார்கள், நான் 'சாந்தி' என பதிலிறுப்பேன்" என்றார் சிரித்துக்கொண்டே.

சாந்தி என்ற சொல்லே அவர்களை அமைதிப்படுத்தி வைத்திருக்கும் மந்திர உச்சாடனம் போலும். கதிர்காமம் போகிறவர்களுக்கு "அரோகரா", சிறிமா போதிக்குப் போகிறவர்களுக்கு "சாது சாது", சபரிமலைக்குப் போகிறவர்களுக்கு "சரணம் ஐயப்பா" என்பது போல இங்கே "சாந்தி சேர்" போலும்.

அவரோடு அமர்ந்து தேநீர் அருந்தும்போது எமது இரண்டாவது கேள்வி, "முகாமுக்கு கடுமையான காவல் நடவடிக்கைகள் இல்லாதிருப்பது ஏன்?" என்பதே.


எதுவும் யோசிக்காமல் பதில் அவரிடமிருந்து பட்டென வந்தது. "புனர்வாழ்வு முகாமுக்கு கடுமையான பாதுகாப்பு போடுவது தவறு. முகாமிலுள்ள கைதிகளுக்கு தாம் சுதந்திரமாக விடப்பட்டுள்ளோம் என்னும் உணர்வு வர வேண்டும். கடுமையான காவல் போட்டால் இது சிறையாகிவிடாதா?"

"இங்கிருந்து யாரும் தப்பிப் போக மாட்டார்களா? போனால் என்ன செய்வீர்கள்?"



பாலுக்கும் காவல்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாடகப் பயிற்சியில்...

கப்டன் அபயரட்னவிடம் பதில் தயாராக இருந்தது.

"தப்பி எங்கே போகப்போகிறார்கள். தப்பி வெளியிலே போவதைவிட இங்கிருப்பது அவர்களுக்கு பாதுகாப்பு"

எமக்கு சற்று ஆச்சரியமாகவே இருந்தது.

"கடந்த மாதம் ஐந்து பேர் இந்த முகாமிலிருந்து தப்பிச் சென்றார்கள். இருவரை அக்கம் பக்கத்தில் கண்ட மக்கள் பிடித்து கொஞ்சம் அடியும் போட்டு எமக்குத் தகவல் அனுப்பினார்கள். இன்னும் இருவர் மூன்று நாட்களாக பக்கத்திலிருக்கின்ற பற்றைக் காட்டுக்குள் ஒளிந்திருந்துவிட்டு தாமாகவே வந்து சரணடைந்துவிட்டார்கள்.

ஒருவர் மட்டும் திரும்பி வரவேயில்லை. பின்னர்தான் அறிந்தோம்அக்கைதி எப்படியோ தப்பி மட்டக்களப்பில் அவருடைய வீட்டுக்குச் சென்றுவிட்டதாகவும் அதை அறிந்த புலிகள் வந்து அவரைக் கூட்டிச் சென்று விசாரித்ததாகவும் முகாமிலிருந்து தப்பிவந்த கதையை புலிகள் நம்பத் தயாராக இருக்கவில்லை. இயக்கத்தை விட்டு தப்பியோடி சரணடைந்துவிட்டு இப்போது தப்பியோடி வந்தது போல நாடகமாடி அரசாங்கத்திற்கு உளவு வேலை பார்க்க வந்திருக்கிறாய் எனக் கூறி அவ்விளைஞனுக்கு மரண தண்டனை விதித்துவிட்டனர்.

இந்தச் சம்பவத்தை நாங்கள் முகாமிலுள்ள ஏனையவர்களுக்குச் சொல்லியிருக்கிறோம். எனவே இங்கிருந்து தப்பியோட யாரும் முனைவது இல்லை."

நாங்கள் அங்கு சென்ற வேளை 112 பேர் அம்முகாமில் புனர்வாழ்வு கைதிகளாக இருந்தனர். அவர்கள் எல்லோரையும் ஒரு குறிப்பிட்ட தகரக் கொட்டகைக்குள் போய் அமரும்படி கப்டன் அபயரட்ன செய்தி அனுப்பினார். அவருக்கு உதவியாக அங்கு இன்னுமொரு இராணுவ லெப்டினன்ட் - அவரின் பெயரும் அபேரட்னதான் - அத்தோடு இன்னும் 5 புனர்வாழ்வுப் பயிற்சியாளர்களும் அங்கு இருந்தனர். அவ்வைந்து பேரும் தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் பயிற்றப்பட்ட மலையக தமிழ் இளைஞர்களும் முஸ்லிம்களுமாவர்.

**இவர்களின் உடல்களில் ரவைக் கூடுகளும், கைகளில் துப்பாகிகளும் றொக்கட் லோஞ்சரும் இல்லையே ஒழிய அவர்கள் அமர்ந்திருந்த விதமும், நிலவிய கப்சிப்பென்ற அமைதியும் எமக்கு அதையே நினைவூட்டின.**

சந்திப்பு மண்டபத்துக்குள் நுழைந்தபோது எனக்கும், எனது நண்பருக்கும் திடீரென தூக்கி வாரிப் போட்டது. 112 பேரும் கோடு கிழித்து வரிசையாக 5 வரிசைகளில் அமர்ந்திருந்தனர். அமர்ந்திருந்த விதத்தைப் பார்த்தபோது விடுதலைப் புலிகளின் பிரசார ஒளி நாடாக்களில் தாக்குதலுக்குப் போவதற்கு முன் கட்டளையை ஏற்றுக்கொள்வதற்கான ஒரு படையணியைப் போல நிலத்தில் அமர்ந்திருந்தனர்.

இவர்களின் உடல்களில் ரவைக் கூடுகளும், கைகளில் துப்பாக்கிகளும் றொக்கட்லோஞ்சரும் இல்லையே ஒழிய அவர்கள் அமர்ந்திருந்த விதமும், நிலவிய கப்சிப்பென்ற அமைதியும் எமக்கு அதையே நினைவூட்டின.

நான் என்னைப் பத்திரிகையாளன் என அறிமுகப்படுத்திக் கொண்டேன். அமர்ந்திருந்தவர்கள் ஒருகணம் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டனர். "நான் உங்களோடு மனந்திறந்து பேச வந்திருக்கிறேன்" என்றேன். சிலர் தலையைக் குனிந்து கொண்டு தமக்குள் சிரித்துக்கொண்டனர். ஆனால் பலரும் எனது வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையையும் மிகக் கூர்மையாக அவதானித்துக் கொண்டிருந்தனர்.

திடீரென ஒரு இளைஞன் கையை உயர்த்தினான். "அண்ணை ஒரு விசயம், ஒண்டு நீங்கள் பத்திரிகையாளர் என்று சொல்லுறியள். ஏதோ மனம் திறந்து கதைக்கிறன் என்றும் சொல்றியள். அப்படியானால் இதில வந்திருக்கிற எங்கட முகாம் பயிற்சியாளர் எல்லாரையும் போகச் சொல்லுங்கோ. அதற்குப் பிறகு நாங்களும் - நீங்களும் மட்டும் தனிய இருந்து பேசுவம். அவையையும் வைச்சுக்கொண்டு எங்களால சுதந்திரமாக கதைக்கேலாது. உங்களால ஏலும் எண்டா காம்ப் பொறுப்பாளர் கப்டன் ஐயாட்ட கேட்டுப்பாருங்க. இல்லாட்டி நீங்கள் என்ன சொல்ல வந்தியளோ அதைச் சொல்லுங்கோ. நாங்க பேசாம கேட்டுக் கொண்டிருக்கிறம்"

என்று மூச்சுவிடாமல் கூறிவிட்டு அமர்ந்தான்.

தகரக் கொட்டகை ஒரு நிமிடம் கைதட்டலால் அதிர்ந்தது. 112 பேரும் சொல்லி வைத்தாற் போல் கைதட்ட ஆரம்பித்து ஒரே நேரத்தில் டப்பென நிறுத்தினர். 'அட இதற்கும் பயிற்சிதானா' நானும் எனது நண்பரும் ஒரு கணம் அசடு வழிந்தோம்.

எமக்குப் பின்னால் இருந்த பயிற்சியாளர்களைத் திரும்பிப் பார்த்தோம். அவர்கள் நிலைமையைப் புரிந்துகொண்டனர். ஒருவர் கப்டனைச் சந்திக்கச் சென்றார். 10 நிமிடத்தில் பதில் வந்தது. கப்டன் அனுமதி வழங்கினார். பொறுப்பாளர்கள் வெளியேறினர்.

அவ்வளவுதான் மறுகணம் மண்டபத்திலிருந்த அனைவருமே பேசத் தொடங்கினர். என்னாலும் எனது நண்பராலும் எதுவுமே பேசமுடியவில்லை. பேச வேண்டிய அவசியம் இல்லை. அவர்களிடமிருந்து கேட்பதற்கு அவ்வளவு விடயங்கள் இருந்தன. விரக்தியும், வேதனையும், கோபமும் எல்லோர் வாயிலிருந்தும் வந்தது.

"டே ஒவ்வொருத்தரா கதையுங் கப்பா. ஏண்டா கத்துறியள்"

ஒருவன் எழும்பி பெரிதாகக் கத்தினான். அவர்களாலேயே அவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. பத்திரிகையாளர் மீது கடுமையான கோபம் வெளிப்பட்டது. குறிப்பாக சிங்கள,ஆங்கிலப் பத்திரிகைகள் மீது அதிக கோபத்தைக் காட்டினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தற்செயலாய் தப்பித்து....

"பேப்பர்காரர் எண்டு சொல்லிக்கொண்டு இஞ்ச வருவாங்கள். நாங்கள் சாப்பிடேக்க விளையாடேக்க சிரிச்சுச் சிரிச்சு விளையாடுறதை படம் எடுத்துத் தங்களுக்குத் தேவையான மாதிரி பேப்பரில எழுதுவாங்க. 'பிரபாகரனிட்ட இருந்து தப்பியோடி வந்த இளைஞர்கள் மகிழ்ச்சியாக இருப்பதாக'க் கூறி எங்கட படத்தைப் போடுவாங்கள். பிரபாகரனின் யுத்தத்தை நாங்கள் வெறுப்பதாகவும் சமாதானத்தை விரும்புவதாகவும் நாங்கள் சொன்னதாக எழுதுவாங்கள்...

அண்ணை, இந்த 112 பேற்ற சொந்தக்காரரும் வட - கிழக்கில் இருக்கினம். எல்லாற்ற குடும்ப விபரமும் புலிக்குத் தெரியும். இந்தப் பேப்பரை புலிகள் வாசிச்சா எங்கட குடும்ப ஆக்களுக்கு என்ன நடக்கும். நீங்களும் இந்தமாதிரி எளிய வேலை செய்வீங்கள் எண்டால் நாங்கள் ஒண்டுமே கதைக்க மாட்டோம்." எல்லோரும் இக்குற்றச்சாட்டை ஆமோதித்தார்கள்.

அவர்களோடு கதைக்கும் எந்தவொரு விடயத்தையும் எழுதவோ, பிரசுரிக்கவோ மாட்டோம் என உறுதிகூறிய பின்பே அவர்கள் சுதந்திரமாக கதைத்தார்கள்.

புனர்வாழ்வு முகாமில் சாதாரண சிறையில் உள்ள பிரச்சினைகள் இல்லாவிட்டாலும் இளம் வயதில் அம்முகாமுக்குள் அடைத்து வைக்கப்பட்டிருப்பதனால் ஏற்படக்கூடிய மன உளைச்சலும் மனோவதையும் அவர்களிடம் நிறையவே வெளிப்பட்டன.

அம்முகாமில் ஒருவர் இருக்கக்கூடிய அதிகூடிய காலம் ஒரு வருடம் தான் என்றாலும் அந்த ஒரு வருடமும் அவர்களால் மகிழ்ச்சியாக இருக்க முடியாது. எவ்வளவு விரைவில் இதிலிருந்து விடுபட்டு இந்த நாட்டை விட்டு ஓடுவோம் என்பதே அவர்களின் பொதுக் குரலாக இருந்தது.

திருமறைக் கலாமன்றத்தினர் நடத்திய நாடகப் பயிற்சிப் பாசறையில் மிக உற்சாகமாக அவர்கள் பங்கு கொண்டிருந்தனர்.

கப்டன் அபேரத்னவோடு நாம் கதைக்கும் பொழுது ஒரு முக்கிய விடயத்தைச் சொன்னார். "எனக்கோ இங்குள்ள ஏனைய பயிற்சியாளர்களுக்கோ புனர்வாழ்வளிப்பது தொடர்பான



புனர்வாழ்விலிருந்து புதைகுழிக்கு.

விசேடபயிற்சி ஏதும் கிடையாது. ஏதோ எமக்குத் தெரிந்த வகையில் இந்தக் கைதிகளோடு பாரிய முரண்பாடு இல்லாமல் இதைக் கொண்டு நடத்திச் செல்கிறோம். தேசிய இளைஞர் சேவை மன்றம் இதற்கான செலவைத் தருகிறது. ஐந்து உதவியாளர்களை தந்திருக்கிறது, அவ்வளவுதான். என்னைப் பொறுத்தவரை இப்போது என் வாழ்க்கை இம்முகாமோடு ஒட்டிப்போய் விட்டது.

ஆனால் ஒரே ஒரு பிரச்சினை. சுற்றியுள்ள கிராமத்தவர்கள் இம்முகாம் இப்பிரதேசத்தில் இருப்பதை விரும்பவில்லை. இம்முகாமினால் தமக்கு ஆபத்து வரலாம் என அவர்கள் கருதுகிறார்கள்" என சொன்னார். ஏனென்று கேட்டோம்.

"இம்முகாமுக்கு சரியான பாதுகாப்பு இல்லை. என்றைக்காவது புலிகள் இம்முகாமைத் தாக்கி இக்கைதிகளை விடுவிக்க வருவார்கள். அப்போது சுற்றிவர உள்ள சிங்களக் கிராமத்தவரை தாக்கிவிட்டுத்தான் செல்வார்கள். இப்பயம் தொடர்ச்சியாக இம்மக்கள் மத்தியில் இருக்கிறது" என்றார்.

இதுபற்றி அரசாங்கத்துக்கோ பாதுகாப்பு அமைச்சுக்கோ எடுத்துச் சொல்லவில்லையா எனக் கேட்டபோது, "எத்தனையோ தரம் இதுபற்றிச் சொல்லிவிட்டேன். ஆனால் எவரும் அக்கறை எடுக்கிறார்கள் இல்லை. இங்கே வருகின்ற பத்திரிகையாளர்கள் கூட தமக்குத் தேவையானவைகளைத்தான் எழுதுகிறார்களே ஒழிய முக்கியமான விடயங்களை எழுதுவதில்லை.

இம்முகாம் முன்னர் ஜே.வி.பி. இயக்கத்தில் இருந்தவர்களைப் புனர்வாழ்வு செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்பு 94ம் ஆண்டிலிருந்து விடுதலைப் புலிகளிலிருந்து சரணடைந்தவர்கள் புனர்வாழ்வுக்காக கொண்டு வரப்பட்டனர். நான் கடந்த ஐந்து வருடமாக இங்கே இருக்கிறேன். நான் ஒரு பழைய ஆசிரியர். பின்னர் இராணுவ தொண்டர் படையில் சேர்ந்தேன். எனவே எனக்கு இத்தொழில் ஒத்துப் போகிறது..."

இதுதான் பிந்துனுவெவ முகாமின் உண்மை நிலை. ஒக்டோபர் 25ம் திகதி இப்படுகொலைகள் நடக்கும்வரை முகாம் பொறுப்பாளருக்கும் கைதிகளுக்குமிடையே முரண்பாடுகள் இருப்பதாக எவருமே கூறவில்லை. கிராம மக்களுக்கும் முகாம் கைதிகளுக்குமிடையே பாரிய பிரச்சினைகள் இருப்பதாக எவருமே எழுதவில்லை. ஆனால் கொலைகள் நடந்து சகலரும் அழிக்கப்பட்ட பின்னரே இவ்விடயங்கள் கூறப்பட்டன.

24ம் திகதி காலையில் எழுந்த வாக்குவாதமானது முகாமிலிருந்த கைதிகளில் சிலர், தேர்தலுக்கு முன்னரே தமக்கான புனர்வாழ்வுக் காலம் முடிவடைந்துவிட்டதால் தம்மை விடுதலை செய்யும்படி கோரியிருந்தனர். ஆனால் தேர்தல் காலத்தில் அவர்களை வெளியே விட வேண்டாம். தேர்தலுக்குப் பின்னர் வெளியே விடும்படி மேலிடத்திலிருந்து முகாம் பொறுப்பாளருக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

தேர்தல் முடிந்து இரு வாரங்களாகியும் தம்மை விடுதலை செய்யாது வைத்திருப்பது தொடர்பாக அவர்கள் சற்று நிதானம் இழந்தனர். 24ம் திகதி மதிய உணவு வேளையில் இப் பிரச்சினை சற்றே சூடு கண்டது. அப்போது முகாமில் எல்லாமாக 46 கைதிகளே எஞ்சியிருந்தனர். மாலை ஆறு





ஐந்தறிவு உலகம்

பூனைக்குட்டிகளை அரவணைத்து, தோடம்பழ பானம் வழங்கும் பெண்குரங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முகாமுக்குள் இறைவழிபாடு

மணியளவில் வழமையான பொதுக்கூட்டம் நடைபெற்றது. அப்போதுதான் பொறுப்பாளர் கப்டன் அபேரட்னவையும் உதவியாளர் லெப்டினன்ட் அபேரட்னவையும் சுற்றி கைதிகள் நின்றுகொண்டு தமது விடுதலைக்கு சரியான பதில் தந்துவிட்டுப் போகும்படி கோஷம் எழுப்பத் தொடங்கினர்.

எப்படியாவது தன்னுடைய காரியாலய அறைக்குள் போய் கதவை மூடிக்கொள்வது பாதுகாப்பாக இருக்கும் என்று கருதி கூட்டம் நடக்கும் இடத்திலிருந்து நகர முயன்ற கப்டனையும் லெப்டினனையும் கைதிகள் அசைய விடவில்லை. சுற்றி நின்றபடி கூச்சலிட ஆரம்பித்தனர்.

இந்நிலையை அவதானித்த காவல் கடமையில் இருந்த ரிசர்வ் பொலீஸ் கொன்ஸ்டபின் பொறுமையிழந்து வானத்தை நோக்கி ஒரு துப்பாக்கி வேட்டை தீர்த்து கைதிகளைக் கலைக்க முயன்றார். துப்பாக்கி வேட்டு கைதிகள் மனோநிலையைக் குழப்பியிருக்கலாம். அதன் பின் அவர்கள் சற்று மூர்க்கமாக நடந்துகொண்டனர்.

சிலர் ஓடிச் சென்று முகாமில் தோட்ட வேலைக்குப் பாவிக்கின்ற ஆயுத அறையின் கதவை உடைத்து அதற்குள்ளிருந்த ஆயுதங்கள் சிலவற்றைக் கையில் எடுத்துக்கொண்டனர். இதே வேளை கூட்டத்திற்குள்ளிருந்து விடுவித்துக் கொண்டு வெளியே ஓட முகாம் பொறுப்பாளர் முயற்சித்தபோது நடந்த இழுபறியில் அவரின் மார்பில் காயமேற்பட்டது. அவர் அணிந்திருந்த மேல் சட்டை இரத்தம் தோய்ந்தது.

முகாமை விட்டு வெளியே ஓடி அருகில் இருந்த ஒரு வீட்டுக்குள் நுழைந்து அங்கிருந்த தொலைபேசியில் முகாமில் நிலைமை சற்று குழப்பமாக இருப்பதால் உடனடியாக மேலதிக பொலிசாரை அனுப்பும்படி அவர் கேட்டுக்கொண்டார்.

செய்தி கிடைத்ததும், முப்பது பேரடங்கிய ஆயுதம் தரித்த பொலீஸ் குழுவினர் ஏழரை மணியளவில் முகாமுக்கு விரைந்தனர். அனைவரிடமும் ரி 56 ரக துப்பாக்கிகள் இருந்தன. ஆயுதம் தரித்த பொலிசார் முகாமுக்குள் வருவதைக் கண்ட கைதிகள் முகாமுக்குள் ஆயுதங்களோடு வரவேண்டாம் எனக் கூக்குரலிட்டு எச்சரித்தனர்.

பொறுப்பாகச் சென்றிருந்த பொலீஸ் அதிகாரி ஆயுதம் தரித்த பொலிசாரை வெளியே நிறுத்திவிட்டு வெறுங்கையோடு உள்ளே நுழைந்து கப்டன் அபேரத்னவோடும் கைதிகளோடும் பேசினார். கைதிகள், காவலில் இருந்த ரிசர்வ் கான்ஸ்டபிள் வானத்தை துப்பாக்கி வேட்டுத் தீர்த்தது தவறு என்றும் முகாம் பொறுப்பாளரை தாக்க எவ்விதத்திலும் தாம் முயற்சிக்கவில்லை என்றும் கூறினர்.

ஆனால் துப்பாக்கி வேட்டு தீர்த்ததின் பின் கோபம் கொண்ட கைதிகளில் யாரோ ஒருவர் லெப்டினனுக்குக் காயம் ஏற்படும் வகையில் தாக்கியிருக்கிறார். அதே வேளை சிலர் முகாம் காரியாலயத்திலிருந்த சில மின் குமிழ்களையும் ஜன்னல் கண்ணாடிகளையும் அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். சமையலறைப் பக்கமிருந்த கேஸ் சிலிண்டரை வெளியே இழுத்து வந்திருக்கின்றனர்.

தாம் தாக்கப்படலாம் என்ற பயம் காரணமாக எல்லோரும் கைகளிலே கிடைத்த ஏதோ ஒன்றை எடுத்துக் கொண்டனர். இதற்கு மேலதிகமாக பொலிசாரின் துப்பாக்கியைப் பறிக்கவோ முகாம் பொறுப்பாளரைப் பிடித்துப் பணய நாடகம் நடத்தவோ முயற்சிகள் நடக்கவில்லையென்பதே உண்மை.

எட்டு மணியளவில் தலைமைக் காரியாலய பொலீஸ் அதிகாரி (HQI), கப்டன் அபேரத்னவுடன் பேசியபோது, "இப்போது நிலைமை சற்று அமைதியடைந்துவிட்டது. தன்னால் நிலைமையைச் சமாளிக்க முடியும்... இவ்வாறான வாக்குவாதம் ஒரு சாதாரண விடயமே" என்று கூறினார்.

இதேவேளை பொலீசார் அறிவித்ததன் பொருட்டு தியத்தலாவ இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினரும் அங்கு வந்திறங்கினர். புனர்வாழ்வு முகாமுக்குள் ஏதோ பிரச்சினை என்று கேள்விப்பட்டு 100-150 கிராமத்தவர்களும் அங்கு கூடியிருந்தனர்.

இதனைக் கண்ட பொலிஸ் அதிகாரி, தான் என்ன செய்ய வேண்டுமென கேட்டபொழுது, "முகாமுக்குள்ளே நிலைமையை தன்னால் சமாளித்துக்கொள்ள முடியும். ஆனால் முகாமுக்கு வெளியிலிருந்து எவரும் முகாமுக்குள் நுழையாதபடி பார்த்துக்கொள்ளுமாறு பொலீசாருக்கு உத்தரவிடுங்கள்" என்று கப்டன் அபேரட்ன கேட்டுக் கொண்டார்.

இரவு 10.30 வரை அங்கு நின்ற தலைமைக் காரியாலய பொலீஸ் அதிகாரி, நிலைமை சுமுகமடைந்ததினால் இரு பொலீஸ் அதிகாரிகளை பொலீஸ் படையினரோடு அங்கு நிறுத்தி விட்டு சென்றுவிட்டார்.

இரவு 1.30 அளவில் நிலைமை முற்றிலும் சுமுகமடைந்ததினால் இராணுவத்தினரும் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுவிட்டனர்.

இராணுவத்தினர் வெளியேறி விட்டதை அறிந்த பண்டாரவளை உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் (DIG) இன்னும் சில பொலீசாரை ஸ்தலத்திற்கு அனுப்பி வைத்தார். ஒட்டுமொத்தமாக 60 பொலீசார் வரையில் முழுவதும் ஆயுதபாணிகளாக அங்கு காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

25ம் திகதி அதிகாலை 6.30 அளவில் தலைமைக் காரியாலய பொலீஸ் அதிகாரிக்கு, புனர்வாழ்வு முகாமுக்கு அருகே நூற்றுக்கணக்கில் சிவிலியன்கள் திரளுவதாக பொலிஸ் வானொலித் தொடர்பு மூலம் செய்தி எட்டியது அவர் அதை உடனேயே உதவிப் பொலீஸ் அத்தியட்சகருக்கு அறிவித்ததாகவும், ஆனால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

மீண்டும் உடனடியாக இராணுவத்தினரை அங்கு அனுப்புவதற்கும் பொலிசாரினால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. உத்தரவை மீறி முகாமுக்குள் நுழைய முயற்சிப்போரைத் தடுப்பதற்கோ மீறினால் சுடுவதற்கோ உத்தரவுகள் சரியாக வழங்கப்படவில்லை.

திடீரென அங்கு திரண்ட கூட்டம் சாதாரண சிவிலியன்கள் அல்ல, திட்டமிடப்பட்டு அழைத்துவரப்பட்ட குண்டர் படை




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



நாடகப் பயிற்சியில்...

**சம்பிக்க ரணவக்க என்பவரின் தலைமையில் இயங்கும் பயங்கரவாத எதிர்ப்புத் தேசிய இயக்கமும், சிஹல உறுமய கட்சியும், இரு பிரதான கட்சிகளின் உள்ளூர் அரசியல்வாதிகளும் இச்செயற்பாட்டின் பின்னணியில் இருந்ததாகச் சந்தேகிப்பதற்கு இடமுண்டு.**

என்பதைப் பொலீசார் நன்கு அறிந்திருந்ததால்தான், கண்டும் காணாதிருந்து விட்டார்கள் என்பதே உண்மை.

திட்டமிட்ட வகையில் அழைத்துவரப்பட்ட அக்குண்டர் படை இரும்புக் கம்பிகள், கத்திகள், வாள்கள் என்பவற்றை கைக-ளில் தயாராகக் கொண்டுவந்திருந்தது. முகாமின் முன்புற வழியாக ஒரு கூட்டமும் முகாமின் பின்புற வழியாக ஒரு கூட்டமும் திமுதிமுவென முகாமுக்குள் நுழைந்தன.

தூக்கத்திலிருந்து விழித்து வெளியே வந்து வெறுங்கையோடு நின்ற புனர்வாழ்வுக் கைதிகள் கொடூரமாகத் தாக்கப்பட்டனர். குண்டர்களின் கையில் இலகுவில் அகப்பட்ட வயது குறைந்த சிறார்களே முதன் முதலில் கொடூரமாகத் துண்டாடப்பட்டனர்.

கூட்டத்தோடு சேர்ந்து துப்பாக்கியை ஏந்தியவாறு ஒரு தொகை பொலீசாரும் முகாமுக்குள் நுழைந்தனர். ஆனால் மேல் நோக்கி ஒரு வேட்டைத் தீர்க்கவோ அல்லது குண்டர்களைத் தடுக்கவோ எந்தவித முயற்சியும் பொலீசார் எடுக்கவில்லை. மாறாக, குண்டர்களிடம் பொலீசாரே சில கைதிகளை அடையாளம் காட்டி அவர்களைத் தாக்கும்படி கூறியதை தப்பிய சில கைதிகள் கண்டிருக்கிறார்கள்.

ஒரு கைதி வேலியால் பாய்ந்து தப்பி ஓட முயற்சித்தபோது அவரை பொலீசாரே சுட்டு வீழ்த்தியிருக்கிறார்கள். முகாமுக்குள் கிடந்த போர்வைகள் மெத்தைகளை இழுத்து வந்த குண்டர் படையினர் இறந்து விழுந்துகிடந்த கைதிகளின் மேல் போட்டுத் தீயிட்டு உடல்களைக் கருக்கினர்.

சகல அழிவு வேலைகளும் திட்டமிடப்பட்டபடி 15 நிமிடங்களுக்குள் நடந்து முடிந்தன. கொலை செய்வதற்கென மிகவும் பழக்கப்பட்ட இக்காடையர் கூட்டம் வெற்றிகரமாக சகலதையும் முடித்து வெளியேறியது.

அதன் பின்பே இராணுவத்தினருக்கும் பொலீஸ் உயரதிகாரிகளுக்கும் தகவல்கள் சென்றன. உண்மை திரித்துக் கூறப்பட்டது. அதிகாலையில் எழுந்த கைதிகள், வீதியால் போய் வந்துகொண்டிருந்த சாதாரண சிவில் மக்களிடம் ஆத்திரமூட்டும் வகையில் நடந்துகொண்டதாகவும், அவர்கள் மீது கற்களை வீசியதாகவும் அதனால் ஆத்திரமுற்ற மக்களே இதைச் செய்ததாகவும் கதையளக்க ஆரம்பித்தனர்.

ஆனால் சாதாரண கிராம மக்கள் அவ்வளவு விரைவாக எவ்வாறு ஒன்றாகத் திரண்டார்கள், ஆயுதங்கள் எப்படி அவர்கள் கைகளுக்கு வந்தன, 15 நிமிடத்திற்குள் இவ்வளவு அழிவையும் செய்துவிட்டு எப்படி மறைந்து போயினர் என்பது பற்றிய கற்பனைக்கதையை நம்பத்தகுந்தபடி புனைவதற்கு பொலீசாரினால் முடியாமல் போய்விட்டது.

குற்றத்தை இராணுவத்தினர் மேல் பொலீசார் போட்டனர். ஆனால் தியத்தலாவை கட்டளை அதிகாரியோ அதனை மறுத்தார். 'இராணுவத்தினர் இரவு 1.15 வரையே முகாமருகே நின்றதாகவும் நிலைமை சுமுகமடைந்துவிட்டது என பொலீசார் கூறியபின்பே தாம் அங்கிருந்து புறப்பட்டு வந்தாகவும், மீண்டும் மறுநாள் காலை 8.30க்குத்தான் தனக்கு மீண்டும் பிரச்சினை தொடர்பாகத் தகவல் வந்ததாகவும், படைகள் 9.15க்கு அங்கே சென்றது. ஆனால் எங்களுக்குத் தகவல் தருவதற்கு முன்னரே அங்கு சகலதும் நடந்து முடிந்துவிட்டது' என பொலீசாரை நோக்கியே அவர் விரல்களை நீட்டினார்.

இத்தாக்குதலைத் தொடுப்பதற்கு முன்னர், இதைத் திட்டமிட்டவர்கள், 'பிரதேசவாசிகள்' என்ற பெயரில், **'புலிகளின் இறைச்சியை எமது நாய்களுக்கு உணவாக்குவோம்', 'நல்லவிதமாகவோ கெட்டவிதமாகவோ புலிகள் முகாமை முற்றாக அழிப்போம்', 'தலைவரின் பிறந்த தினத்துக்குக் குட்டிகளைப் பலி கொடுப்போம்'** என்னும் போஸ்டர்களை 24ந் திகதி இரவே அப்பகுதியில் ஒட்டியிருந்தனர்.

**சம்பிக்க ரணவக்க** என்பவரின் தலைமையில் இயங்கும் பயங்கரவாத எதிர்ப்புத் தேசிய இயக்கமும், சிஹல உறுமய கட்சியும், இரு பிரதான கட்சிகளின் உள்ளூர் அரசியல்வாதிகளும் இச்செயற்பாட்டின் பின்னணியில் இருந்ததாகச் சந்தேகிப்பதற்கு இடமுண்டு.

ஆயுதமேந்திய 60 பொலீசாரில் நான்கு பேர் மட்டுமே துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்திருக்கிறார்கள். ஆனால் புதுமை என்னவென்றால் நால்வரின் துப்பாக்கி மகசின்களிலும் எண்ணி 30 - 30 ரவைகளே தீர்க்கப்பட்டிருந்தன. இது எவ்வாறு என்பது இப்போது சி.ஐ.டி. விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு மறுதினம் பண்டாரவளைப் பொலீசாரால் கைது செய்யப்பட்ட பலரும் ஊவா மாகாண பிரபல அரசியல்வாதி உருவரின் உத்தரவுப்படியே எவ்வித விசாரணையுமின்றி விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

இப்படுகொலைகள் தொடர்பாக தீவிர விசாரணை நடத்தி, இதன் பின்னணியிலுள்ள பாதுகாப்பு அதிகாரிகள், அரசியல்வாதிகள் மற்றும் கொலைகாரர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு, அதிஉயர் தண்டனை வழங்கப்பட வேண்டும்.

இதைச் செய்வதற்கு சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அவர்களின் தலைமையிலான இன்றைய அரசாங்கத்துக்கு நேர்மையும் துணிவும் இருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால், அவர்களின் அடுத்த இரு தசாப்த அரசியலுக்கு சவாலாக இச்சம்பவம் பேயைப் போல் பீடித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. •

## ஐந்தறிவு உலகம்



கோழிக் குஞ்சை மிகுந்த வாத்சல்யத்துடன் பற்றித் தூக்கிவரும் இந்தப் பெண்பூனை, தான் வசிக்கும் காட்போட் பெட்டி ஒன்றினுள் மூன்று கோழிக் குஞ்சுகளைப் பராமரித்து வருகிறதாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரைப்பட இயக்குனர் சேரன் நேர்காணல்

நேர்கண்டவர் : இளையதம்பி தயானந்தா



**முதலில் உங்கள் சொந்தப் பின்னணி பற்றியும் திரைப்படத் துறைக்குள் நீங்கள் நுழைவதற்குத் தூண்டுகோலாயிருந்த காரணிகள் பற்றியும்...?**

மதுரை மாவட்டத்தில் மேலூர் என்றொரு தாலுகா இருக்கிறது. மேலூரிலிருந்து சிவகெங்கை போகிற வழியில், 9 கிலோ மீட்டர் தாண்டினா பழையூர்பட்டி என்று பஸ் வசதி இல்லாத ஒரு கிராமம். அதுதான் நான் பிறந்த ஊர். அப்பா சினிமாத் தியேட்டரில் புரொஜக்டர் ஆபரேட்டரா இருந்தார். அம்மா டீச்சர். மிகச் சின்ன வயசிலேயே அப்பாவுடன் சினிமாத் தியேட்டர் போவேன். அங்கே ஒரு ஓரமாத் தூங்க வைச்சிட்டு அப்பா வேலை பார்ப்பார். அப்ப இருந்தே புரொஜெக்டர் சத்தம் கேட்டு கேட்டு என்னையறியாமலே என் உடம்புக்குள் சின்னதா சினிமாவுக்கான ரத்தமும் ஓட ஆரம்பிச்சிருச்சி. அப்ப எனக்கது தெரியலை. படிக்கும்போது நடிப்புல ஆர்வம் இருந்திச்சு. நிறைய நாடகங்கள் போட்டிருக்கேன்.

நடிக்கணும் என்கிற மோகத்திலேதான் சென்னைக்கே வந்தேன். நடிப்பிலே வெறி இருந்திச்சு. சிவாஜி கணேசன் நடிச்ச எல்லாப் படங்களையும் பார்த்திருக்கேன். சொல்லப்போனா சில படங்களைப் பத்துப் பதினைந்து முறை கூட பார்த்திருக்கேன். சிவாஜி மேலே இருந்த பிரமிப்புதான், அந்த மாதிரி நாமளும் போய் நடிகனாகணும்கிற ஆசையை உண்டாக்கிச்சு.

**நான் எடுக்கிற படங்கள் எல்லாமே சிறந்த படங்கள் என்று நான் நினைக்க முடியாது**

அதுக்கப்புறம் புகழ்... எங்க போனாலும் நம்மளப் பத்திப் பலரும் புகழணும் என்கிற ஆசை விதை மனசிலே விழுந்திருந்தது. புகழடையணும்னா மூணு வழிதான் இருக்கிறதா எனக்குத் தோணிச்சு. ஒண்ணு அரசியல், அடுத்தது கிரிக்கெட், இல்லேன்னா சினிமா! என்னை ஈர்த்தது சினிமா. இங்கே வந்துட்டேன்.

**நீங்கள் நடிப்பில் மோகம் கொள்ளக் காரணமாயிருந்த நடிகர் திலகத்தை ஏன் உங்கள் திரைப்படங்களில் இதுவரை பயன்படுத்தவில்லை? அல்லது இனிமேல் அவரை உங்கள் இயக்கத்தில் நடிக்க வைக்க யோசனை உண்டா?**

"தேசிய கீதத்"தில் நடிகர் திலகத்தைப் பயன்படுத்த யோசனை இருந்தது. விஜயகுமார் அவர்கள் நடித்த தியாகி பாத்திரத்தில் அவரைத்தான் நடிக்க வைக்க இருந்தோம். அந்த நேரத்தில் அவருக்கு உடல் நிலை சரியில்லாமல் இருந்தது. நான் போய் அவருடன் உட்கார்ந்து மூன்று மணி நேரம் கதை சொல்லி, அவரை ஒப்புக்கொள்ளச் செய்திருக்கிறேன். அதை மிகப் பெரிய பாக்கியமாகக் கருதுகிறேன். கதை சொல்ற பாக்கியம் மட்டும் தான் கிடைத்தது. அவரைப் பயன்படுத்தும் பாக்கியம் விரைவில் கைகூடும்.

**உங்களுடைய முதல் படம் பாரதி கண்ணம்மா. திரையுலகில் உங்கள் பெயரைப் பதிந்து கொள்கிறபோது, நீங்கள் சொல்ல வந்த செய்தி என்ன?**

எவரும் முதல் படம் என்றால் மினிமம் காரண்டியோட ஒரு ஐம்பது நாள் ஓடிட்டுதுன்னா போதும்னு நினைப்பாங்க.



☆ 'டெர்மினேட்டர்' படத்தில் ஆனல்ட் ஸ்வார்ஸிநேகர் முதல் காட்சியில் தோன்றுவதுபோல் ஒரு தோற்றத்தில் கமலை வைத்து எடுக்கப்பட்ட ஸ்டில், 'ஆளவந்தான்' படத்துக்குப் பரபரப்பான விளம்பரம்! படத்துக்குப் படம் ஏதாவது வித்தியாசம் செய்ய வேண்டும் என்பதில் பைத்தியமான கமல், மீண்டும் இயக்குனர் சுரேஷ் கிருஷ்ணாவுடன் இணைந்திருக்கிறார். அண்ணனாகவும் தம்பியாகவும் இரட்டை வேடம். இப்படி ஆடையுரித்துத் தோன்றுவது வில்லன் கமல்.

☆ ஜோதிகா, சிம்ரன் போன்ற புயல்களினால் அடித்துத் தள்ளப்பட்டு அல்லாடும் நடிகையரில் ஒருவரான சுவலட்சுமிக்கு புதிய படம் 'யார் சொல்வதோ'. படத்தில் மருத்துவராக நடிக்கிறார். ஜோடி ராம்கி.

☆ "பாரதியார் என்பது வைரமுத்து மாதிரிதானே?" 'பாரதி' படத்தில் நடிக்க வந்தபோது தேவயானி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொமர்ஷியல் ஃபோர்முலாவோடு எப்படியாவது சினிமாவுல நின்னுட்டம்னா அதுக்குப் பிறகு அடுத்தடுத்த படங்கள்ல நம்மோட திருப்திக்குப் பண்ணப் பாக்கலாம்னு நினைப்பாங்க... என்னைப் பொறுத்தவரை முதல் படமே வித்தியாசமா பேசப்படணும்னு நினைச்சேன். அதுக்குரிய தன்னம்பிக்கையோடும் ஆர்வத்தோடும்தான் நானும் என்னோட அசிஸ்டெண்ட்சும் உழைச்சோம். தயாரிப்பாளரிடம் நான் முதன் முதலில் பேசி ஓ. கே. பண்ணினது இந்தப் படத்தோட கிளைமாக்ஸ்தான். கிளைமாக்ஸை சொல்லிட்டு ரிவர்ஸ்ல வந்துதான் பிள்ளையார் சுழியே போட்டோம்.

தமிழ்நாட்டைப் பாத்தீங்கன்னா ஜாதிக் கலவரம்தான் எங்கும் நடந்துட்டிருக்கு. இதனால சாதிக்கிறது ஒண்ணும் கிடையாது. பிறக்கும்போது நாம் என்ன ஜாதின்னு தெரியாமத்தான் பிறக்கிறோம். சாகும்போது என்ன ஜாதின்னு வித்தியாசம் பாராம மண் சாப்பிட்டுட்டுப் போயிடுது. இந்த அற்ப விஷயத்துக்காக மனுசங்க ஏன் அடிச்சுக்கணும்? அதை மீறி நேயம், அன்பு, அன்பினால் சாதிக்கக் கூடியவை நிறைய இருக்கு.

'ஜாதி' பத்தி ஜனங்ககிட்ட இருக்கிற விசுவாசத்தை அசிங்கமா அவங்க உணர வைக்கணும். இதையும் காதல் மூலமா சொன்னாதான் நாம்மளுங்களுக்குப் பிடிக்கும். வெறும் ஜாதிப் பிரச்சினையைச் சொல்ல ஒரு படம் எடுத்தம்னா வேதம் புதிது மாதிரி இருக்கும். மிக அற்புதமான அந்தப் படம் சுமாராத்தான் ஓடியது. இதுமாதிரி நல்ல கருத்துக்களைச் சொன்ன பல படங்கள் தோத்துப் போயிருக்கு. எனவே ஜாதியை ஒழிக்கணும்கிற சமுதாயக் கருத்தை காதலோடு சேர்த்துக் குடுத்தாத்தான் மக்களிடம் செல்லுபடியாகும்னு அற்புதமான காதல் கதைக்குள்ள அதைச் சொன்னோம்.

**பாரதி கண்ணாம்மாவில் ஜாதி வெறியை மீறி அந்தக் காதலர்களை வாழவைக்க முடியாமல் போனதுக்குக் காரணம் என்ன காரணம்?**

படத்தின் டைட்டில் பாரதி - கண்ணம்மா இரண்டு பேரிலும் இருந்தாலும், படத்தின் முடிவில் ஜெயிக்கிறவங்க ராஜா - பேச்சி என்கிற இரண்டு பாத்திரங்களும்தான்.

ஒண்ணை இழக்கும்போதுதான் அதனோட சக்தியை உணர்கிறோம். பெரியவர்கள் தங்கள் அனுபவத்தின் மூலம் தெரிந்து கொண்டதிலிருந்து நமக்கு அட்வைஸ் பண்ணுவாங்க. நாம் கேட்கமாட்டோம். அவர்கள் அட்வைஸ் பண்ணப் பண்ண 'ஏன் செய்யக் கூடாதுன்னு ஒரு மனோபாவம் வரும். அதைச் செய்து பார்த்து அடிபடும்போதுதான் 'அன்னைக்கே சொன்னாங்க' என்பது நமக்கு உறைக்கும். அது மாதிரி, ஒரு காதலை, அதன் புனிதத்தை, காதலுக்காக இரண்டு உயிர்களை இழக்கும்போதுதான் அந்தப் பெரிய மனுஷர் புரிந்துகொள்கிறார். வெள்ளைச்சாமித்தேவரா வாழ்ந்தவர் வெள்ளைச்சாமி மனுஷரா மாறுகிறார். ஒருத்தர மனுஷனா மாத்தறதுக்கு அக் காதலர்களை எரிக்க வேண்டி வந்ததை நான் புனிதமாத்தான் நினைக்கிறேன்.



**முதன் முதலில் நீங்கள் ஒரு படத்தை இயக்குகிற போது புதிய புதிய அனுபவங்கள் கிடைத்திருக்கும். படத்தை இயக்குவதில் மிகச் சிக்கலான காரியம் எது என்று நீங்கள் உணர்கிறீர்கள்?**

சினிமா என்று வந்து விட்டால்,



அதில் மிகச் சிக்கல், கஷ்டம் என்றெல்லாம் எதுவும் எனக்குத் தெரிவதில்லை. சினிமா என்னுடைய தாகம், சினிமா என்னுடைய மூச்சு, காதல், மனைவி, தாய், தந்தை... எல்லாம் சினிமாதான். இவங்களெல்லாம் என்னை ஒதுக்கிட மாட்டாங்க. நானும் இவங்க மேல பாசம் இல்லாம போயிட முடியாது. சினிமாதான் என்னை வாழ வைக்கணும். அதுக்குள்ளதான் நான்

**சினிமாதான் என்னை வாழ வைக்கணும். அதுக்குள்ளதான் நான் வாழணும்னு ஊரைவிட்டு ஓடி வந்தவன் நான்.**



சன்னி தியோல், பொபி தியோல் ஆகியோரைத் தொடர்ந்து தர்மேந்திரா வீட்டிலேயிருந்து மற்றுமொரு தியோல். இவர் ஹேமமாலினியின் மகள் இஷா தியோல். முதல் படத்திலேயே விசிறிகளிடமிருந்து தினமும் 10,000 கடிதங்களைப் பெறும் பொலிவூட்டின் சூடான இளம் நாயகன் ஹ்ரிதிக் ரொஷானுடன் ஜோடி சேருகிறார். படம்: 'நாதும் ஜானோ நா ஹம்'.

ஜூகி சாவ்லாவுக்கு குழந்தை பிறந்திருக்கிறது. எப்போது கல்யாணமானது என்று கேட்கிறீர்களா? அதெல்லாம் சொல்வார்களா? 1984ல் மிஸ் இந்தியாவாக வந்தபோது ஜூகிக்கு வயது 17. ஹிந்தியில் கண்டுகொள்ளப்படுவதற்கு முன்பே அவரைக் கதாநாயகியாக்கித் தமிழில் 'பருவராகம்' தந்தவர் கன்னட தயாரிப்பாளரும் நடிகருமான வீ. ரவிச்சந்திரன். இது எண்பதுகளின் நடுப்பகுதியில். இப்போது 33 வயசு. எல்லா நடிகைகளையும் போல ஜூகிக்கும் கணவர் தொழிலதிபர்தான். தனக்கும் ஜூகிக்கும் குழந்தை பிறந்திருக்கும் செய்தியை வெளியிட்டிருப்பது கணவர் - தொழிலதிபர் ஜெய் மேத்தா.

நடிகரைப் பெற்றெடுத்த இந்தப் பாடகி கையில் ஏந்தியிருக்கும் குழந்தை யாரென்று தெரிகிறதா? - 46ம் பக்கம் பார்க்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கை கால் எல்லாமே நல்லா இருந்து மனசால் ஊனமா வாழுற மக்கள் மத்தியில, ஊனத்தோட பிறந்து நல்லா வாழுற சிலரைப் பத்திச் சொல்லணும்னு ஆசைப்பட்டேன். அதுதான் பொற்காலம்.**

வாழணும்னு ஓடி வந்தவன் நான். எதுவா இருந்தாலும் போராடி வெற்றியடைய முடியும் என்னால். கஷ்டம் என்று எதுவும் எனக்குத் தெரியவில்லை. சினிமா என்றாலே உடல், உயிர் எல்லாம் களிப்புத்தான் நிறையுது. கஷ்டம் எப்டித் தோணும்?

**முதல் படத்தை வெற்றியாகத் தந்த இயக்குநர்கள் எல்லோருக்குமே இரண்டாவது படம் என்பது மிகப் பெரிய சோதனையாக சவாலாக அமைந்துவிடும். ஏற்கனவே சம்பாதித்த பெயரைக் காப்பாற்றியாக வேண்டும் என்கிற பொறுப்புள்ள சூழலில்தான் உங்களது இரண்டாவது படமான பொற்காலத்தை இயக்கினீர்கள். அந்த அனுபவத்தைச் சொல்லுங்கள்?**

பாரதி கண்ணம்மா அந்தச் சமயத்தில வெளியான மற்ற எல்லாப் படங்களையும் தூக்கிச் சாப்பிட்டுட்டு முதலிடத்தில நின்ன போது எனக்கும் என் யுனிட்டுக்கும் எதிர்பார்க்காத இன்பமாத்தானிருந்தது. எங்களுக்கு ஒண்ணுமே புரியல்ல. இந்த சந்தோஷத்துக்காக, பேருக்காக, புகழுக்காகத்தான் இத்தனை நாள் கஷ்டப்பட்டோமா?ன்னு திக்குமுக்காட்டமா இருந்தது. கூடவே இதைத் தக்கவைச்சுக் கொள்ள முடியுமா என்கிற மலைப்பும் எங்களுக்கிருந்தது. முதல் படத்தின் வெற்றியை மிஞ்சவேண்டும். அதே சமயம் முதல் படத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட கதையா, மாறுபட்ட சொல்லல் முறையா இருக்க வேண்டும். இந்தப் படத்துக்கும் அடுத்த படத்துக்கும் சுத்தமா சம்பந்தமிருக்கக் கூடாதுன்னு பேசி வைச்சிக்கிட்டே நானும் என் அசிஸ்டென்ட்சும் டிஸ்கஸனுக்காக உட்கார்ந்தோம்.

திடீர்னு உருவானதுதான் பொற்காலம் கதை. அளவில, அதை வெளிப்படுத்திறதுல வேறுபாடுகள் இருந்தாலும், எல்லா மனிதர்களுக்குளேயும் மனித நேயம் இருக்கு. மனிதாபிமானம் இருக்கு. இது வெளியே எழுந்திருச்சு வந்துட்டவங்க சமூக சேவை, மக்களுக்காக உழைப்பைச் செலவிடுதல் என்று வெளியே வர்றாங்க. பலர் அதைப் பார்த்து 'வேலையத்தவங்க'ன்னு கேலி பண்ணிட்டுமிருப்பாங்க. இவங்களுக்குள்ளயும் ஏதோ ஒரு அளவிலேனும் மனிதாபிமானம், அன்பு எல்லாம் இருக்கும்.

இதையெல்லாம் வெளியே கொண்டு வரணும். மனிதர்கள் ஒருவரையொருவர் அன்போட பார்க்கணும். ஒவ்வொரு மனிதனுடைய பார்வையும் அன்பா மாறணும், படத்துல இதைக் கொண்டுவர நினைச்சோம். குறிப்பா, ஊனம். ஊனமுற்றோர்களுக்கு பஸ்ஸில் ஒரு சீற்றைக் குடுத்து ஒதுக்கினதோட நம்ம வேலை, அரசாங்கத்தின் வேலை முடிஞ்சு போயிடறதா நினைக்கிறோம். அவர்களுடைய உணர்வுகளை யாரும் புரிஞ்சுக்கிட்டதா தெரியலை. ஊனமுற்றோரின் அபிலாஷைகளை எதிர்பார்ப்புக்களை யாரும் கணக்கிலெடுத்துக் கொள்றதாத் தெரியலை. ஒரு டெலிபோன் பூத்தைப் போட்டுக் குடுத்திட்டு, அவங்களுக்கு உதவி செஞ்சிட்டதா திருப்திப்பட்டுக்கிறோம். இதுக்கெல்லாம் அப்பால எல்லோரையும் போல வாழறதுக்கு ஆசைப்படற ஜீவன்கள் அவங்க. கை கால் எல்லாமே நல்லா இருந்து மனசால் ஊனமா வாழுற மக்கள் மத்தியல ஊனத்தோட பிறந்து நல்லா வாழுற சிலரைப் பத்திச் சொல்லணும்னு ஆசைப்பட்டேன். அதுதான் பொற்காலம்.

**அடுத்து உங்களுடைய 'தேசிய கீதம்'. இந்தப் படம், ஒரு தேசத்தில் பிரச்சினையை எப்படித் தீர்க்க வேண்டும் என்று சொல்ல வருகிறதா?**

கண்டிப்பா!

**உங்கள் கருத்துப்படி யார் யாரெல்லாம் தவறு செய்கிறார்களோ அவர்களைக் கடத்திவிட வேண்டும் என்று சொல்கிறீர்களா?**

இன்னுஞ் சொல்லப்போனால் எல்லாரையும் 'ஷுட்' பண்ணிடணும். அந்தளவுக்குக் கூட மக்கள் மனங்களில கோபம் தீயா எரியுது. ஆனால் நான் சொல்ல வந்தது கடத்தலை அல்ல. கடத்தப்பட்ட பின் அவன் மாறுகிறான் பாத்தீங்களா? அப்படி கடத்தப்படாமலே, இருக்கிற அரசியல்வாதிகள் மாறணும் என்பதையே சொன்னேன்.

**பிரச்சினைகள் தீருவதற்கு தீவிரவாதப் போக்கைத்தான் நீங்கள் சிபாரிசு செய்கிறீங்களா?**

## பின்னணி குரல் அழகிகள்

சினிமா நடிகைகளின் அழகில், மயங்கிக் கிடக்கும் நமது தமிழ் சினிமா ரசிகர்கள் அவர்களது கவர்ச்சியில் மட்டுமன்றி, அவர்கள் பேசும் 'கன்னித் தமிழிலும்' மனதைத் தவிக்கவிடுவதுண்டு.

ஆனால் பெரும்பாலான பிரபலங்கள் தமிழர்கள் அல்ல என்பதும் இன்னும் சிலர் சரியாகத் தமிழை உச்சரிக்கத் தெரியாதவர்கள், முடியாதவர்கள் என்பதும் ரசிகர்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

அந்த வகையில் ஷாலினி, தேவயானி, சுவலட்சுமி, ரோஜா போன்றவர்களுக்கு ஸ்ரீஜா என்பவரும், ஐஸ்வர்யாராய், சிம்ரன், ஜோதிகா போன்றவர்களுக்கு சவீதா என்பவருமே தொடர்ந்து பின்னணிக் குரல் கொடுத்து வருகின்றனர். இஷா கோபிகர், சௌந்தர்யா மற்றும் சின்னத்திரை நடிகைகளுக்கும்கூட குரல்கொடுத்து வரும் சவீதா, 'சேது' படத்தில் அபிதாவுக்கு கொடுத்ததிற்காக '∴பேஸ்' அமைப்பு இரண்டாயிரம் ஆண்டுக்கான டப்பிங் கலைஞர் விருதை வழங்கியுள்ளது.

ஆனால் நடிகர், நடிகைகள் ஒரு படத்திற்கு பல லட்சங்கள் சம்பளம் வாங்குகையில் இவர்களுக்கு ஆக ஐயாயிரம் ரூபா வரையே வழங்கப்படுவதாக இவர்கள் கூறுகிறார்கள்.

தவிர, மலையாள திரையுலகமும் கேரள அரசும் டப்பிங் கலைஞர்களுக்கு வழங்கும் ஆதரவையும் மதிப்பையும் தமிழக சினிமாவும் அரசும் வழங்குவதில்லை என இவர்கள் குறைபட்டுக் கொள்கின்றனர்.

- பித்தன்



சவீதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவிரப் போக்கு, மிதப்போக்கு என்பதெல்லாம் இடத்தைப் பொறுத்ததும், நாம் கையாளுற விதத்தைப் பொறுத்ததும்தான். தீவிரப் போக்கு இப்ப நமக்கு ரொம்பத் தேவைப்படுது. ஜனநாயக நாடுன்னு சொல்றோம். விசாரணை என்கிறோம். விசாரித்தபின் தண்டனைங்கிறோம். இந்த ஜனநாயக நடைமுறைகளை அதிகமாத் தூக்கிப் பிடிச்சிட்டிருக்கிற நம்ம நாடுகளிலதான் நிறையத் தப்புகளும் நடந்திட்டிருக்கு. தப்புச் செய்யிறவனுக்கெல்லாம் தண்டனையோட பயம் தெரியலை. எப்படியும் தப்பிடலாம்னு தெரிஞ்சே தப்புப் பண்றான். தவறுகள் அதிகமாகுது. குற்றவாளிகளும் அதிகமாகிட்டே இருக்காங்க. இந்த இடத்தில தீவிரவாதம் தேவைப்படுது. தப்புச் செய்தா அவனுக்கு பத்துப் பேருக்கு முன்னாடி தண்டனை குடு. அப்ப மத்தவனும் திருந்துவான்.

**வெற்றிக்கொடிகட்டு. *Be Indian, By Indian* என்கிற மகுடவாசகத்தில் இளைஞர்களுக்கு நம்பிக்கையூட்ட அல்லது இந் நாட்டின் மீது அவநம்பிக்கையுறும் இளைஞர்களுக்கு நீங்கள் சொன்ன செய்தி என்று எடுத்துக்கொள்ளலாமா?**

எடுத்துக் கொள்ளலாம். நான் தமிழனா இந்தியனா இருந்து அந்தப் படத்தை இயக்கியதனால் *Be Indian, By Indian*. ஒரு அமெரிக்கனா இருந்தா *Be American, By American*. நான் சொல்ல வந்தது என்னவென்றால், உறவுகள்... அப்பா, அம்மா, மனைவி, மக்கள், அண்ணன், தங்கை... இந்த மாதிரி உறவுகள் எல்லாம் அற்புதமானவை. கோடி நூற்றாண்டுகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த பூமியில் நாம் வாழக்கூடிய காலமோ மிகக் கொஞ்சம். இதற்குள் நமக்குக் கிடைத்த உறவுகளோடு சேர்ந்திருந்து சந்தோஷமா, அதிலே என்ன கிடைக்குதோ அதில் திருப்திப்பட்டு வாழ்வதை விட்டு விடாதே. பணத்துக்காக பத்து வருடம் நீ இழப்பது உன் வாழ்க்கையை. அதைவிட இந்த உறவுகளும் அதன்மூலம் கிடைக்கக் கூடிய சந்தோஷமும் பெரிது என்பதைச் சொன்னேன்.

***நீங்கள் நேரடியாகவே இயக்குனராகி விட்டீர்களா? சினிமாத் துறைக்குள் காலடி வைத்த உங்கள் அனுபவங்கள் என்ன?***

நான் நேரடியாவே இயக்குனரா வருவதற்குரிய பின்னணி களுடையவனில்லை. பத்து வருடங்கள் கே. எஸ். ரவிக்கு மாரிடம் அசிஸ்டெண்டா, அசோசியேட்டா வேலைபாத்து, தொழில் நுணுக்கங்களை அவர்கிட்ட கத்துக்கிட்டு அதுக்கப்புறம்தான் இயக்குனரானேன்.

***உங்கள் அடுத்த படம் பற்றி?***

அடுத்த படம் 'விண்ணோடும் முகிலோடும்' இவ்வளவு நாள் நான் பிரச்சினை, மெஸேஜ், ஏதாவது ஒரு நல்ல விஷயம்., கருத்து அப்டினு சொல்லிட்டு நிறைய மக்களை கொடுமைப்படுத்திட்டு இருந்தேன். இப்ப ஜாலியா ஒரு படம் பண்ணலாம். காதலை மட்டுமே ஜனரஞ்சகமா சொல்லாம்னுதான் விண்ணோடும் முகிலோடும். நாம எல்லோருக்கும் பிடித்தது காதலாதான் இருக்கு. என்னதான் கருத்துச் சொன்னாலும் எல்லாருக்கும் பிடிக்கிறதா அதைச் சொல்லிவிட முடியாது. தேசிய கீதம் சிலருக்குப் பிடித்தது. சிலருக்குப் பிடிக்கவில்லை. வெற்றிக் கொடிகட்டு நன்றாக இருக்கிறது என்றார்கள் சிலர். சொதப்பல் என்றார்கள் சிலர். பாரதி கண்ணம்மாவை சில ஜாதிக்காரங்க திட்டினாங்க... வீட்டில ஊரில, நாட்டில எல்லா இடமும் பிரச்சினையா தானே இருக்கு. படத்துக்குப் போய் ஏன் தலைக்குள் பிரச்சினைகளை நிரப்





பிட்டு வரணும்னு பல பேர் நினைக்கிறாங்க.

நான் எடுக்கிற படங்கள் எல்லாமே சிறந்த படங்கள் என்று நான் நினைச்சிட முடியாது. என் படங்களிலும் பலர் பார்வைகளில் பல்வேறு குறைகள் இருக்கு. அதெல்லாம் களைஞ்சு, நாம என்னைக்காவது ரே படம் போல ஒரு நல்ல படம் பண்ணுவோம். அது போலவே எல்லாரும் ரசிச்சிட்டுப் போற மாதிரி கொமர்ஷியலா என்டெட்டெயினா 'விண்ணோடும் முகிலோடும்' அடுத்துப் பண்றேன். ●

**மனிதர்கள் ஒருவரையொருவர் அன்போட பார்க்கணும். ஒவ்வொரு மனிதனுடைய பார்வையும் அன்பா மாறணும், இதைப் படத்துல கொண்டுவர நினைச்சோம்.**



**சிம்ரனுக்குப் படங்கள் குறைந்து விட்டது. ராஜு சுந்தரத்தோடு விரைவில் திருமணம் நடக்கவிருப்பதால்தான் படங்களைக் குறைத்துக் கொண்டிருக்கிறார் என்பது பழைய கதை. இது வேறு சிக்கல்.**


**சிரஞ்சீவியுடன் 'மிருகராஜு' என்ற தெலுங்குப் படத்தில் நடிக்கிறார் சிம்ரன். அந்தப் படத்துக்குக் கொடுத்த தேதியில் லண்டனுக்கு நட்சத்திர இரவு நிகழ்ச்சிக்காகப் பறந்துவிட்டார். படப்பிடிப்புத் தளத்தில் சிம்ரனுக்காகக் காத்திருந்து ஏமாந்து போயிருக்கிறார்கள் படப்பிடிப்புக் குழுவினர். திரும்பி வந்தும் விட்டுவிட்டுப் போன தெலுங்குப் படத்தைச் சிம்ரன் கண்டுகொள்ளவில்லை. மன்னிப்பும் கேட்கவில்லை. பொறுத்துப் பார்த்த தயாரிப்பாளர் தேவிவரபிரசாத், தன் படத்தில் நடித்து முடிக்கும் வரை சிம்ரன் வெளிப் படங்களில் நடிக்கக் கூடாது என்று தடைவிதிக்கக் கோரி நீதிமன்றில் மனுச் செய்திருக்கிறார். நீதிமன்றமும் சிம்ரனுக்குத் தடை உத்தரவு வழங்கியுள்ளது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேக்கின் நகைச்சுவைக் காட்டில் மழை!

கவுண்டமணி, செந்தில், வடிவேலு எல்லோரையும் ஓரங்கட்டிவிட்டு முன்னணிக்கு வந்திருக்கிறார் விவேக். இவரின் பலம் சொந்தமாகவே தனக்குரிய நகைச்சுவைப் பகுதியை தயாரித்துக் கொள்வது. எஸ். ஏ. சந்திரசேகரின் 'நண்பர்கள்' படத்திலேயே மிக இளைய கொமெடியனாக,தன் சொந்த தத்துவ ஜோக்குகளை உதிர்த்து விசேட கவனத்தைப் பெற்றார்.



இதோ பார்ரா! வர்றான் போறான் இருமுறான் தும்முறான் செருமுறான்னு சொல்றதெல்லாம் ஆணுங்களைத்தான்! இதிலே எப்பிடி வந்துதுடா இந்த சிம்ரான்?

பதினாலு புதுமுகங்களோடு ஒரு புதுமுகமாக கே. பாலச்சந்தரின் மனதில் உறுதி வேண்டும் படத்தில் அறிமுகமானார். பாலச்சந்தர் யுனிட்டில் உதவி இயக்குநராகவும் பயிற்சி பெற்றுக் கொண்டார்.

தன் நகைச்சுவையில் யார் எவர் என்றில்லாமல் சகட்டு மேனிக்கு எல்லாரையுமே கிண்டலடிக்கிறார்.

"வீரப்பனும் கோபாலும் போல வீடியோக் கசெற்றிலேயே கலக்கிக்கிட்டிருக்கீங்கப்பா..." என்று நடப்பு நிகழ்வுகளிலிருந்து பொருத்தமாய் சந்தர்ப்பத்துக்கேற்ற நகைப்பைத் தேர்ந்து கொள்வது இவர் பாணியாக இருக்கிறது. அது மட்டுமல்ல, அடி, உதை, காட்டுக் கத்தல், இரட்டை அர்த்தம் என்று எரிச்சலூட்டிக் கொண்டிருந்த கொமடியை சிந்திக்க வைக்கும் விதமாக - மூட நம்பிக்கைகளை, போலி பாவ்லாக்களை நக்கலடித்துச் சிரிக்க வைத்து அசத்துகிறார்.

சமீபத்தில் பக்திப் படமான பாளையத்து அம்மனில் வந்து மூட நம்பிக்கைக்கு எதிராக சிவாஜி பாணியில் முழங்குகிறார். பராசக்தியில் சிவாஜி பேசியது போலவே கோர்ட் சீனில் மூச்சுவிடாமல் ஒரே டேக்கில் சிரிப்பு வெடிகளை கொளுத்திப் போடுகிறார் விவேக். சிந்திக்கவும் வைக்கிறார்.

சிரிக்கச் சிரிக்க சமூக மூடத்தனங்களைச் சாடும் அவரது கூர்மையான கிண்டல் பாணிக்கு திருநெல்வேலி படமும் நல்ல சான்று.


திரைக்கு வெளியே நிகழ்ச்சித் தொகுப்புகளிலும் கலக்கி வருகிறார் விவேக். ஆரம்பத்தில் 'சூப்பர் ஹிட் முக்காபுலா' என்ற சின்னத்திரை பாடல் தொகுப்பு நிகழ்ச்சித் தொகுப்பாளராக இருந்து சிவாஜி போல, நம்பியார் போல, ரத்தக் கண்ணீர் ராதா போல, சப்பாணி கமல் போல, ரஜினி போல எல்லாம் வேடமிட்டு ரகளை செய்தார். பாராட்டைப் பெற்றார்.

பின்னர் பல மேடை நிகழ்ச்சிகளைத் தொகுப்பதிலும் கலகலப்பைக் கொண்டு வந்தார். உதாரணத்துக்கு, ஒரு நிகழ்ச்சியில் திரையுலகப் பிரபலங்கள் சிலரை மேடைக்கு அழைப்பதில் விவேக் செய்த சில்மிஷங்கள் சில:

**அரவிந்தசுவாமி** - "திருநெல்வேலிப் பக்கமிருக்கிற சுடலை மாடசாமியிலிருந்து சுப்பிரமணியசாமி வரைக்கும் சாமில நிறைய வெரைட்டி உண்டுங்க. அதுல பாருங்க... பெண்கள்னா ஒரு சாமிக்கு நிறையப் பிடிக்கும். அது பிரேமானந்த சாமி. பெண்களுக்கு ஒரு சாமியை ரொம்பப் பிடிக்கும்னா அது இந்தச் சாமிதான்.

**சிம்ரான்** - "சேட்டு பாஷையில பேசுவாங்க. நம்பள்கி துட்டு தர்றான். நிம்பள் வட்டி தர்றான்னு... இப்படி பதும்முறான், இருமுறான், செருமுறான்னு சொல்றதெல்லாம் ஆண்களைத்தான். ஆண்களுக்குச் சொல்ற வார்த்தையில எப்படி வந்தது இந்தச் சிம்ரான்?"

**ஜய்க்கு வரவேற்பு** - "வாங்க விஜய்.. எனக்கொரு சந்தேகம்.. நீங்க நடிக்கிற படங்கள்ல பானி பூரி, முட்டை பரோட்டா, ஆவின் பசும் பால்னு உணவுப் பொருட்கள் அதிகம் கவனம் செலுத்தறீங்களே.. என்ன காரணம்னு சொல்ல முடியுமா?"



**சூர்யா** - "உங்கப்பா சிவகுமார் இருக்காரே... பீடி, சிகரட், வெத்திலை, சுண்ணாம்பு விற்பனையெல்லாம் குறைச்ச ஆள். தானும் பிடிக்க மாட்டாரு... மத்தவங்களையும் பிடிக்க விடமாட்டாரு. பார்த்து சூர்யா... உங்கப்பாவை இப்ப பார்த்தாலும் உங்களுக்கு அண்ணன் மாதிரிதான் இருக்கார். கொஞ்சம் ஏமாந்திங்கன்னா நீங்க அண்ணன் மாதிரி ஆயிடுவீங்க. அவரு உங்க தம்பி மாதிரி அப்படியே இருப்பாரு"

**மணிரத்னம்** - "நன்றியுரை மணிரத்னம்!... நன்றியுரைன்னா நாலு வார்த்தை தொடர்ந்து பேசணும். அதுக்கு இவரை ஏன் செலக்ட் பண்ணினாங்கன்னு புரியலையே!"

"தமிழ்நாட்டு மக்களின் வாழ்வில் உள்ள அபத்தங்கள் என்னை மிகவும் பாதிக்கின்றன. கலாசாரம் வேறுபட்டாலும் எல்லா நாட்டு மனிதர்களும் அடிப்படையில் ஒன்றுதான். ஆனால் நாம்தான் பஸ்ஸில் ஏற க்யூவில் நிற்காம ஒரு 'மொப்' போல அடிதடி போடுகிறோம். கண்ட இடத்தில குப்பை போட, எச்சில் துப்பத் தயங்குவதில்லை. அசிங்கங்களை உள்ளே மறைச்சு அதிகம் வேஷம் போடுகிறவர்களாக இருக்கிறோம். ரொம்ப கட்டுப்பெட்டித்தனமான கலாசாரம் நம்முடையது. ஆனால் எயிட்ஸ் நோயில தமிழ்நாடு முன்னணியில். இந்தக் குறைபாடுகளையும் பம்மாத்துக்களையும் தினமும் பார்க்கும்போது வரும் எரிச்சல்கள்தான் என் படங்களில் நையாண்டிகளாக வெடிக்கிறது."

இதுவரை எத்தனை படங்கள் நடித்து விட்டீர்கள்? என்று கேட்டால் "நூறைத் தாண்டியிருப்பேன். சரியான கணக்குக்கு பிலிம் நியூஸ் ஆனந்தனைக் கேட்டால் சொல்லுவார்" என்கிறார்.

விவேக்கின் கனவு, இயக்குநராக வருவது. தமிழ் ரசிகர்களுக்கு முழு நீள நகைச்சுவைப் படங்களைத் தருவதற்கு வேண்டிய தயாரிப்புகளைச் செய்து வருகிறார். சிரிப்பதற்காக எவ்வளவு வேண்டுமானாலும் செலவழிக்கலாம். ●



அம்மா ஷோபா சந்திரசேகர் கையில் அழாமல் சமர்த்தாக இருக்கும் குழந்தை விஜய்தான். அதே வயதில் இவருக்கு இப்போது குழந்தை. பெயர் சஞ்சய். மனைவி (சங்கீதா) வந்த நேரம் விஜய்க்கு மார்க்கெட் டல்லடிக்கிறது என்றார்கள். சஞ்சய் பிறந்ததும் 'குஷி' பிய்த்துக்கொண்டு ஓடியது. மீண்டும் இப்போது டல். சரிதாவின் '.'.பிரெண்ட்ஸ்' தான் எதிர்பார்ப்பு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்வை ஒன்றே போதுமே...



நோயற்ற

இன்றைய நிலைமையில் முதியவர்கள் மட்டுமல்ல, இளைஞர்களும், சிறுவர், சிறுமியர்களும் கூட கண்ணாடி போடுகிறார்கள். இப்படி இவர்களெல்லாம் கண்ணாடி போடுவதற்குக் காரணம் என்ன?

பார்வையில் பொருட்கள் தெரிவதற்கு பொருட்களிலிருந்து பட்டு வருகின்ற ஒளியானது, கண்களிலுள்ள பார்வை வழியாக உட்சென்று விழித்திரையில் சரியாக விழுந்திட வேண்டும். அப்போதுதான் பொருட்களின் பிம்பம் தெளிவாகத் தெரியும்.

மாறாக, பொருட்களின் பிம்பம், விழித்திரைக்கு முன்பாகவோ அல்லது விழித்திரைக்கு பின்னோ விழுந்தால் அப்பொருட்கள் நம் பார்வைக்கு மங்கலாகவேதான் தெரியும். இக்கோளாறுகளைச் சரி செய்ய கண்ணாடி அணிய வேண்டியுள்ளது.

இவ்வாறு கண்ணாடி போடும் நிலைமை ஏற்பட....

1. கிட்டப் பார்வை, 2. தூரப் பார்வை,
3. வளைவுப் பார்வை காரணமாகின்றன.

**கிட்டப் பார்வை:**

இந்தக் குறைபாட்டில், ஒளிக் கற்றை கண்ணின் உட்பகுதியிலுள்ள விழித்திரையில் விழுவதில்லை. அதற்கு முன் பகுதியிலேயே விழுந்து விடும். எனவே, இந்த கோளாறு உள்ளவர்களால் பொருட்களைத் தெளிவாகப் பார்க்க முடியாது. மங்கலாகத் தெரியும். 5 முதல் 10 வயதிலேயே இது ஏற்பட்டுவிடும். அதன் பிறகு கொஞ்சம், கொஞ்சமாக அதிகரித்து 25 வயது வரை கிட்டப் பார்வை அதிகரித்து வரும். இதனை அதிகரித்து வரும் கிட்டப் பார்வை என்று கூறுவோம். இவ்வகை கிட்டப் பார்வையில் கண்ணின் உட்பகுதிகளும் நலிவடையும். இதனால் கண் பார்வையே பாதிக்கப்பட்டுவிடும். இவர்களுக்கு விழித்திரையில் அதிக வளர்ச்சி ஏற்படுவதனால் இந்நிலை ஏற்படுகிறது.

இது பெரும்பாலும் பரம்பரையாகவே ஏற்படும். ஆண்களை விட பெண்களுக்கே அதிகமாக ஏற்படும்.

அதிக நுண்ணிப்பான வேலைகளை கண்களுக்கு அருகில் வைத்து செய்யும்போது, கண் பார்வை சுருங்கி, சுருங்கி கண்ணின் பின்பகுதி விரிவடைந்துவிடும். உலகின் பல்வேறு நாடுகளிலும் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளின்படி கிட்டப் பார்வை பள்ளி பருவத்திற்கு முன்பு மிகவும் அபூர்வமாகவே ஏற்படுகிறது என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பள்ளிக்குச் செல்கின்றபோது, அது ஏற்பட்டு, பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து, மிகவும் கவனத்துடன் சிரத்தையுடன் படிக்கின்ற கல்லூரிப் பருவத்தில் இது அதிகரித்துவிடும்.

அகன்ற முகம் கொண்டவர்களுக்கு கண் உருண்டை நீளமாவதால், இவர்களுக்கும் கிட்டப்பார்வை ஏற்படலாம்.

வெண்விழிப்படலத்தில் இரத்த ஓட்டம் மிகுவதாலும், அது மென்மையாவதாலும் அங்கு அழுத்தம் மிகுந்து கிட்டப்பார்வை தோன்றலாம்.

சிலருக்கு ஒளி ஊடுருவும் தன்மை மிகவும் அதிகமாகிவிடும். சிலவகை கண்புரை நோய்களில் இதுபோன்ற பாதிப்புகள் ஏற்படும்.

சிலருக்கு ஒளி ஊடுருவும் தன்மை குறைந்துவிடும். உ-ம்: நீரிழிவு நோயாளிகள். இதன் காரணமாக கிட்டப்பார்வை ஏற்படலாம்.

பெரும்பாலும் கிட்டப்பார்வை, இளம் வயதில் ஏற்பட்டு, கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்கலாம். அல்லது அப்படியே நீண்டகாலம் இருக்கலாம்.

**நோய் அறிகுறிகள்:**

பார்வை மங்கல் - தொலைவிலுள்ள பொருட்கள் இவர்களுக்கு தெளிவாகத் தெரியாது.

- பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு கரும் பலகையில் எழுதும் எழுத்துக்கள் புரிவதில்லை. தொலைவில் வரும் பஸ்ஸின் எண், செல்லுமிடம் ஆகியவையும் தெரிவதில்லை.

பக்கத்தில் பார்த்து படித்துவிட்டு, பிறகு தூரத்துப் பொருட்களைப் பார்ப்பதற்கு கஷ்டமாக இருக்கும். முன் தலைப்பகுதியில் தலைவலி, பின்பக்கத் தலைவலி, இமைகளில் அரிப்பு, கண்ணீர் வடிதல், வெளிச்சத்தைக் கண்டு கண் கூசுதல் போன்ற தொந்தரவுகளும் ஏற்படும்.

கண்களின் முன்னால், கரும் புள்ளிகள் தோன்றும். மின்னல் போல, பிரகாசம் தெரியும்.

பரிசோதனை செய்து இக்கோளாறுகளை எளிதில் கண்டுபிடித்துவிடலாம்.

**கிட்டப்பார்வையில் ஏற்படும் பாதிப்புகள்:**

கிட்டப் பார்வை அதிகரித்தால், விழித்திரை பாதிப்பு ஏற்பட்டு அது கிழிந்துவிட வாய்ப்புகள் உண்டு.

இதனால், கண்புரை நோய் ஏற்படலாம்.

கண் அழுத்த நோயும், சிலருக்கு மாறுகண் பாதிப்பும் ஏற்படலாம்.

***சிகிச்சை***

கிட்டப்பார்வை உள்ளவர்கள் அதற்குரிய குழி லென்ஸ் போட்டுக்கொள்ள வேண்டும். குளிக்கும் வேளை மற்றும் உறங்கும் வேளை தவிர எல்லா நேரங்களிலும் தொடர்ந்து போட்டுக்கொள்ள வேண்டும்.

காரணம்:

1. குழந்தைகள் தொடர்ந்து கண்ணாடி போட்டுக் கொண்டிருந்தால்தான் அவர்களது படிப்பு பாதிக்கப்படாமல் இருக்கும். ஏனெனில், மங்கலாகத் தெரிவதால் இவர்களுக்கு படிப்பில் ஆர்வம் குறைந்துவிட வாய்ப்புக்கள் உண்டு.

2. கண்ணாடி போட்டால்தான் பொருளின் பிம்பம் சரியாக விழித்திரையில் விழுந்துகொண்டு இருக்கும். இதனால் பார்வையும் சரியான முறையில் ஏற்படும். இல்லையென்றால் பொருளின் பிம்பம் சரியாகக் கிடைக்க கண் தன்னை சுருக்கி சரிசெய்ய முயலும்போது, அதில் பல வேறு பாதிப்புக்களும் ஏற்பட்டுவிடும்.

மிகவும் அதிக பாதிப்பு உள்ள கிட்டப்பார்வையாளர்களுக்கு கண்ணின் கருவிழிப்படலத்திலேயே ஒட்டிக்கொள்ளும் லென்ஸ் அணிந்து கொள்ளச் செய்யலாம்.

சிலருக்கு இதற்கான அறுவைச் சிகிச்சையும் செய்யப்படுகிறது. (கருவிழி - வெண் விழிப் படலம் இணையுமிடத்தில் செய்யப்படுகிறது.)

கருவிழிப்படலம் துருத்திக்கொண்டு இருப்பவர்களுக்கு அதனை சரி செய்யவும் அறுவை சிகிச்சை உண்டு.

**கிட்டப் பார்வை அதிகரிக்காமலிருக்க என்ன செய்ய வேண்டும்?**

தங்கள் குழந்தைகளுக்கு கண்ணாடி போட்டுவிட்டாலே பெரியவர்கள் கவலைப்படத் தொடங்கிவிடுவார்கள். பிற்காலத்தில் இதனால் ஏதாவது பெரிய தொந்தரவுகள் ஏற்பட்டுவிடுமோ? என்று ரொம்பவும் யோசிப்பார்கள்.

கிட்டப்பார்வை தொடர்ந்து அதிகரிக்காமல் இருக்க என்ன செய்யலாமென யோசிப்பார்கள். அவர்களுக்கு சில யோசனை.

1. இவர்கள் தங்களது குழி லென்ஸ் கண்ணாடியை தொடர்ந்து பயன்படுத்தி வர வேண்டும்.
2. இவர்களது பொதுவான உடல் நலத்தை முறையாக கவனித்துக்கொள்ள வேண்டும்.
3. கண்களுக்கு மிக அருகாமையிலான வேலைகளைத் தவிர்த்து விட வேண்டும். (ஊசிக்கு நூல் கோர்த்து துணி தைத்தல் போன்றவற்றை)
4. நல்ல போதுமான வெளிச்சம் நிறைந்த அறையில், விளக்கு ஒளி நேரடியாக கண்களில் விழாதபடி படிக்க வேண்டும்.

**- Dr. J. ஞானசெல்வன் (ஹெல்த்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குமாரி இரஞ்சிதம் (நாவல்)

**க. சிவகுருநாதன் (கசின்)**

விலை : ரூபா 100
பக்கங்கள் : 80

"ஈழகேசரி" பத்திரிகை உருவாக்கிய மூத்த தலைமுறை எழுத்தாளர்களில் ஒருவரான க.சிவகுருநாதன் (கசின்) அவர்களால் அப் பத்திரிகையில் 1952ல் எழுதப்பட்ட இந்நாவல் 42 ஆண்டுகளுக்குப் பின்னர் கல்கின்ன தமிழ் மன்றத்தின் முயற்சியால் நூலுருவில் அழகுற வெளிவந்துள்ளது.

சிறுகதை, நாவல், கட்டுரை என மூன்று துறைகளிலும் முத்திரை பதித்துள்ள கசின் அவர்களின் படைப்புகள் இவ்வளவு காலமும் நூலுருப் பெறாது போனமை தமிழ் வாசகர்களின் துரதிர்ஷ்டம் என்பதை இந்நாவலை வாசிக்கும் அனைவரும் உணர்வர்.

42 ஆண்டுகளுக்கு முன் எழுதிய நாவல் என்றபோதிலும் இதன் நகைச்சுவை அம்சமும், நல்ல தமிழும், மண் வாசனையும் எம்மை நாவலினுள் ஆழ்த்திவிடுகின்றது. அன்றைய சமூகத்தில் நிலவிய சில போக்குகளை, மக்களின் தன்மைகளை தனது கற்பனைத் திறன் என்ற கைவண்ணத்தில் நகைச்சுவை ததும்ப சீராக வடிவமைத்துள்ளார் ஆசிரியர்.

இத்தகைய மூத்த எழுத்தாளர்களின் படைப்புகள் அனைத்தையும் கருத்து வேறுபாட்டை நோக்காது நூலுருவில் வெளிக்கொணர்வது இன்றைய காலத்தின் கட்டாய தேவையாகியுள்ளது. இத்தகைய எழுத்துக்களே எமது முன்னோர்களின் அன்றைய வாழ்வையும் சிந்தனைப் போக்குகளையும் இன்றைய தலைமுறையினருக்கு படம்பிடித்துக் காட்ட வல்லவையுமாகும்.

இதற்காக அனைத்து தமிழ் எழுத்தாளப் பிரிவினரும் கூட்டாகவும் திட்டமிட்ட அடிப்படையிலும் செயல்படுவதற்கு அமைப்பொன்றை நிறுவினால் பயனாக அமையும்.

**வெளியீடு: தமிழ் மன்றம்,**
**கல்ஹின்ன, கண்டி.**



## வெளிக்குள் வெளி

**கல்லூரன்**

விலை : ரூபா 75
பக்கங்கள் : 62

"வெளிக்குள் வெளி" கவிதைத்தொகுதி, கிழக்கிலங்கையின் பிரபல கவிஞர்களில் ஒருவரான கல்லூரனின் கவிதைகளைக் கொண்டது. இதில், அவரது 29 தமிழ்க் கவிதைகளும் 5 ஆங்கிலக் கவிதைகளும் இடம் பெற்றுள்ளன.

கவிஞரும் ஆய்வாளருமான திரு. சண்முக சிவலிங்கம் இக் கவிதைத் தொகுதிக்கு வழங்கியுள்ள நீண்ட முன்னுரையில் சிறப்புறக் குறிப்பிட்டவாறு, கல்லூரனின் கவிதைகள் இரண்டு விதமான முறையில் சிருஷ்டிக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. ஒன்று, "பொதுவான அனுபவ மீட்டல்" மற்றது "வாசிப்பில் இருந்து பெறும் சிந்தனைப் பொறிகளின் தீ மூட்டல்" ஈழத்தின் இலக்கிய சிருஷ்டிகர்த்தாக்கள் எல்லோரினதும் படைப்புகளில், இவ்விரு போக்குகளும் பொதுவாகக் காணக் கிடைப்பினும், கல்லூரனின் கவிதைகளில் மிகவும் உணர்வு பூர்வமாக இவை விரவிக்கிடப்பதை உணர முடிகின்றது.

கல்லூரனே நூலில் தனது கவிதைகள் பற்றிய சுய வெளிப்படுத்தலில் கடந்துவந்த பாதையின் அனுபவத்தையும், தற்போது பயணிக்கும் வழியின் தன்மையையும் இரத்தினச் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளது கவிஞனின் அப்பழுக்கற்ற தன்மையை காட்டுகிறது.

**வெளியீடு: VIEW - HÚM**
**27A, SINGAR SHOP**
**BATTICALOA ROAD**
**KALMUNAI.**

**நூலாய்வு : மாணிக்கவாசகன்**

மா நகர சபை
யாழ்ப்பாணம்



# 'தன்னுடன் தானே மோதும்' தலைவரின் மாவீரர்தின உரை!



☞ சமாதானப் பேச்சுக்களுக்கு நாம் நிபந்தனை எதையும் விதிக்கவில்லை.

☜ பேச்சுவார்த்தைக்கு உகந்ததான நல்லெண்ண புறநிலையும் இயல்பு நிலையும் உருவாக்கப்பட வேண்டும்.

☞ இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காண்பதற்கு எமது இயக்கம் தயாராக இருக்கின்றது.

☜ தமிழ் மக்களையும் விடுதலைப் புலிகளையும் பொறுத்தவரையில் சந்திரிகா ஒரு சமாதானப்பிரியர் அல்ல.

☞ தேசிய இனப்பிரச்சினையை சமாதான வழியில் தீர்க்க வேண்டுமென உலக நாடுகள் விரும்புகின்றன.

☜ உலக நாடுகளில் இருந்து பெறப்படும் நிதி உதவியையும் ஆயுத உதவியையும் ஆதாரமாகக் கொண்டே சிங்கள அரசு தமிழர்களுக்கு எதிரான இந்தப் போரை நடத்தி வருகின்றது. 1995ல் 5இலட்சம் தமிழ் மக்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறும்போது அக்கறைப்படாத சர்வதேச சமூகம், 30,000 சிங்கள் இராணுவம் எம்மால் சுற்றிவளைக்கப்பட்டபோது சந்திரிகாவின் பின்னால் முழு உலகமுமாக அணி வகுத்து நின்றது.

☞ யாழ்ப்பாணம் யாழ்ப்பாண மக்களுக்கே உரித்தானது.

☜ எத்தனை சவால்கள் இடையூறுகள் வந்தாலும், எத்தகைய சக்திகள் எதிர்த்தாலும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியே தீருவோம்.

☞ இனப்பிரச்சினைக்கு தனது பெற்றோரின் பங்களிப்பை மறைத்து, அந்நிய காலனித்துவத்தின் மீது சந்திரிகா பழியைச் சுமத்திவிடுகிறார்.

☜ சந்திரிகா, கடந்த 50 வருட காலமாக தமிழருக்கு அநீதி இழைக்கப்பட்டு வருவதை ஒத்துக் கொள்கிறார். அந்நிய காலனித்துவ தலையீடு காரணமாக தமிழீழ மக்கள் தமது வரலாற்றுத் தாயகம் மீதான இறையாண்மையை இழந்தார்கள் என்பது வரலாற்று உண்மை.

☞ எமது மக்கள் விரும்புவதெல்லாம், தமது சொந்த மண்ணில் நிம்மதியாக வாழவேண்டும் என்பதுதான்.

☜ பெருமாளுக்கு முதலமைச்சராக முடிசூட்டி இந்தியா தவறிழைத்தது போல, தமிழ் விரோத குழு ஒன்றை வடகிழக்கில் ஆட்சியதிகாரத்தில் அமர்த்தி சந்திரிகா தவறிழைக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினகரன்


தினகரன் THINAKARAN

உங்கள் தினகரன் பல்வேறு பயன்மிக்க அம்சங்களைத்
தாங்கி வெளிவருகின்றது.
அதிகளவு செய்திகள், சமகால விடயதானங்கள்,
அர்த்தபுஷ்டியான கட்டுரைகள்...
தமிழ் பேசும் மக்களின் தேசியக் குரலான தினகரன்
வாசகர்களுக்கு புதிய தரிசனங்களைத் தருவதில்
தொடர்ந்து முன்னணியில் நிற்கின்றது.
வாசிப்புக் கலாசாரத்தை வளர்த்தெடுப்போம்.
நிறைவுபெற்ற மனிதர்களாய் வாழ்ந்திடுவோம்.
தினகரன் நாளிதழ் எதிர்கால நல்லுறவைச் செப்பனிடும்
சிற்பிகளான சிறார்களின்
கல்வி வளர்ச்சியை மேம்படுத்துகின்றது.
க. பொ. த. சாதாரண தர மற்றும் உயர்தர வகுப்பு
மாணவர்களுக்கான
பாடங்களும் பரீட்சை வழிகாட்டிகளும்
புலமை சார்ந்த ஆசிரியர்களினால் தயாரிக்கப்பட்டு
வழங்கப்படுகின்றது.
உலக நிகழ்வுகளை இனிய தமிழில் உடனுக்குடன்
வாசகர்களுக்கு வழங்குகின்றது.
சகல சமயத்தினரினதும் ஆன்மீக உணர்வினை
ஊட்டி வளர்க்கின்றது.
அறிவுக்கு விருந்தளிக்கும் உன்னத கட்டுரைகள்
அகக்கண்களைத் திறக்கச் செய்கின்றன.
சகல லேக் ஹவுஸ் முகவர்களிடமும்,
புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுது



## சந்தா விபரம்

### உள்நாட்டு சந்தா (ரூபாவில்)

| | 1வருடம் | 6மாதம் | 3மாதம் |
|---|---|---|---|
| நேரடி விநியோகம் கொழும்பு நகருக்குள்) | 360.00 | 180.00 | 90.00 |
| தபால்மூல விநியோகம் | 552.00 | 276.00 | 138.00 |

### வெளிநாட்டு சந்தா (அமெரிக்க டாலரில்)

| நாடு | | 1வருடம் | 6மாதம் | 3மாதம் |
|---|---|---|---|---|
| இந்தியா | $ | 10.00 | 5.00 | 3.00 |
| பாகிஸ்தான் | $ | 10.00 | 5.00 | 3.00 |
| மாலைதீவு | $ | 10.00 | 5.00 | 3.00 |
| சிங்கப்பூர் | $ | 12.00 | 6.00 | 3.00 |
| மத்திய கிழக்கு | $ | 12.00 | 6.00 | 3.00 |
| ஹொங்கொங் | $ | 12.00 | 6.00 | 3.00 |
| இங்கிலாந்து | $ | 13.50 | 7.00 | 3.50 |
| அவுஸ்ரேலியா | $ | 13.50 | 7.00 | 3.50 |
| ரஷ்யா | $ | 13.50 | 7.00 | 3.50 |
| அமெரிக்கா | $ | 16.50 | 8.25 | 4.25 |
| கனடா | $ | 16.50 | 8.25 | 4.25 |
| மேற்கிந்தியா | $ | 16.50 | 8.25 | 4.25 |

**காசோலைகள், அனுப்பப்படவேண்டிய பெயர்:**
The Associated Newspapers of Ceylon Ltd.

**முகவரி:**

Marketing Manager,
The Associated Newspapers of Ceylon Ltd,
P.o. Box 1198,
Lake House,
Colombo, Sri Lanka.